

கல்கி

KALKI 23.2.92 ரூ. 3.00
பொன்விழா ஆண்டு

நடுத்தர மக்களையும் கவரும் கலைப்பொருள்கள்

"பேண்ட்டி லைனரா? எதுக்கு?"

"ஏன் கூடாது! பேண்ட்டியில் கறை படுவதை நீ விரும்புவாயா?"



"ஃப்ரெஷ்டேஸ் பேண்ட்டி லைனர் என் பேண்ட்டியை புத்தம்புதிதாக வைக்கிறது. முன்பெல்லாம் வெள்ளை பட்டு என் பேண்ட்டி ரொம்ப அழுக்கா இருக்கும். சில சமயம் வெளியூருக்கு போனாலோ, மற்றவர் வீட்டில் தங்கும்போதோ இம்மாதிரி கறை படிந்த பேண்ட்டிகளை, உலர்த்தும்போது எத்தனை தர்ம சங்கடம் தெரியுமோ".

"எப்போதாவதுன்னா சரி... தினமும்மா?"

"ஏன் கூடாது? அந்த அசௌகரியமான உணர்வு எத்தனை பிரச்சினையாய் இருந்தது தெரியுமா? இப்ப எனக்கு புது தன்னம்பிக்கை கிடைச்சிருக்கு."

"பேண்ட்டி லைனர் சௌகரியமா இருக்கா?"

"நிச்சயமா. உண்மையில் அதை அணிந்திருக்கும் உணர்வே தெரியாது. அத்தனை சின்னதா, மெல்லிசா இருக்கும். ஒரு லைனிங் மாதிரிதான்!"

"அடடே! டியோடரண்ட் பற்றி சொல்லவே இல்லையே."

"நீ சொன்னதிலும் விஷயம் இருக்கு. வாங்கிப் பார்க்கிறேன்"




ஃப்ரெஷ்டேஸ் பேண்ட்டி லைனர்... எப்போதும் புத்தம்புதிய பேண்ட்டி அணிந்திருக்கும் உணர்வு.
வேலை செய்யும் போது, பயணத்தின் போது, உடற்பயிற்சியின் போது_கர்ப்பமாக இருக்கும் போதும்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

Freshdays is a TM of J&J, U.S.A.

everest/91/JJ/283 tm

புதிய மூர்மார்க்கெட் :



திறப்புவிழா முடிந்தது! லஞ்சவிழா தொடங்கியது?

சுமார் ஆறேமுக்கால் கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட புதிய மூர் மார்க்கெட் கட்டடத்தைக் கடந்த வருடம் நவம்பர் மாதம், ஏக தடபுடலோடு முதல் வர் ஜெயலலிதா திறந்து வைத்தார். ஆனால் கட்டடம் திறக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகியும், பழைய மூர்மார்க்கெட்டில் கடை வைத்திருந்தவர் களுக்குக் கடைகள் ஒதுக்கப்படவில்லை. 'என்ன பிரச்னை' என்பதைத் தெரிந்து கொள்ளச் சில கடைக்காரர்களை அணுகி னோம். பலர் பேசவே தயங்கினார்கள். பேசத் துணிந்த சிலரோ 'எங்கள் பெயர் எங்கேயும் வெளிவரக் கூடாது, என்ற நிபந்தனையோடு பேசினார்கள். விஷயம் இதுதான் :

பழைய மூர்மார்க்கெட் எரிந்து போன வுடன், அங்கே கடை வைத்திருந்தவர்கள் அப்போதைய முதல்வர் எம். ஜி. ஆரைச் சந்தித்தார்கள். அவர் ''நீங்கள் கவலைப் பட வேண்டாம். பக்கத்திலேயே புதிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் கட்டி, அதில் உங்க ளுக்கு இடம் கொடுக்கிறோம்'' என்று உறுதி அளித்தார். அதன்படி பக்கத்திலேயே மூர்மார்க்கெட் மாடலில் புதிய கடைகளுக் கான கட்டடம் கட்டப்பட்டது. ஜெய லலிதா திறந்து வைக்கும்போதே, கடை களுக்கான சாவியைக் கொடுப்பார் என்று எதிர்பார்த்தார்கள் கடைக்காரர்கள். ஆனால் ஏமாற்றம்தான்.

அதன் பின்னர், கார்ப்பரேஷன், கோட்டை, மந்திரி வீடுகள் என்று சுற்றி வந்து கொண்டிருக்கிறார்கள் கடைக்காரர் கள். ஒன்றும் நடந்தபாடில்லை. கடைக் காரர்களுக்கும் உபயோகம் இல்லாமல், அரசுக்கும் உபயோகமில்லாமல் கட்டடம் தூசி படிந்து கொண்டிருக்கிறது.

''அந்த வயிற்றெரிச்சலை ஏன் ஸார் கேட்கறீங்க! நாங்க ஏற்கெனவே தீ விபத் தில் பாதிக்கப்பட்டு நொடிஞ்சு போன வங்க. ஆனா, இந்த அரசாங்கத்தில் சில மந்திரிகள் என்ன சொல்கிறார்கள் தெரி யுமா? 'நல்லா பக்காவா கடைகள் கட்டி உங்களுக்கு அட்வான்ஸ் எதுவும் இல்லா மல் அரசு கொடுக்க இருக்கிறது. அப்படி யிருக்க, நீங்கள் கடைக்கு' 2000 ரூபாய் வசூல்(?) செய்து கொடுத்தால்தான் கடை களை உங்களுக்குச் சீக்கிரம் கொடுக்க ஏற்பாடு செய்வோம்'' என்கிறார்கள். பழைய மார்க்கெட்டில் பாதிக்கப்பட்ட 857 கடைக்காரர்களுக்கும் புதிய கடைகள் உண்டு, என்றாலும் நாங்கள் கிட்டத்தட்ட 17 லட்சம் வசூல் செய்து மந்திரிகளுக்குக் கப்பம் கட்டினால்தான், கடைகள் எங்கள் பெயருக்கு வரும். இதுவரை பதின்மூன்று லட்சம் வசூல் செய்து, சம்பந்தப்பட்ட

வர்களிடம் கொடுத்து இருக்கிறோம். மீதியை வசூல் செய்து கொண்டே இருக்கிறோம்'' என்ற குண்டைத் தூக்கிப் போட்டார் ஒரு கடைக்காரர்.

மாநகராட்சி என்ன சொல்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள, பொது மக்கள் தொடர்பு அதிகாரியான பாலுவைத் தொடர்பு கொண்டோம்.

''கடைகளை மாத வாடகைக்கு விடலாமா அல்லது குத்தகைக்கு விடலாமா என்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது; அதுதான் தாமதத்திற்குக் காரணம். ஆனால் பழைய மூர்மார்க்கெட்டில் கடை வைத்துப் பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் கண்டிப்பாகக் கடைகள் வழங்கப்படும்'' என்றார் அவர்.

இதற்கிடையில் கடைக்காரர்களிடையே பலவிதமான வதந்திகள் பரவி வருகின்றன. பழைய மூர்மார்க்கெட்டில் வராந்தாக்களில் கடை வைத்திருந்தவர்களுக்குப் புதிய மார்க்கெட்டில் இடம் கிடையாது என்றும், அவர்களையும் கணக்கில் சேர்த்துக் கட்டப்பட்ட கடைகளை, அ. தி. மு. க. காரர்களுக்கு ஒதுக்கப் போகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இந்தக் குழப்பத்தில் கடைக்காரர்கள் சங்கம் மூன்றாகப் பிரிந்து போயிருக்கிறது.

பழைய மூர்மார்க்கெட்டில் கடை வைத்திருந்தவர்கள் யாரும் பெரிய வியாபாரிகள் இல்லை. எல்லோரும், நடுத்தர, சிறு வியாபாரிகள்தான். அவர்களிடம் எம்.ஜி.ஆர். கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றும் தார்மீகக் கடமை, ஜெ. அரசுக்கு உண்டு. சில கடைக்காரர்கள் முறையிடுவது போல் லஞ்ச லாவண்ய விளையாட்டு இருப்பது உண்மையானால் அதற்கு முற்றுப்புள்ளி வைத்து, விரைவில் கடைக்காரர்களிடம் கடைகளை அரசு ஒப்படைக்க வேண்டும்.

- ப்ரியன்

படம் : ராஜன்

சொன்னது சொன்னபடி

● நீங்கள்தான் திருடர்கள் கூட்டம்! எங்களிடமா கணக்குக் கேட்கிறீர்கள்? நீங்கள் வசூலித்த பணம் எங்கே?

- திண்டிவனம் ராமமூர்த்திக்கு தண்டாயுதபாணி கேள்வி

● வர்மா கமிஷனிடம் இ. காங்கிரஸ் பிரமுகர் குமுதவல்லி தாக்கல் செய்துள்ள மனு, காங்கிரஸார் முகமூடியைக் கிழித்து எறியும்.

- ஆலடி அருணா

● எல்லை தாண்டி காஷ்மீருக்குள் நுழைய முயன்ற ஜே.கே.எல்.எஃப். அணியினரை இந்த முறை தடுத்து நிறுத்தி விட்டேன். ஒவ்வொரு முறையும் தடுத்துக் கொண்டிருக்க முடியாது!

- நவாஸ் ஷரீப்



● பங்காரப்பாவுடன் பேச்சுவார்த்தைக்கு இடமேயில்லை என்று நான் கூறியதாக முன்பு நாளிதழ்களில் வந்த செய்தி தவறானது.

- ஜெயலலிதா

● துப்பாக்கி கலாசாரத்தைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்திய பெருமை ஜெயலலிதாவையே சாரும். கறுப்பு, வெள்ளை, மஞ்சள் என்று இருக்கிற கலர்களில் எல்லாம் தன் பாதுகாப்புக்குப் பூனைப் படையை அறிமுகப்படுத்திய பெருமையும் ஜெயலலிதாவைத்தான் சேரும்.

- டாக்டர் ராமதாஸ்.

● தமிழ்நாடு இ. காங்கிரஸ் கட்சி, ஸ்தாபன தேர்தலைத் தனது விருப்பப்படி போலி உறுப்பினர்களை வைத்துக் கொண்டு நடத்துவதை எந்தக் காலத்திலும் அனுமதிக்க மாட்டோம்.

- திண்டிவனம் ராமமூர்த்தி, எம்.பி.

● கடந்த 12 நாட்களாகச் சென்னை ஓட்டல்களில் சாப்பிட்டு, என் எடை 4 கிலோ குறைந்துவிட்டது.

- அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் சின்னசாமி.

அரிசி அரசியல்!

சார்மினார் சானல் :

● அரிசி விலை உயர்வும் தட்டுப்பாடும் பல ஆட்சிகளைக் கவிழ்த்திருக்கின்றன. ஜனார்த்தனன் ரெட்டி அரசாங்கம் ஜனதா அரிசியைக் கிலோ ரூ. 1.90 லிருந்து ரூ. 3.50 க்கு ஏற்றி விட்டது. ''ராஜினாமா செய்துவிட்டு மக்களின் தீர்ப்பைக் கோருங்கள்'' என்கிறார் என்.டி. ஆர். என்.டி.ஆர், சென்னா ரெட்டி ஆட்சிக் காலங்களில் கிலோ இரண்டு ரூபாய்க்குக் கொடுத்தனர். ''இந்தா கூடுதல் சலுகை'' என்று ஒரு வருடமாய் ஜனார்த்தனன் ரெட்டி ரூ. 1.90 க்குத் தந்தார். இப்போது தாக்குப் பிடிக்க முடியாமல் ரூ. 3.50 ஆக்கிவிட்டார். எதிர்க்கட்சிகளின் கண்டனம்; போராட்டங்கள்! என். டி. ஆர்., ''நான் ஆட்சிக்கு வந்தால், இரண்டு ரூபாய்க்கே தருவேன்'' என்கிறார். ஜனார்த்தனன் ரெட்டி, ''அவருடைய தாத்தா வந்தாலும் முடியாது'' என்றார், பத்திரிகையாளர் கூட்டமொன்றில்.



☛ ரெண்டு ரூபாய்க்கே தருவேன்!



☛ தாத்தா வந்தாலும் முடியாது!

ஆங்கிலம் கற்ற ஜமேதார்!

● வாஷிங்டனுக்கு இந்தியத் தூதராக இருந்த அபிட்ஹுசேன் விசாகப் பட்டினத்தில் கலெக்டராக இருந்தவர். அப்போது அவருடன் இருந்த ஜமேதாருக்கு தெலுங்கைத் தவிர வேறு எந்த மொழியும் தெரியாது. அபிட்ஹுசேனுக்கு ஆங்கிலமே துணை. எனவே, இருவரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். ஜமேதார் தெலுங்கில்தான் பேச வேண்டும். அபிட்ஹுசேன் ஆங்கிலத்தில் மட்டுமே. இருவரும் புரிந்து கொள்ள வேண்டும். திரும்பப் பேச வேண்டும். பரஸ்பரம் ஒவ்வொருவர் மொழியைக் கற்றுக் கொள்ளச் சிறந்த வழி இது என்று நினைத்தார்கள். அபிட்ஹுசேன் ஐந்து வருடங்களுக்குப் பின் மாற்றலான போது, ஜமேதார் நல்ல ஆங்கிலம் பேசக் கற்றுக் கொண்டு விட்டார். அபிட்ஹுசேன் தெலுங்கு வார்த்தைகள் பலவற்றைத் தனித்தனியே சொல்ல மட்டுமே கற்றுக் கொண்டிருந்தாராம். வியந்த அபிட்ஹுசேன், ஜமேதாரை மிகவும் பாராட்டினாராம்.

டெலிபோன் ஜோஸ்யம்!

● ஜோஸ்யம் பலவகை. டெலிபோன் ஜோசியம் புதுவகை. பெயரும், பிறந்த தேதியும் போனில் சொல்லி விட்டால், அடுத்த நிமிஷமே வரப்போகும் மனைவியின் குணம், செல்வம், அடையப் போகும் பதவிகள் எல்லாமே சொல்லப்படும். அதுவும் இரவு பதினொரு மணிக்குப் பின்தான் போன் செய்ய வேண்டும் அந்த நெம்பருக்கு. ஜோஸ்யம் சொல்வது ஆவி என்று பரப்பப்பட்டதால், பரபரப்பானது நகரம். பத்திரிகைகள் அந்த போன் நெம்பரைப் பிரசுரித்தன. ஏகப்பட்ட மனிதர்கள் இரவுகளில் காத்திருந்தார்கள். டெலிபோன் டிபார்ட்மெண்ட்காரர்கள் கடைசியில் அந்த நெம்பரைத் துண்டித்தார்கள். ஆவியா அது? இல்லை, விளம்பரப் பிரியரான ஒரு ரியல் எஸ்டேட்காரரின் நெம்பர்!

பிரதமர் குடும்பம்!

● பிரதமர் நரசிம்மராவின் குடும்பத்திற்குப் பலத்த பாதுகாப்பு. அவர் மகன் பி.வி.என். ரங்காராவ், ஜனார்த்தனன் ரெட்டி அமைச்சரவையில் உள்ளார். அவர், தம் குடும்பத்தைக் கலைக் குடும்பம் என்று சொன்னார் சமீபத்தில்.

தந்தை - பல மொழிகளை அறிந்தவர்; எழுத்தாளரும் கூட.

சகோதரர் - ராஜேஸ்வரராவ் - நல்ல பாடகர். இவரின் சில பாடல்கள் இளைய ராஜாவின் இசையமைப்பில் சங்ராந்தி நாளன்று டி.வியில் ஒளிபரப்பாயின.

சகோதரி - ஓவியர். இவருடைய பல ஓவியங்கள் சமீபத்தில் இங்கு கண்காட்சியாக வைக்கப்பட்டன.

தம்மை நல்ல பேச்சாளர் என்று ரங்காராவே சொல்லிக் கொண்டார்.

- அப்பன்

முகத்தின் அழகு மூக்குக் கண்ணாடியில் தெரியும்!

'கண்ணாடி போட்டுக் கொண்ட பெண் வேண்டாம் என்று மறுக்கும் பிள்ளைகள் உண்டு. ஆனால் இதே பிள்ளைகள் கல்யாணத்துக்கு அப்புறம் கடை கடையாகப் பெண்டாட்டியை அழைத்துக் கொண்டு போய், 'இந்தக் கண்ணாடியை விட அந்தக் கண்ணாடி நல்லா இருக்கு....' என்று விழுந்து விழுந்து ஃப்ரேம் தேர்ந்தெடுக்கிற கதை வழக்கமானதுதான்.



படம் : யோகா

முகத்துக்குப் பொருத்தமாக அமைய வேண்டும் என்று, வகை வகையான ஃப்ரேம்களைப் போட்டுப் போட்டுப் பார்த்துவிட்டு, ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்துவிட்டு, கடையில் இருந்து இறங்கி வரும்போதே, 'நாம் எடுத்துக் கொடுத்த ஃப்ரேம் சரியாக இருக்குமா, இல்லை திரும்பப் போய் மாற்றலாமா?' என்று தவிப்பவர்களும் உண்டு.

''அழகுபடுத்தும் நோக்கத்துக்காக மட்டுமே தேர்ந்தெடுப்பதானால் வாடிக்கையாளரின் விருப்பத்துக்கே விட்டு விடலாம். ஆனால் தூரப் பார்வை, கிட்டப் பார்வைக்கான பவர் கிளாஸ் விஷயத்தில், எங்கள் பொறுப்புத்தான் அதிகம். ஏனென்றால் 'ப்யூபிலரி டிஸ்டன்ஸ்' கணக்கிட்டு, அதற்குப் பொருத்தமான, ஃப்ரேம்களைக் கொடுத்தாக வேண்டும்!'' என்கிறார் பிலிப். ''இவ்விஷயத்தில் எங்கள் ஆலோசனையை ஏற்காது போனால் ப்யூபிலரி டிஸ்டன்ஸ் கணக்கில் குளறுபடி உண்டாகி, இரட்டை இரட்டையாகத் தெரியும். மேலும் கீழுமாகப் பிம்பம் தெரியும். அபூர்வமாகச் சிலருக்குத் தலைசுற்றல் கூட வந்துவிடும்!''

சரி, எந்த மாதிரி முகத்துக்கு எந்த வகை ஃப்ரேம் பொருத்தமாக இருக்கும்? விவரங்கள் தருகிறார் அலிஸ்டர் :

உருண்டை முகம் என்றால், ரொம்பச் சதுர வடிவமாய் இல்லாமல், சற்றே ஓவல் வடிவத்தில் இருக்கலாம். நீண்ட சதுர வடிவமும் ஓகே.

அகன்ற முகம் என்றால்? நிச்சயமாய்ச் சதுர வடிவம்தான்.

நீண்ட முகத்துக்கு, ஓவல் ஷேப்; ரேபான் ஷேப் பொருத்தமாக இருக்கும். வட்ட வடிவ ஃப்ரேமும் தேர்வு செய்யலாம்.

ஒரு முக்கியமான விஷயம் : அதிக பவர் உள்ள கண்ணாடிகள், அதாவது ஹை-மைனஸ், ஹை ப்ளஸ் லென்சுகள் விஷயத்தில், கொஞ்சம் சிறிய வகை ஃப்ரேம்களைத் தேர்ந்தெடுப்பது நல்லது. ஏனென்றால் கண்ணாடியின் தடிமன் காரணமாகக் கனம் கூடுதலாய் இருக்கும். ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் மூக்கு தாங்கும். அப்புறம் வலி எடுக்க ஆரம்பித்து விடும். அது மட்டுமல்ல, வடு உண்டாகி விடும்!

கூலிங் கிளாஸ் போடுகிறதானால், பெரிய ஃப்ரேம்களைப் போட்டுக் கொள்ளுங்கள். கண்களை முழுதுமாக மறைத்துப் பாதுகாக்கும்; தும்பு தூசி விழாது.

'பை-ஃபோகல்' எனப்படும் பார்க்கிற- படிக்கிற கண்ணாடிகளுக்கு, நீண்ட சதுர ஃப்ரேம் பொருத்தமானது. இதற்குப் போய்ப் பிடிவாதமாக ரேபான் ஃப்ரேம் தான் போடுவேன் என்றால், படிக்கிற போது படாதபாடு படுத்திவிடும்!

ஒயின், கறுப்பு வண்ண ஃப்ரேம்கள் இப்போது 'அவுட் அஃப் ஃபாஷ'னாம். இப்போதைய இளைய தலைமுறை விரும்புவது 'டிரான்ஸ்பரன்ட்' வண்ணங்கள் - மெலிதான தங்க நிறம்.

மெட்டல் ஃப்ரேம்கள் பார்வைக்கு அழகாக இருக்கும். பெர்சனாலிடியைத் தூக்கிக் காண்பிக்கும். ஆனால் ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டும். ஏனென்றால் வண்ணம் போய்விடும், ஓரசாகிவிடும். எத்தனை விலையுயர்ந்த ஃப்ரேம் ஆனாலும், காரண்டி கிடையாது!

ஷெல் ஃப்ரேம்கள் எனப்படும் செலுலாய்ட் ஃப்ரேம்களை ரஷ்யாவுக்கு, மலேசியா - சிங்கப்பூர், தாய்லாந்துக்கு ஏற்றுமதி கூடச் செய்கிறோம். ஆனால், ஜெர்மனி, பிரான்ஸ், ஆஸ்த்ரியா, வியன்னா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து நாம் இறக்குமதியும் செய்கிறோம்.

சில ஃப்ரேம்களின் விலையைக் கேட்டால், தலை சுற்றும்! டன்ஹில், ரோடென்ட்ஸ்டாக், கெரைரா, கிறிஸ்டியன் டியர், சிலுவெட் வகைகள் எல்லாம் 2000 ரூபாய் முதல் 3500 ரூபாய் வரை ஆகிறது. அதிபயங்கர விலை - 7500 ரூபாயில் - கார்ட்டியர் ஃப்ரேம் இருக்கிறது. முழுதும் தங்க முலாம் பூசியது!

நமக்கெல்லாம் இருக்கவே இருக்கிறது - 100 ரூபாய் முதல் 500/600 ரூபாய் வரை! உள்நாட்டில் தயாராகிறவை.

காண்டாக்ட் லென்ஸ் வந்த பிறகு, ஃப்ரேம்கள் விற்பனை குறைந்திருக்குமோ?

''இல்லவே இல்லை, இரண்டுக்குமே டிமாண்ட் அதிகரித்துத்தான் வருகிறது'' என்கிறார் சியாம் சுந்தர். ''காரணம், 'காலா காலத்தில் மூக்குக்கண்ணாடி அணிய வேண்டும்; தேவைப்படும் போது தவிர்க்கக் கூடாது' என்ற சரியான சிந்தனை மக்களிடையே அதிகரித்து வருவதுதான்.''

– சித்தார்த்

(தகவல்கள் உதவி : லாரன்ஸ் அண்ட் மேயோ, சென்னை - 2)

யோசனை கூறிய வாசகர் :
அ. ஷண்முக சுந்தரம், சென்னை - 64.

அடுத்த இதழ்....

திருநெல்வேலி நகரச் சிறப்பிதழ்

●● மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம் கின்னஸில் இடம் பெறுமா?



●● தாமிரபரணியை அசுத்தமாக்கும் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்!

●● அடிக்கடி நடக்கும் கோஷ்டிச் சண்டைகள்!

●● ஸ்வரம் பாடும் மூன்று வயதுக் குழந்தை!

●● திருநெல்வேலி புறக்கணிக்கப்படுகிறதா?

●● 'என் ப்ரியமானவளே...' - அதிசயமான போஸ்டர் கலாசாரம்

●● திருநெல்வேலி அல்வா : சுவையின் ரகசியம்!

இன்னும்

நெல்லை மக்களின் அன்றாடப் பிரச்னைகள்...

●● கலெக்டர் பேட்டி





ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள், சென்னைக்கு வருகிறார் என்றால், ஆஸ்பத்திரி திறப்பு விழா, சில தொழிலகங்களுக்கு விஜயம் என்பதைத் தவிர, ஆன்மிக ரீதியில் முக்கியமான நிகழ்ச்சிகள் சில நிச்சயம் இருக்கும். இந்த முறையும் உண்டு. பாரதிய வித்யா பவனில் இந்து தர்ம அமைப்பின் ஆதரவில் நடந்த 'சங்கரரும் ஷண்மதமும்' என்ற கருத்தரங்குதான் அது.

காணபத்யம், கௌமாரம், சௌரம், வைஷ்ணவம், சைவம், சாக்தம் என்ற ஆறு வகை வழிபாடுகளைப் பற்றியும் விஷயமறிந்த அறிஞர்கள் பேசினார்களே, அவை அத்தனையும் தேன். அதை எல்லாம் தொகுத்து ஓர் உரையாக வழங்கினாரே டாக்டர் சுந்தரம், அது விருந்து! ஒவ்வொரு பேச்சாளரையும் முதலில் தேர்ந்தெடுக்கவே ஒரு தனிச் சாமர்த்தியம் வேண்டும்; அவர்களின் பேச்சில் உள்ள சாரத்தைப் பிழிந்து தருவது என்பதை ஒரு கலையாகவே படைத்தார் டாக்டர் சுந்தரம். நூலாக வெளி வந்தால் நல்லது.

ஆளுநர் பீஷ்மநாராயண் சிங்குக்கும், தலைமை உரை வாசித்த பி.வி. சிவன் நாயருக்கும் உரையை எழுதிக் கொடுத்தவர் ஒரே நபர்தானோ என்னவோ, கிட்டத்தட்ட இருவர் பேச்சுக்களும் ஒன்றாகவே இருந்தன! (இதில் 'அத்வைதா' என்ற சொல்லை உச்சரிக்கவே ஆளுநர் சற்றுத் தடுமாறினார், என்பது நமக்கு இன்னொரு சங்கடம்!)

மீனாட்சி சுந்தரம் பொறுப்பேற்று நடத்திய இந்த விழாவில் 'ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்' என்ற நூலை, பாண்டிச்சேரி பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் வேங்கட சுப்பிரமணியன் வெளியிட, பகவான் ஞானானந்த மிஷனின் தலைவர் ராஜமாணிக்க நாடார் பெற்றுக் கொண்டார். எழுதியவர்: பரணீதரன் என்று மட்டும் சொன்னால் போதும். பெரியவரை முதல் முதலாகச் சந்தித்த நிகழ்ச்சி முதல், பல நிகழ்ச்சிகளை, பல உரையாடல்களை, கட்டுரைகளாக 'பரணீதரன்' விகடனில் எழுதியதன் தொகுப்புத்தான் அது.

சுந்தர் குமாரின் சொற்பொழிவு காசெட் ஒன்றும், 'ஞானபூமி'யில் வெளி வந்த ஆன்மீகம் சம்பந்தமான பதில்களின் தொகுப்பு நூல் ஒன்றும் இந்த விழாவில் வெளியிடப்பட்டன.

ஷண்மதம் என்றால் என்ன என்ற கேள்விக்கு விடையளிப்பது போல் இருந்தது ஜெயேந்திரரின் பேச்சு. தெளிவான, அழுத்தமான உரை.

''ஒன்றே குலம்; ஒருவனே தேவன் என்ற வாக்கியத்தை ஏற்றுக் கொண்டால் மட்டும் போதாது. அந்தத் தேவன் யார், அவனை எப்படி அடைய வேண்டும் என்று தீர்மானமாகக் காண்பிப்பதற்குத்தான் சூரியன், கணபதி, முருகன் என்று ஒவ்வொரு வகைக் கடவுளை வழிபடும் முறைகளையும் ஆதி சங்கரர் அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்!'' என்று சுவாமிகள் சொன்னது விழாவின் முத்தாய்ப்பான உரை.

– நிருபர்


பணம் சேமிக்க புதிய வழி



இப்பொழுது :.பாரெக்ஸ் வாங்கும் போது ரூ.4/- சேமியுங்கள்.



பாலுடன் கூடிய ஃபாரெக்ஸ் ஸீரியல் 400 கிராம் ரீஃபில் பேக் வாங்கும் பொழுது ரூ. 4/- மிச்சமாகிறது. நான்கு மாதங்களிலிருந்து உங்களுடைய குழந்தைக்குப் பாலுடன் கூடிய ஃபாரெக்ஸ் ஸீரியலின் ருசிமிகு நற்பயன்களை வழங்கி, அவன் நன்கு வளர்வதைப் பார்த்து மகிழுங்கள்.



டின் பேக் விலையைவிட ரூ.4/- குறைவு

:.பாரெக்ஸ்

சுவையுடன் வளரும் வழி.

Gx.429.91 Tm

தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே கிடைக்கிறது

டாக்டர் பதில்கள் :

● அ. விஜயலட்சுமி, குரோம்பேட்டை.

கம்ப்யூட்டரில் ஒருவர் மிக அருகில் இருந்து வேலை செய்வதால், திரையி லிருந்து வரும் ஒளிக்கதிர்கள், கண்களைப் பாதிக்குமா?

●● டாக்டர் ரவீந்திரன், சென்னை - 4.

இதுவரை, விஞ்ஞானபூர்வமாக, கெடுதல் எதுவும் நிரூபிக்கப்படவில்லை. 33 செண்டிமீட்டர் தள்ளியிருந்து பார்ப்பது நல்லது. இதற்குக் குறைவான தூரத்திலிருந்து பார்த்தால் ஃபோகஸிங் அதிகமாக இருக்கும்; அதனால் ஸ்ட்ரெயின்தான் அதிகரிக்குமே தவிர, கம்ப்யூட்டர் திரையின் வெளிச்சத்தால் கெடுதல் எதுவும் கிடையாது.

● அ. ஜமால் மொய்தீன், மாதவரம்.

ஃபோகஸ் லைட், வாகனங்களின் முகப்பு விளக்கு, மற்றும் பிரகாசமான சூரிய ஒளி ஆகியவை கண்களைக் கூசச் செய்தாலும், சிறிது நேரமாவது பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதனால் கண்களுக்குப் பாதிப்பு உண்டா? பாதுகாக்க என்ன வழி?

●● காலை, மாலை எந்த நேரமாக இருந்தாலும் சரி, சூரிய ஒளியை நேரிடையாகப் பார்க்கவே கூடாது. பார்த்தால் கண்-நரம்புத் திரையில் (ரெடினாவில்) அதிக உணர்வுமிக்க பகுதியான 'மேக்குலா' பாதிக்கப்படும். இது பாதிக்கப்பட்டால் - சிகிச்சையே கிடையாது! சாதாரண வாகன விளக்கு ஒளியால் பாதிப்பு உண்டாகாது. ஆனால், ஹாலஜென் பல்பு விளக்கு வெளிச்சத்தால் 'மேக்குலா' பகுதி பாதிக்கப்படும் சாத்தியக்கூறு உண்டு. இப்படிப் பட்ட வாகனங்களின் விளக்கை நேரடியாகப் பார்க்காமல் தவிர்க்க வேண்டும். வாகனம் ஓட்டுபவரும், எதிரே வருபவரின் நன்மை கருதி, விளக்கை 'டிம்' செய்து ஓட்ட வேண்டும்.

● எஸ். ராஜகோபால், திருச்சி - 16.

க்ளகோமா எனும் கண் வியாதி எதனால் ஏற்படுகிறது? இதைப் பூரணமாகக் குணப்படுத்த முடியுமா? எப்படி?

●● கண்ணுக்குள் நீர் அழுத்தம் அதிகமாகி, அதனால் கண் பார்வை நரம்பு பாதிக்கப்பட்டு, பக்கப் பார்வை குறைந்து, பிறகு முற்றிய பருவத்தில் நேர்ப் பார்வையும் குறையும் நோய்தான் க்ளகோமா. பெற்றோரில் யாருக்காவது இருந்தாலோ, அவர்களின் உடன்பிறப்புக்களுக்கு இருந்தாலோ, க்ளகோமா நோய் வரும் சாத்தியம் அதிகம் உண்டு. நீரிழிவு நோய் இருப்பவருக்கு க்ளகோமா வரும் சாத்தியக்கூறு அதிகம். ஒரு சிலருக்கு, கண்புரை நோய் இருந்து, சரியான பருவத்தில் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளா விட்டால், க்ளகோமா வரும் வாய்ப்பு உண்டு. இதை ஹைப்பர் மெச்சூர் காடராக்ட் என்பார்கள். இதைப் பூரணமாக மருந்துகளால் கட்டுப்படுத்தலாம். முடியாதபட்சத்தில், லேசர் கதிர்களால் கட்டுப்படுத்தலாம். லேசரிலும் சரியாகாவிட்டால், அறுவைச் சிகிச்சை மூலம் கட்டுப்படுத்தலாம். க்ளகோமாவினால் கண் பார்வை நரம்பு பாதிக்கப்பட்டாலோ, பக்கப் பார்வை, அல்லது நேர்ப் பார்வைக் குறைவு ஏற்பட்டாலோ, சிகிச்சையினால் திரும்பக் கிடைக்காது. அதனால் தாமதிக்காமல் டாக்டரை அணுக வேண்டும்.

தொகுப்பு : எஸ். வி. என்.

கம்ப்யூட்டர் வெளிச்சம் கண்களைப் பாதிக்குமா?



நடுத்தர மக்களையும் கவரும் கலைப்பொருள்கள்



◆ விதவிதமான விநாயகர்கள்......

"இப்போதெல்லாம் ஃப்ளாட்டுகளுக்குப் பதிவு செய்கிறவர்களில் 90 சதவிகிதம் பேர் 25 முதல் 35 வயது வரையே உள்ள இளம் தலை முறையினர். டீவியில் வரும் தொடர்களும், விளம்பரங்களும் கவர்ச்சிகரமான வரவேற்பறைகளைக் காண்பிப்பதால், இவர்களும் அதே போல் தமது டிராயிங் ரூமை அமைக்க விரும்புகிறார்கள். அதனால்தான் அதிகம் விலை இல்லாத சிறிய சிறிய கலைப் பொருட்களை இப்போது மிடில் கிளாஸ் மக்களும் வாங்கிச் சேர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள்," என்கிறார் கோட்டூர்புரம் வாசியான சங்கர்.

சங்கர் சொல்லுவது உண்மை என்று, சமீபத்தில் மத்திய அரசின் கைவினைப் பொருட்கள் உற்பத்தித் துறையினர் ஆதரவுடன் நடந்த விற்பனை விழா ஒன்றில் அறிந்து கொள்ள முடிந்தது.

◆ ஷரன் அப்பாராய்



மரத்தில் வெகு நேர்த்தியாக, கோயில் தூண்களில் காணப்படுவது போன்று, செதுக்கியிருந்த விநாயகர் சிற்பம் ஒன்றை முந்நூறு ரூபாய் கொடுத்து ஒரு நடுத்தரக் குடும்பத் தம்பதி வாங்கிக் கொண்டனர். "வால் கிளாக்குக்குக் கீழே மாட்டலாம். ரொம்ப அழகாயிருக்கும்!" என்றாள் இளம் மனைவி. கணவர் மறுப்புச் சொல்லாமல் வாங்கியபோது, நமக்கு வியப்பாயிருக்கவில்லை. ஏனென்றால் அதே போல், பூ ஜாடி வைக்கிற மர ஸ்டூல், தினசரி இதழ்களை அடுக்கி வைக்க ஸ்டாண்ட், என்று எளிமையான டிராயிங் ரூம் பொருட்கள் சிலவற்றை, மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த பலரும் மனமுவந்து வாங்கிக் கொண்டு போனார்கள்.

இசைக் கலைஞர் சாருமதி ராமச்சந்திரன் சொன்னார் : "போன ஜூலையில்தான் நான் சரித்ரா ஆர்ட் காலரி ஆரம்பித்தேன். விற்பனை உற்சாகம் ஊட்டுவதாகத்தான் இருக்கிறது. திருப்பதியிலிருந்தும், நம் திருச்சி பக்கத்திலுள்ள அரும்பாவூர் பக்கத்திலிருந்தும் வரும் மரச்

சிற்பங்கள் 200 ரூபாய், 300 ரூபாய்க்குள் இருக்கின்றன. பழைமையும், பாரம்பரிய அழகும் அதில் இருப்பதால், இவற்றை நடுத்தரக் குடும்பத்தினர் வாங்குகிறார்கள். தஞ்சாவூர் ஓவியங்கள் என்றால் ஐயாயிரம் ஆறாயிரம் இருக்கும் என்று பயப்பட வேண்டாம். சிறிய அளவில், அதே அழகுடன் சிறிய பிரிண்ட் கிடைக்கிறது நூறு ரூபாயில். அதை வாங்கிக் கொள்ளுகிறார்கள்! ரவிவர்மா பெயிண்டிங்குகளின் பிரிண்ட்களும் இப்படிக் கிடைக்கின்றன. இவை தவிர, சிறிய சிறிய உலோகக்

▬ சித்ரா காலரி

போகா



கைவினைப் பொருட்களையும் டிராயிங் ரூமில் வைப்பதற்காக வாங்குகிறார்கள்.... கர்நாடக இசையை ரசிப்பதற்கு மத்திய தரக் குடும்பங்கள் பல இருப்பதைப் போல, இதற்கும் 'ரசிகர்கள்' இருக்கத்தான் செய்கிறார்கள்!''

'பூம்புகார்' விற்பனைக் கூடத்தின் மேலாளர் ஆதிநாதன், 'பேப்பர் மேஷ்' எனப்படும் காகிதக் கூழ் சிற்பங்களின் விற்பனை, முன்னைக்கு இப்போது அதிகரித்திருப்பதன் காரணம், மத்தியதரக் குடும்பங்களின் ஆதரவே என்கிறார்.

''முன்பெல்லாம் கல்யாணத்துக்குப் பரிசுப் பொருட்களாக பிளாஸ்டிக்கில் செய்தவற்றைக் கொடுத்து வந்தார்கள். இப்போது இருநூறு ரூபாய்க்குள், வரவேற்பறையில் வைக்கிற மாதிரி அழகான சிற்பம் கிடைக்கிற போது, இதைத்தான் அதிகமாக விரும்பி வாங்குகிறார்கள். தஞ்சாவூர்த் தட்டுகள் நூறு ரூபாய்க்குள்கூட இருக்கின்றன. நினைவுப் பரிசாக இவை கொடுக்கப்படும்போது, யாரும் உள்ளே வைத்துப் பூட்டுவதில்லை. சுவரை அலங்கரிக்கிற மாதிரி, மாட்டி விடுகிறார்கள்! பூங்கொத்து வைக்கிற 'வாஸ்' முப்பது ரூபாயிலிருந்து கிடைப்பதால், அதற்கும் நல்ல வரவேற்பு இருக்கிறது - வரவேற்பறைப் பொருளாக!

''கணேச சதுர்த்திக்கு முன்னால் நாங்கள் நடத்தும் 'கணேசா ஃபெஸ்டிவலில்' அமோக விற்பனை ஆகிறது என்றால், பாதிப் பங்கு மிடில் கிளாஸ் மக்களின் ஆதரவுதான். 20 ரூ, 25 ரூ பெறுமானமுள்ள மாக்கல் விநாயகர் தொடங்கி மரம், சந்தனம், 'பேப்பர் மேஷ்', பித்தளை இவற்றிலான விநாயகர் சிற்பங்கள் வரை 'சூப்பர் சேல்' ஆகிறது. அதே போல, மதுரை, நாச்சியார் கோயில், வாகைக்குளம், ஆயக்குடி ஆகிய இடங்களிலிருந்து வரும் விளக்கு வகைகள், கள்ளக்குறிச்சி, தம்மம்பட்டி, அரும்பாவூர்



▬ 'பூம்புகார்' விற்பனைக் கூடம்....

ஆகிய இடங்களிலிருந்து வரும் மரச் சிற்பங்கள் ஆகியவற்றுக்கும் மத்தியதரக் குடும்பங்களிடமிருந்து நல்ல வரவேற்புக் கிடைத்து வருகிறது!''

எட்டு ஆண்டுகளாகச் சென்னையில் ஆர்ட் காலரி (த காலரி என்ற பெயரில்) நடத்தி வரும் ஷரன் அப்பாராவ், மேல்

தட்டு மக்களின் வீடுகளில் காணப்படும் விலையுயர்ந்த டெர்ரகோட்டா சிலைகள் போலவே மத்தியதரக் குடும்பங்கள் சில வும் வரவேற்பறை மூ லை யி ல் இப் போது வைப்பதைச் சுட்டிக் காட்டினார். ''45 ரூபாய் விலையிலிருந்து 1000 ரூபாய் வரையில் இவை விற்பனை ஆகின்றன. 125 ரூபாய் விலையுள்ள டெர்ரகோட்டா குதி ரையை அதிகம் யோசனை செய்யாமல் மத்தியதர வகுப்பினரால் வாங்க முடிகிறது. அழகான கல்சட்டிகளை வாங்கிப் போய் அலங்காரமாக வைக்கிறார்கள்! இவையும் மிகவும் குறைந்த விலைதான். நண்பர் களுக்கு அன்பளிப்புக் கொடுப்பதற்கும், சவுகரியமாக இருக்கிறது. முன்பு உயர்-மத்தியதரக் குடும்பங்கள் மட்டுமே வாங்கி வந்த சிறிய மெட்டல் அழகுப் பொருட் களை, டீவி பாதிப்பினால் மத்தியதர மக்க ளும் வாங்க ஆரம்பித்திருக்கின்றனர்!'' என்கிறார்.

சரி, மத்தியதர வகுப்பினரின் டிராயிங் ரூம் ஒன்றை, அதிகச் செலவில்லாமல் அழகுபடுத்துவது எப்படி? சில 'டிப்ஸ்' கொடுத்தார் ஷரன் :

- மு த லி ல் 'கார்ப்பெட்டு'களை நினைத்தே பார்க்காதீர்கள். அவை தேவையில்லை என்பது மட்டுமல்ல, தூசி படிந்துவிடும். குறைந்த விலையில் அழகழகான பாய்கள் நிறையவே கிடைக்கின்றன. அவற்றை உபயோகி யுங்கள்.

- சுவர்களுக்கு மிதமான வண்ணங்களை உபயோகியுங்கள். அப்போதுதான் சிறிய அறைகூட, பெரிதாகத் தெரியும்.

- இயற்கையாகக் கிடைக்கும் பொருட் களையே அலங்காரமாக வையுங்கள். வண்ணமயமான பொ ரு ள ா க வையுங்கள்.

- சுவர்களை வெறுமனே விட்டு வைக் காதீர்கள்; அழகான, விலை குறைந்த, வண்ண பெயிண்டிங் ஒன்றை மாட்டி விடுங்கள்.

- கனமான சோபா செட்டுகள் தேவை யில்லை. நகர்த்திப் போடுவதும் சிரமம். பிரம்பு நாற்காலிகள் அழகா னவை. மாற்றிப் போடுவதும் எளிது.

- எல்லாக் கலைப் பொருட்களையும் ஒரே இடத்தில் கும்பலாக வைக்கா தீர்கள். சிறியதாக இருந்தாலும், அதற் கான தனி இடத்தில் வையுங்கள்.

- திரைச் சீலைகள் தேவையில்லை, அவை தூசி படியும் என்று கருதினால், கல்கல் தட்டிகள் கட்டலாம்.

ஓவியர் ஈசுவரன் வரையும் இயற்கை ஓவியங்கள் பல, மத்தியதரக் குடும்பங் களின் வசதிக்கு ஏற்பவே கிடைக்கின்றன. பேப்பரில் அச்சடித்த படங்களைக் காட்டி லும் இவை பளீரென்று இருப்பதோடு, கலை நயத்தோடும் இருப்பதால், இவற் றுக்கு வரவேற்பு இருக்கிறது போலும்.

கொசுறாக ஒரு தகவல் : காசு கொடுத்து வாங்கும் ஓவியங்களை நாம் அடிக்கடி மாற்ற முடியாது. அதனால் வாடகைக்கு வாங்கினால் வசதி. ஆமாம், மாதம் பத்து ரூபாய் வாடகை என்று ஒவ்வொரு மாத மும் வெவ்வேறு ஓவியங்களை வாட கைக்குத் தரும் நிறுவனங்களும் இப்போது தோன்ற ஆரம்பித்து விட்டதால், மாதா மாதம், புதிய ஓவியங்களை மாட்டலாம்!

- சாருகேசி

அட்டை வண்ணப்படம் :

'த காலரி'யில்


குமாரி அகிலா சங்கர் : யோகா

தரகர் : மாப்பிள்ளை எப்படி கேட்கறதுன்னு வெக்கப் படுறார்!

பெண்ணின் அப்பா : என்ன, பொண்ணுகிட்ட தனியாப் பேசணுமா?

தரகர் : அதெல்லாமில்லே, பஜ்ஜி இன்னொரு செட் வேணுமாம்!

- வெங்கட்





''எங்க சங்கத்துக்காக நன்கொடை கொடுத்திருக்கீங்க, சரி. செக்கில் கையெழுத்துப் போடலையே...?''

''தரும காரியங்களுக்கு என் பெயரை நானே எழுதித் தம்பட்டம் அடித்துக் கொள்வது எனக்குப் பிடிக்காது.''

- கே. எஸ். சுரேஷ்



“என் மனைவி– நிதி மந்திரியும் கூட!”

ஸ்ரீராம் சிட்ஸ் அளிக்கும் கட்டுரைப் போட்டி!

எப்படி நாட்டின் நிதிநிர்வாகத்திற்கு நிதிமந்திரி தேவையோ அதேபோல் உங்கள் குடும்பத்தின் வரவு செலவு, நிதி நிர்வாகம் உங்கள் மனைவியின் கையில். உங்கள் நிலையான வருமானத்தை எத்தனை ஆற்றலுடன் அவர் நிர்வகித்துச் செல்கிறார்!

வீட்டுச் செலவு தவிர, குழந்தைகள் மேற்படிப்பு, • பெண் திருமணம் • வீடுகட்டுதல், இதனிடையே நகைநட்டு வாங்குதல் என்பது போன்ற பல விஷயங்கள். இவற்றையெல்லாம் வங்கிமூலமாகவோ அல்லது **ஸ்ரீராம் சிட்ஸ் போன்ற நிறுவனங்கள் மூலமாகவோ** பணத்தைச் சேமித்து எத்தனை சாதுர்யமாக நிர்வகிக்கிறார். உங்கள் மனைவியின் நிதி நிர்வாகத் திறமை உங்களை வியப்பூட்டி இருக்கும்.

உங்கள் மனைவி மதியூக நிதிமந்திரியாகப் புரியும் சேமிப்பு சாதனைகளை வெளிப்படுத்த இதோ ஒரு அரிய வாய்ப்பு. அளிப்பது ஸ்ரீராம் சிட்ஸ். நீங்கள் உங்கள் மனைவியின் நிர்வாகத்திறனை வெளிப்படுத்தும் குறிப்பிடக்கூடிய சம்பவங்களைத் தமிழில் சுவையாக — இனியகட்டுரையாக — மலரும் நினைவுகளை எழுதி அனுப்புங்கள், பரிசுகள் பெறுங்கள்!


கட்டுரை தமிழ் வாரப்பத்திரிகையில் ஒரு பக்க அளவிற்குத்தான் இருக்க வேண்டும். அதை உறையிட்டு அதில் **“என் மனைவி — நிதிமந்திரியும் கூட”** என்று குறிப்பிட்டு —

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002. என்ற முகவரிக்கு அனுப்புங்கள். காலம் குறைவாக இருக்கிறது. உடனே செயல்படுங்கள்!

அனுப்பி வைக்க கடைசி தேதி: **மார்ச் 7, 1992.**

பரிசுகள் பல உண்டு!

1 முதல் பரிசு : வீடியோகான் “வாஷிங் மெஷின்” (டிரையர் இல்லாமல்)




2 இரண்டாம் பரிசுகள் : ஸிங்கர் “ஃபுட் ப்ராஸஸர்”



4 மூன்றாம் பரிசுகள் :



50 ஆறுதல் பரிசுகள்: ஸ்ரீபெட் கிஃப்ட் பேக்




கட்டுரைகள் ஸ்ரீராம் சிட்ஸ் நிறுவனம் அமைக்கும் நடுவர் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள் பத்திரிகைகளில் வெளியாகும். பரிசுபெறும் கட்டுரைகளைத் தவிர மற்ற கட்டுரைகள், தங்கள் விருப்பப்படி உபயோகித்துக்கொள்ள ஸ்ரீராம் சிட்ஸுக்கு முழு உரிமை உண்டு.

ஏற்கப்படாத கட்டுரைகளை திருப்பி அனுப்ப இயலாது. கடிதப் போக்குவரத்து கிடையாது. ஸ்ரீராம் சிட்ஸ் நிர்வாகத்தினரின் தீர்ப்பே முடிவானது.

நினைவுகள் மலரட்டும்! பரிசு உங்கள் மனைவிக்குத்தான்!



SHRIRAM GROUP COMPANIES MADRAS

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி.லிமிடெட்.
1, கிளப் ஹவுஸ் ரோடு,
சென்னை - 600 002.

ADWAVE/SCH/4365 A



'இந்தியத் தொழில் வளர்ச்சி காப்பியடிப்பதாக இல்லாமல், இந்தியச் சூழ்நிலைக்கேற்ப அமைய வேண்டும்' – சார்லஸ்.

பிரச்னை அலைகளில் காஷ்மீர் படகு!

ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணியினர் பெரும் எண்ணிக்கையில் எல்லையைக் கடந்து, காஷ்மீருக்குள் நுழையப் போட்டிருந்த திட்டம், பாக் துருப்புக்களாலேயே முறியடிக்கப் பட்டு விட்டது. அமானுல்லாகானின் இந்த எல்லை கடக்கும் திட்டத்தை பாக் துருப்புக்கள் தடுத்து நிறுத்தியிராவிடில் நமது துருப்புக்கள் அவர்களைத் தாக்க நேரிட்டிருக்கும். அது பாகிஸ்தானுடன் ஒரு யுத்தமாக மூண்டு விடவும் வாய்ப்பு உண்டு. யுத்தம் எனில் உயிர்ச்சேதம் பொருட்சேதம் ஒருபுறமிருக்க, இன்று இந்தியா உள்ள பொருளாதார நிலையில் ஒரு யுத்தச் செலவை எண்ணிப் பார்ப்பதே நடுக்கம் தருவதாகும். நல்லவேளை, அந்த அளவுக்குப் போகாமல் பாக் அதிபர் ராணுவத்தைப் பயன்படுத்தி, ஜே. கே. எல். எஃப். அணியினரைத் தடுத்துத் திருப்பி அனுப்பி விட்டார். என்றாலும் அவர்களில் பலர் ஒற்றையடிப் பாதைகளைப் பயன்படுத்திக் காஷ்மீருக்குள் நுழையும் குயுக்தி யையும் வைத்திருக்கிறார்கள். நமது எல்லைப்புறத் துருப்புக்கள் விழிப்புடன் இருந்து கஷ்டமான பணியில் வெற்றி காண வேண்டும்.

'ஏதோ, யுத்தம் என்று மூளாமல் இந்த மட்டோடு முடிந்ததே' என்று நாம் நிம்மதிப் பெருமூச்சு விடவோ, நமது ராஜதந்திரம் வெற்றி பெற்றதாகப் பெருமிதம் கொள்ளவோ முடியாது. உண்மையில் ராஜதந்திர ரீதியாக வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருப்பவர் பாக் அதிபரே. முதலில் அவர் ஜெனிவாவில் இந்தியப் பிரதமருடன் சமாதானம் பேசுவது போல் காட்டிக் கொண்டார். நாடு திரும்பிய கையோடு ஜே. கே. எல். எஃப் அறிவித்த பந்துக்கு ஆதரவு தெரிவித்ததுடன், அவர்களுடைய பேரணிகள் பலவற்றில் கலந்து கொண்டு உற்சாகமளித்தார். அவர்களின் எல்லை கடக்கும் திட்டத் துக்கும் தமது மறைமுக ஊக்கத்தைத் தந்தார். இதற்கிடையில் இந்தியா, உலக அபிப்பிராயத்தை உருவாக்கவும், வல்லரசுகள் பல பாகிஸ்தானை வெளிப் படையாகவும் அந்தரங்கமாகவும் கண்டித்தன. இதன் விளைவாகத்தான் பாக் அதிபர் தற்போது எல்லை கடக்க முற்பட்ட ஜே. கே. எல். எஃப். அணியினரை ராணுவம் கொண்டு தடுத்திருக்கிறார். இதன் மூலம் அவர் வல்லரசுகளிடம், அவர்கள் கருத்தை மதித்து நடப்பதாகக் காட்டிக் கொண்டார். ஜே. கே. எல். எஃபைத் தூண்டி விட்ட அளவில் அவர்களிடமும் நல்ல பெயர். பேரணியாக இல்லாவிட்டாலும் சிறு சிறு அணியினராக ஊடுருவல் தொடரத்தான் போகிறது என்பதால், இந்தியாவுக்குத் தலைவலி அதிகரிக்கிறது!

நம்மைப் பொருத்தமட்டில் காஷ்மீர் பிரச்னை மேலும் சிக்கலாகிறதே தவிர, குறையவில்லை. ஊடுருவல் தொடர, குண்டுகள் வெடிக்க, கொலைகள் நிகழ, பணயக் கைதிகள் கடத்திச் செல்லப்பட, நிலைமை மேலும் மோசமாகப் போகிறது; ஓர் அங்குல முன்னேற்றம் கிடையாது.

காஷ்மீர் நம்முடையதுதான், சந்தேகமில்லை; காக்க வேண்டும், ஐயமில்லை. ஆனால் சர்வ கட்சி மாநாடு கூடி எல்லாரும் ஒத்துழைப்பதாகக் கூறி விட்டால் மட்டும் போதுமா? பயங்கரமான பிரத்யட்ச நிலைமையை எப்படி மாற்றி அமைக்கப் போகிறோம்?

இருளிடையே ஒளிக் கீற்று ஒன்றும் தெரிகிறது. அது, வல்லரசுகளின் - உலக நாடுகளின் -ஏகோபித்த கருத்தை மீறி, நவாஸ் ஷரீஃபால் கூடச் செயலாற்ற முடியவில்லை; அவர்களுடைய தார்மீக வற்புறுத்தலுக்கு அவர் அடங்கி நடக்க வேண்டியிருந்தது என்பதுதான். நாம் பற்றிக் கொண்டு முன்னேற வேண்டியதும் இந்த ஒரு நம்பிக்கையைத்தான்.

உலக நாடுகளிடையே அபிப்பிராயம் உருவாக்குதல்; பாகிஸ்தானுடன் நல்லுறவுக்கு மனப்பூர்வமாக முயற்சி செய்தல்; பயங்கரவாதிகளுடன் போரிடல்; காஷ்மீர மக்களிடையே பிரசாரம்; காஷ்மீரத்தின் தொழில் - பொருளாதார அபிவிருத்தி என்று பல முனைகளில் தாக்கினால்தான் பிரச்னைக்குத் தீர்வு காணும் விதமாக முன்னேற முடியும். பிரச்னை அலைகளில் காஷ்மீர் படகை மிதக்க விட்டால் போதாது; அதற்கு விசை மோட்டார் பொருத்த வேண்டும்.



கல்கி

1992
பிப்ரவரி 23
மலர் : 50
இதழ் : 30
பிரஜோத்பத்தி
மாசி 11

ஃபாஷன் பக்கம் :

காஷுவல் தோற்றத்துக்கு...

ஸ்கர்ட், ஜீன்ஸ், பாண்ட், மிடி என்று எல்லாவித ஆடைகளுடனும் பேதமின்றி ஜோடி சேருவது டீ-ஷர்ட்!

கறுப்பு, வெள்ளை நிறங்களில் டீ-ஷர்ட் அணிவது ரொம்ப ஃபாஷன்; அவற்றில் மிட்டாய் வண்ணத்தில் வார்த்தைகள் அச்சிடப்பட்டிருப்பது ரொம்ப ரொம்ப ஃபாஷன். அந்த வார்த்தைகளின் அர்த்தம் விளங்காமல் இருப்பது அதனினும் ஃபாஷன்!

வண்ணப்படம் ; யோகா

டீ-ஷர்ட் அணிந்துள்ளவர்கள் : டீனா, கிரன், மீனா, சஜீதா



டான் கவிலியோ

7

அறைக்குத் திரும்பலாம் எனத் திரும்பவும் வற்புறுத்தினாள் சிந்துஜா. ஹோவென்றிருந்த அப் பிரதேசத்தின் அமைதி அவளை அச்சுறுத்தியது. அது என்ன ஓசை... காய்ந்த சருகுகள் மிதிபடுகிற மாதிரி. குளிரையும் மீறி வியர்த்தவாறு, ''ப்ளீஸ் பிரகாஷ்...'' என்றாள் கெஞ்சலாக.

''ஓ.கே. ஓ.கே.'' என்றவன் நாடக பாணியில் கை உயர்த்தி, ''நவ் அபௌட்டர்ன்!'' என்று சிரித்தவாறு சரேலென்று திரும்பினான்.

திரும்பியதும் அதிர்ந்தார்கள். பால் நிலவு ஒளியில் பத்தடி தொலைவில் யார்... யார் அவன்? எதற்காக அவன் கையில் கத்தி? நடப்பது நிஜந்தானா... ஐயோ! வீசுவதற்காக அவன் ஓங்குகிறானே...

உறைந்தது ஒரு விநாடிதான். மின்னல் விரைவில் பிரகாஷ் இயங்கினான். சிந்துஜாவின் இடையை முரட்டுத்தனமாகப் பற்றிப் பக்கவாட்டில் தரைநோக்கிப் பாய்ந்தான். அடுத்த நொடி முடிவில் -

பாய்ந்து வந்த கத்தி ஒரு மரத்தில் 'தக்' என்ற ஓசையுடன் குத்திட்டு நின்றது.

இனி எதிராளி நிராயுதபாணி. ''ராஸ்கல்!'' என்று ஆக்ரோஷமாய்க் கூவியபடி, விடுபட்ட ஸ்பிரிங் போல் தரையிலிருந்து எழும்பினான். ''கோழை! வீசிட்டு ஓடறான் பாரு... அவனைப் பிடிச்சு அவன் கையை முறிக்கணும்.''

''நோ! விட்டுருங்க பிரகாஷ்'' என்று அவனை இறுகப் பற்றி இழுத்துத் தடுத்தாள்.

தொலைவிலிருந்த குத்துச் செடிகளில் மறைந்து மறைந்து அவன் வேகமாகத் தன்னை விட்டு விலகுவதைப் பார்த்துப் பொறுமையிழந்த பிரகாஷ், ''அவன் தப்பிச்சுப் போறாம்மா!'' என்றான்.

''போகட்டும். ஆபத்தை வலியத் தேடிப் போகாதீங்கப்பா'' என்றாள் தவிப்புடன்.

''அவனைப் பிடிச்சு உலுக்கி, யாரு என்னன்னு உண்மையை வரவழைக்க வேணாமா?''

''வேண்டாம்!'' என்றாள் குரல் நடுங்க.

கத்தி வீசியவன் போயே போய் விட்டான். ''சே'' என்றான் வெறுப்புடன்.

''இப்ப எனக்குச் சந்தேகமில்லை சிந்து. யாரோ நமக்குக் குறி வெச்சிருக்காங்க! ஏன் சிந்துஜா?''

''...............''

பத்மா ரவிசங்கர்

''யாரும் நமக்குப் பகையில்லையே'' என்றான் மரத்தில் குத்திட்ட கத்தியை வெறித்தபடி. ''ஏன் நம்மைத் துரத்தறாங்க? யார் அவங்க? நீ சொன்ன மாதிரி டான் கவிலியோதான் காரணமா? என்ன அவன் நோக்கம்?'' வரிசையாக வந்த தன் கேள்விகளுக்கு சிந்துஜா பதில் ஏதும் சொல்லாதது சட்டென்று உறைக்க அவளைப் பார்த்தான்.

கலவரமானான். சிந்துஜாவின் கண்கள் தொலைவில் நிலைத்திருந்தது - அமானுடமாய். முகத்தில் பொடித்திருந்த வியர்வை முத்துக்கள் நிலவில் பளபளத்தன. வாய் ஏதோ முணுமுணுப்பது போல் ஓசையின்றி அவஸ்தையுடன் அசைய, அவள் தேகம் கட்டுப்பாடின்றி நடுங்கியது. எந்த நிமிடமும் விழுந்து விடுவாள் போல.

அவளை அவன் தாங்கிப் பிடித்துக் கொண்டதை அவள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

சிந்துஜா வேறு ஒரு உலகத்தில் இருப்பது போலிருந்தாள். நடந்து முடிந்த பயங்கரத்தில் அவள் அதிர்ச்சி வசப்பட்டிருந்தது புரிந்தது.

''விழிச்சுக்க சிந்து. ரிலாக்ஸ் டியர். இனி ஆபத்தில்லைம்மா. இட்ஸ் ஆல் ஓவர்'' என்றான் மென்மையாக.

'டிரான்ஸ்' போன்ற நிலைமையிலிருந்து அவள் விடுபடாமல், ''ம். சீக்கிரம் ஒதுங்குங்க பிரகாஷ். கத்தி வேகமா வருது'' என்றாள்.

பிரமை தட்டிப் போயிருந்தவளை உக்கிரமாக உலுக்கி, ''சிந்துஜா!'' என்றான் அதட்டலாக.

சட்டென்று அவள் கண்களில் உயிர் துளிர்த்தது.

''ஆர் யூ ஆல்ரைட்? உனக்கு ஒண்ணும் ஆகலையே?''

''இல்லைப்பா'' என்று சோகமாகத் தலையசைத்து, சோகையாகப் புன்னகை செய்தாள்.

''ஹோட்டலுக்குத் திரும்பலாமா? உன்னால நடக்க முடியுமாடா?'' கவலையுடன் வினவினான்.

''முடியும்பா. எனக்கு ஒன்றுமில்லை.''

அவளை அணைத்தவாறு அழைத்துச் சென்றான். குளிர் கூடியிருந்தது. ''குளிரை

விரட்டக் கையைக் காலை வீசி வேகமா நடக்கணும் தெரியுமா?'' என்றான் அவள் மனத்தைத் திசை திருப்பும் நோக்கமாக.

ஹோட்டல் 'க்ரீன் வ்யூ' நியான் சிமிட்டல், பனியில் மழுப்ப லாகத் தெரிந்தது.

நேரம் 8:30. ஃப்ரண்ட் ஆபீஸின் சூரிய முயற்சி சர விளக்குகள் ஜகஜ் ஜோதியாக இருந்தன. இரசிக்கத் தான் ஆளில்லை.

''குளிருக்கு எல்லாரும் பார்ல போய் விழுந்து கிடப்பாளுங்க சிந்து.''

கவுண்ட்டரைக் கடக்கையில் ''சார்!'' என்று அழைத்தான் ரிசப் ஷனிஸ்ட்.

''அரை அவர் முந்தி உங்களுக்கு ஒரு போன் வந்தது சார்.''

''யாராம்?''

''சொல்லலை சார். நீங்க வெளியே போயிருக்கீங்கன்னதும் லைன் டிஸ்கனெக்ட் ஆயிருச்சு. ஏன் சார் மேடம் ஒரு மாதிரி இருக் காங்க?'' என்றான் சிந்துஜாவைப் பார்த்தவாறு.

''ஓ... ஒண்ணுமில்லைப்பா.''

''உடம்பு சரியில்லையா சார்?''

''ஆமாம்பா.'' எரிச்சலுடன் பதி லுரைத்து விட்டு நகர்ந்தான். ரிசப் ஷனிஸ்டின் குரலில் அக்கறையை விட வம்பு சேகரிக்கும் தொனிதான் தென்பட்டாற்போல் பட்டது.

அறைக்கு வந்ததும் மின்சாரக் கணப்பின் கதகதப்பை அதிகரித்து விட்டு, ரூம் சர்வீஸை விளித்துப் பால் வரவழைத்தான்.

''சூடா பால் சாப்பிட்டுட்டு நிம்மதியாப் படு. காலையில எல் லாம் சரியாயிரும்'' என்றான் அவள் தலைமுடியை விரல்களால் கோதி விட்டு.

''இல்லைப்பா. ஐ யாம் ஸ்கேர்டு. நீங்க மட்டும் தரையைப் பார்த்துப் பாயத் தாமதிச்சிருந்தா -'' அவள் குரல் தழுதழுத்தது. ''அந்தக் கத்தி உங்க மேல பாய்ஞ்சிருக்கும்.''

''மற சிந்து. ப்ளீஸ்.''

''உங்களுக்கு ஒண்ணு ஆகி யிருந்தா இந்நேரம் ஒரு பள்ளத் தாக்குல விழுந்து உயிரைப் போக் கிக்கிட்டிருப்பேன்'' என்றாள் விம் மல் வெடிக்க.

அவனுள் வேதனை வெட்ட, ''அசட்டுத்தனமா உளறாதே சிந்து. வி ஆர் ஸேஃப். சும்மா வொர்ரி பண்ணிக்காதே.''



நைட் லாம்ப் ஒளிரச் செய்து விட்டுக் கட்டிலில் வந்தமர்ந்தாள்.

''அவன் யாருப்பா?''

''தெரியலையே சிந்து. நீ மட்டும் தடுக்காமலிருந்தா அவனைத் தேடிப் பிடித்து நசுக்கியிருப்பேன்!'' என்றான் பற்களைக் கடித்தவாறு.

இறுகியிருந்த கணவன் முகத்தைப் பார்க்கப் பயமாயிருந்தது அவளுக்கு. அவன் கண்கள் விநோதமாக ஜொலித்தன. இவனுக்குள் இன்னொரு இரும்புப் பக்கம் இருக்கும் போல...

''இனி இங்கே இருக்கற ஒவ்வொரு நிமிஷமும் ஆபத்து பிரகாஷ். நாளைக்கே மெட்றாஸ் திரும்பிடலாம்.''

சில வினாடிகள் யோசித்து விட்டு, ''சரிம்மா'' என்றான்.

''நாமா வலிய ஆபத்து தேடிக்கக் கூடாதுப்பா. சத்தடி செய்யாம கிளம்பிருவோம் என்ன?''

''சரி சிந்து. இப்ப நீ தூங்கு.''

'குட் நைட்' சொல்லிக் கொண்டார்கள்.

நேரம் 9:30. அவளை அணைத்தவாறு ஆழ்ந்து உறங்கும் சிந்துஜாவைப் பார்த்தான். நீலவிளக்கொளியில் முகத்தில் ஒருவித குழந்தைத்தனம் தெரிந்தது. ஹூம். தன்னை நம்பி அவள் வாழ்க்கையையே ஒப்படைத்தவள். இவளைக் காப்பது தன் உயிர்க் கடமை. பரிவும், பாசமும் மிக, குனிந்து அவள் நெற்றியில் மென்மையாக முத்தமிட்ட போது, போன் ஒலித்தது. இந்நேரத்தில் யாராக இருக்கும்....

அவன் மேலிருந்த சிந்துவின் கையை விலக்கி விட்டு, எழுந்து சென்று, போனை எடுத்து ''ஹலோ'' என்றான்.

மறுமுனையில் மௌனம். யாரோ மூச்சு விடும் சப்தம் கேட்டது.

''ஹலோ....... ஹலோ....... யார் வேணும்?''

திடீரென்று சிங்கம் கர்ஜிக்கும் ஓசை கேட்டது. அவ்வளவுதான். தொடர்பு துண்டிக்கப்பட்டது.

பிரமிப்புடன் பிரகாஷ் கட்டிலுக்கு வந்தமர்ந்தான். சிங்க இலச்சினை பற்றி ஞாபகம் வந்தது. சிந்து சந்தேகப்பட்டது சரிதான். டான்கலிலியோ என்ற ராஸ்கல் தான். தன்னைப் பயமுறுத்தத்தான் இந்த அர்த்த ராத்திரி போன்...

பயத்திற்கு மாறாக ஆத்திரம் பீறிட்டது. தங்கள் ஹனிமூனில் குறுக்கிட்டு நிம்மதி கெடுத்த அவனை... சரி; எதற்காக டான் தன்னைப் பயமுறுத்த வேண்டும்?

மேலும் வளர்ந்த யோசனையில் நேரம் விரைந்து கொண்டிருந்தது. களைப்பில் கண்கள் தாமாக மூட -

திடீரென்று விழித்துக் கொண்டான் பிரகாஷ். டிஜிடல் கைக் கடிகாரம் அதிகாலை ஆறு என்றது. எப்போது கண்ணசந்தோம்... நன்றாகவே உறங்கி விட்டிருக்கிறோம்... எண்ணமிட்டவாறு சோம்பலுடன் ஸ்லோமோஷனில் புரண்டு மறுபுறம் திரும்பியவன் அதிர்ந்தான்.

பக்கத்தில் படுக்கையில் சிந்துஜாவைக் காணோம்!

அவன் அடிவயிற்றில் சிலீரென்று ஒரு பயக்கத்தி செருகிற்று. குபீரென்று எழுந்து கொண்டான். அவன் மூளையின் சிக்கலான ந்யூரான் சர்க்யூட்டுகளில் கலைடாஸ்கோப்பிக் குழப்பச் சிதறல்களாக எண்ணங்களும், பலவித உணர்ச்சிகளும்..

இல்லை! நீ நினைப்பது போலில்லை. வீணாய்ப் பதற்றப்படாதே பிரகாஷ். நேற்றைய இரவின் கத்தி சமாச்சாரம் உன்னைப் பாதித்திருக்கிறது. பாத்ரூம் கதவைத் திற. சிந்து சிரித்துக் கொண்டு வெளியே வருவாள் பார்!

அறையின் கோடி நோக்கி ஓடினான். *உங்க காதல் மழையில் நனைந்த பிறகு, இனி எனக்குக் கோயிலுக்குப் போக வேண்டாம் போலத் தோணுதுப்பா. நீங்க தான் என் தெய்வம். உங்க அன்புதான் என் வேதம்...*

பாழும் பாத்ரூமின் கதவு விரியத் திறந்திருந்தது. உள்ளே சிந்துஜா இல்லை. இல்லை. இல்லை! எங்கே? எங்கே? எங்கே? *ஹலோ என்னாச்சும்மா? இமர்று கண் கலங்கறே... ஒவர் சந்தோஷம்*



❑ நவீனமயமான மீன்பிடி வலைகளைப் பயன்படுத்துவதால் 'கடல் அப்பாவிகள்' எனக் கருதப்படும் டால்பின்கள் பெருமளவில் அழிந்து வருவதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கடல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆண்டொன்றுக்குச் சுமார் 16,000 டால்பின்கள் இவ்வகையில் பிடிக்கப்படுகின்றன. கடல் சுற்றுச் சூழல் இசைவுத் தன்மைக்கு இந்த நடவடிக்கையினால் குறிப்பிடத்தக்க அளவில் ஏதேனும் கேடு விளையுமா என்று தற்போது ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. இன்னொரு பக்கம் சில நாடுகளில் டால்பின் இறைச்சிக்குப் பெருமளவில் கிராக்கி ஏற்பட்டு வருவதால் இந்த அப்பாவிகள் கொல்லப்படுவது அதிகரித்து விடுமோ என்று இயற்கை வல்லுநர்கள் அஞ்சுகிறார்கள்.

- தூவானம்

பிரகாஷ்! உங்க அன்பைத் தாங்க முடிய லைப்பா...

''என் சிந்து... என் சிந்து...'' அரற்றத் தொடங்கினான். உஷ்... நம்பிக்கை இழக்காதே முட்டாள். ரெஸ்டாரெண்டில் உன் கண்ணம்மா காலைக் காப்பிக்குக் காத்திருக்கும். நோ. ரூம் சர்வீஸ் விளிப்பதுதானே வழக்கம். அனாவசியமாய்த் தர்க்கம் செய்யாமல் ஓடு!

அறையின் வாசற் கதவு தாளிடப்படாமல் இருந்தது. ஆக, அவள் வெளியில் சென்றிருக்கிறாள். அல்லது அவளை... அவசரமாகத் திறந்து வெளியில் ஓடினான். *வாழ்க்கைல அன்பை அதிகம் அனுபவிச்ச அறியாதவன் நான். இப்பத்தான் வசந்தம் வீச ஆரம்பிச்சிருக்கு...*

குளிர் மிகுந்த காலையில் ரெஸ்டாரெண்ட்டில் யாருமில்லை. எங்கே என் உயிர்? பதற்றமானான். *உங்களை ரெண்டு நாளாப் பார்க்காம பித்துப் பிடிச்சாப்ல இருந்ததுப்பா. தவிச்சுப் போயிட்டேன்...*

ஃப்ரண்ட் ஆபீஸ் நோக்கிப் பாய்ந்தான். *பல்ல பிக்பாக்கட்டான ஐந்நூறு ரூபாய் பணத்துக்கா இவ்வளவு சோகம்? இல்லைப்பா, என் பர்ஸ்ல வேறொரு மதிப்பிட முடியாத பொருள் இருந்தது. என்ன அது? பல நாள் நான் பார்த்துப் பரவசமான உங்க போட்டோ...*

வரவேற்பு ஹாலில் நான்கைந்து பேர் தென்பட்டனர். இன்னமும் இருட்டு பிரியாதிருப்பது வாசலில் தெரிந்தது. ''ஸார்!'' - நேற்றிரவு பார்த்த அந்த ரிசப்ஷனிஸ்டு அவனை அழைத்தான்.

பிரகாஷ் அருகே சென்றதும், ''மேடம் இப்போ எப்படி இருக்காங்க? நீங்க கூடப் போகலையா?'' என்றான்.

ஏதோ நெருடலாக உணர்ந்ததில் பதற்றமாகி, ''என்னய்யா சொல்றே? இப்ப அவ எங்கே இருக்கா?'' என்றான் முரட்டுத்தனமாக.

''நர்சிங் ஹோம் சார்!''

''என்னய்யா உளர்றே?'' என்று அவன் சட்டையைக் கொத்தாகப் பற்றிக் கொண்டான்.

முகம் வெளுத்த ரிசப்ஷனிஸ்டு சொல்லத் தொடங்கினான். அதிகாலை நாலே முக்கால் மணியளவில் பிரகாஷ் தன் அறையிலிருந்து மனைவிக்கு உடல்நிலை சீரியஸ் என்று இவனுக்கு போன் செய்தானாம்; ஆம்புலன்ஸ் தருவிக்கச் சொன்னதன் பேரில் 'குட் ஹெல்த்' நர்சிங் ஹோமிற்கு இவன் போன் செய்தானாம். பத்து நிமிடங்களில் ஆம்புலன்ஸ் வந்ததாம். இவனிடம் அறை எண் விசாரித்துக் கொண்டு சென்ற இரண்டு வெள் உடுப்பு ஊழியர்கள் இரண்டு நிமிடங்களில் மாடியிலிருந்து திரும்பினராம். அவர்கள் சுமந்து சென்ற ஸ்டிரெச்சரில் 'மயங்கி'க் கிடந்த மேடத்தைப் பார்த்தானாம்.

எல்லாம் தான் அசந்து உறங்கின பொழுதில்....

முன்னிரவு மேடம் சோர்ந்திருந்த தோற்றத்தை ரிசப்ஷனிஸ்டு நினைவு கூர்ந்தான் பரிதாபமாக.

பிரகாஷ் கண்களில் கனல் பறக்க, ''நீ ஏன் அவனுங்க கூட அறைக்குப் போகலை?'' என்று கேட்டான்.

''முடியலை சார். ஆம்புலன்ஸ் வந்த சமயம் பார்த்து ஒரு பேஜார் கஸ்டமர் செக்-இன் செய்ய வந்தாரு. வேண்டாத கேள்வியெல்லாம் கேட்டு வீணாத் தகராறு பண்ணிக்கிட்டிருந்தாரு.''

''அவரு அறை எடுத்துக்கிட்டாரா?''

''இல்லை. பிடிக்கலேன்னு சொல்லிட்டுப் போயிட்டாரு.''

பிரகாஷுக்குப் புரிந்து விட்டது. என்ன ஒரு சதி... மேசையின் மேல் முஷ்டியால் ஓங்கித் தட்டி, ''கால் தி போலீஸ்!'' என்று நரம்பு புடைக்கக் கத்தினான்.

பத்தாவது நிமிடம் சென்னை லைன் கிடைத்தது. அவன் அப்பா ராஜசேகர் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்தார்.


''காணாமப் போனது ராஜசேகரோட மருமகடா! நான் டி.ஜி.பி.யைப் போட்டு உலுக்கறேன். கவலைப்படாதே மை சன். இன்னிக்கு நைட் அங்கே வர்றேன்.''

அரை மணி கழித்து சிறு போலீஸ் படை வந்தது.

காலை எட்டு மணி போல டி.எஸ்.பி. சாமுவேல் வந்தார்.

மாலை சிந்துஜாவைக் கடத்தியவனிடமிருந்து போன் வந்தது....!

(தொடரும்)



''உங்க பையனுக்கு அரசியல் அறிவு அதிகமா?''

''ஏன் அப்படி கேட்கிறீங்க?''

''ஒரு பழமொழி சொல்லுடான்னு சொன்னா 'எதிர் கோஷ்டியைத் தாக்கிப் பேசினால் தன் கோஷ்டி தானே வளரும்'னு சொல்றான்!''

- எல். ராம் பிரபு

ஜென்ம பூமிகளும் தரிச தலங்களும்

ஒரு சின்னச் சூரியனுக்கு மானுட வடிவம் கிடைத்திருக்குமானால் இப்படித்தான் அமைந்திருக்குமோ!

சுவாமி ரமணானந்தாவைப் பார்க்கிறவர்கள் அனைவரும் இப்படித்தான் தங்களின் மனத்தையே கேட்டுக் கொள்வார்கள். பதிலும் கூட 'ஆம்' தான்.

முகத்தில் அப்படி ஒரு தேஜஸ்! பொன்னிற மேனி! கார்கால மேகத்திரள்கள் போல் ஜடா முடியும், தாடியும்; மார்பை மறைக்கின்ற உத்திராட்ச மணி மாலைகள்! ஆரஞ்சு வண்ணத்தில் இடுப்பிலே ஆடை. அதே வண்ணத்தில் உத்தரீயம் ஒன்று முதுகை மறைத்தும், மார்பை மறைக்கா மலும் போடப்பட்டிருந்தது. புலித்தோல் மீது பத்மாசனக் கோலத்தில் அமர்ந்திருந் தார். இடது கையைத் தண்டம் தாங்கி யிருக்க, வலக்கரம் பக்தர்களை ஆசீர்வதிக்க உயர்ந்தும், பிரசாதங்களை வழங்கவுமாக இயங்கிக் கொண்டிருந்தது.

இத்தனை சின்ன வயதில் கூட இப்படிப்பட்ட சித்திகள் சித்திக்குமா?

சித்தித்திருக்கிறதே!

அவரது பார்வையின் வருடல் ஒன்றே போதுமாம், மனத்தின் பெரும்பான்மைத் துக்கத்தை அலம்பி விடுவதற்கு. நம்பிக்கைகள் போன்ற சஞ்சீவி மருந்துகள் எதுவுமே கிடையாது.

இருவர் சந்தித்துக் கொள்கிற போது, அவர்களின் பேச்சில் பிரதான இடம் வகிப்பது ரமணானந்தா சுவாமிகளும், அவரின் ஆசிரமமும்தான். அங்கு போகிறவர்கள் சொல்லொணா அமைதி பெற்றுத் திரும்புகிறார்கள் என்பது அழுத்தம் பெற்ற நம்பிக்கையாயிற்று.

"இதோ பாரு ரெங்கம்மா, உனக்கு என்ன குறையோ, என்ன துக்கமோ தெரியலே. கடப்பாறையை முழுங்கினவ போல இணறிக்கிட்டும், துக்கப்பட்டுக்கிட்டும் இருக்கே. வெளிப்படுத்தினாக் கொஞ்சம் ஆறும். வாயே திறக்க மாட்டேன்கிறே, போ. எனக்கு உன்னையும் உன் துக்கக் கோலத்தையும் பார்க்க ஆறலே. எல்லாரும் அந்த சாமியார் தரிசனம் பண்ணினாத் துக்கமெல்லாம் போயிடுதுன்னு சொல்றாங்க. போய்ட்டு வந்தப்புறம் துக்க நிவர்த்தியாகி மனசுல சந்தோஷத்தோட இருக்காங்களாம், சொல்றாங்க. நீயும் வா ரெங்கம்மா, போய்ட்டு வந்துறலாம், அப்ப வாச்சும் உன் முகத்துல களை வருதான்னு பார்க்கலாம்."

ரெங்கம்மா போட்டிருக்கிற வாய்ப்பூட்டுக்கு எங்கிருந்தும் சாவி கிடைத்து விடவில்லை.

கிட்டத்தட்டப் பத்தாண்டு காலமாகவே, இந்த ஊரின், இதே தெருவின், இதே வீட்டின் அங்கமாகிப் போனாள் ரெங்கம்மா. அவளின் துக்கம் தெரிகிற முகமும் இந்த வீதிக்கு மறக்க முடியாதது போல் பார்வைகளோடு ஒன்றிவிட்டது. அந்த முகம் அனுதாபத்தை வாங்கிக் கொள்ளுமே அல்லாது, எரிச்சலூட்டுகிற விதமாயும் இராது.

இப்போதைய இந்த முகம் கூட, அன்னபூரணியிடமிருந்து அனுதாபத்தையே பெற்றது. ஓர் ஒற்றைச் சொல்லினைக்கூட உதிர்த்திராத போதும், அவள் தன்னுடைய துக்க நிவர்த்தி வேண்டி, சுவாமிகளின் கருணைமிகு பார்வையில் படவும், தரிசனம் பண்ணிக் கொள்ளவும் இசைவாள் என்கிற நம்பிக்கையோடு அன்னபூரணி இருந்தாள்.

'என்னோட துக்கம் எதுனாலியும் நிவர்த்தியாயிற முடியாது!' என்கிற பார்வையில் பார்த்தாள் ரெங்கம்மா.

எனினும் அன்னபூரணி விட்டு விடுவதாக இல்லை.

"இதுல என்ன கஷ்டம்ன்னு நினைக்கிறே ரெங்கம்மா? வேணாம். மனசுல நம்பிக்கையே வேணாம். இத்தனை தூரம் சொல்றேன்ல்ல, அதுக்காக வாச்சும், அன்னபூரணி அத்தை சொல்றதுக்காகவாச்சும் போய்ட்டு வருவம்ன்னு முடிவு பண்ணு ரெங்கம்மா."

அன்னபூர்ணி இந்தத் தெருவுக்கே அத்தைதான். அதனால் அவள் தன்னைக் குறிப்பிடுகிற போது கூட வெறுமனே தனது பெயரை மட்டும் சொல்லிக் கொண்டிராமல், 'அத்தை' என்கிற வாலையும் ஒட்ட வைத்துக் கொண்டே சொல்லிக் கொள்வாள்.

ரெங்கம்மாவின் தலை மெதுவாக, ஒப்புதலுடன் அசைந்தது.

உமா கல்யாணி

''சரி அத்தை, போய்ட்டுத்தான் வருவமே'' என்றாள் ரெங்கம்மா அரைமனதாக.

நீளமான கியூ நிதானமாகவே நகர்ந்து கொண்டிருந்தது. போய்த் தரிசனம் பண்ணி விட்டுத் திரும்பியிருந்தவர்களின் முகங்களில் அவாதியான ஜ்வலிப்பு! நிறைவும், சந்தோஷமும் போட்டி போட்டு மின்னுகின்ற ஜ்வலிப்பு!

அபூர்வமான அமைதியை வழங்கிக் கொண்டிருந்தது போன்று தெரிந்தது ரெங்கம்மாவிற்கு.

அடுத்து அவளின் முறைதான்.

அந்தச் சின்னச் சூரியனைத் தரிசிக்கிற பரவசமுடன் அருகாகப் போய் நின்றாள்.

சுவாமிகளின் பார்வை ரெங்கம்மாவை வருடிய அதே கணத்தில், சட்டென்று அவரிடம் மின்னலாய் ஓர் அதிர்வு. மறுகணமே அதனை மறைத்துக் கொண்டு இயல்பு நிலை. அருட் சொரியலாய் ஒரு பிரமாதப் புன்னகை! நிறையப் பேசத் துடித்த இதழ்கள் அடங்கிக் கொண்டாற் போல ஓர் உணர்வும் கூட.

முதலில் ரெங்கம்மாவும்கூட இயல்பாகவே சுவாமியை ஏறிட்டாள். அருட்பார்வையை ஏற்றாள். அப்புறம் அவரின் அந்த விழிகளை நேருக்கு நேராய்ப் பார்க்கையில்தான், எதிர் பாராத திடுக்கிடு இதயப் பரப்பினுள் உற்பத்தியாயிற்று.

அவரின் ஜடா முடி, தாடி, அப்புறம் இந்தத் தூய்மையான காவியுடைகளையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டு, ஒரு பத்து வயதைக் குறைத்து, சாதாரண உடைக்குக் கொணர்ந்து பார்க்கையில்,

பார்க்கையில்.......,

அந்த இருபது வயது ரமணன்தான் சிரித்த முகத்துடனும், ரௌத்கார பாவமுடனும், கொதிநிலை மனோபாவமுடனும், பொங்குகிற பாலில் நீர்த்துளிகள் விழுந்து அடங்கிக் கொண்ட தோற்றமுடனும் தென்பட்டான்.

ரமணனா?

ரமணனேதானா?

என்னோட ரமணனே தானா?

'ஆமாம், ஆமாம், ஆமாம்' என்கிற அழுத்தமான பதிலுக்கு எந்த மூலையிலின்றும் பதில் இல்லை.

இந்த சுவாமி ரமணானந்தா என்னோட ரமணன் தானா?

'தக்'கென்று சந்தோஷ அலைகளின் குபீர் ஆர்ப்பரிப்பு!

அத்தனை காலத் தேடல் பயனுடையதாகி, ஒரு புதையலே கிடைத்து விட்டாற் போன்ற பேரானந்தம்.

இப்போது பேசமுடியுமா?

உறவு கொண்டாட முடியுமா?



இதோ பிரசாதம் வழங்கப் போகிறார். வழங்கினால் விடை தந்த மாதிரிதான். அ ப் பு ற ம் நிற்கவே அனுமதியில்லை. பிறகு பேசவோ, உறவு கூறவோ இயலுமா?

''துளசி வனத்திலிருந்து காற்றிலே பறந்து வந்த துளசி விதைகள், குப்பை மேட்டில் போய் விழுந்தாலும், முளைக்கும். வளரும். துளசிதளத்தின் தூய்மையோடும், வீர்யத்தோடும் இருக்கும். மாலை கட்ற இடத்துக்கு வந்துட்டா, பகவானுக்கு மாலையாகவும் கட்டப் பெறும். சார்த்தப் பெறும். இதுதான் துளசி தளத்தோட மகிமை.''

சொல்லிக் கொண்டே துளசி தளங்களை வழங்கிவிட்டுப் புன்னகையைப் படரவிட்டார்.

இனி நிற்க முடியாது.

ந க ர் ந் து விடவேண்டியது தான்.

துளசி தளங்களை விழியொற்றிச் சேவித்துக் கொண்டு, விழி நீர் பெருக நகரலானாள் ரெங்கம்மா.

''விரதுக்கு நிறைய யோசிச்சியே ரெங்கம்மா. இங்க வந்து தரிசனம் பண்ணின பிறகு மனசு நிறைஞ்சு போச்சல்ல! உன்னோட கவலையிலே பாதியாச்சும் போயிருக்கணுமே?''

அன்னபூரணி கேட்டாள் சந்தோஷிக்கிற குரலில்.

''பாதி என்ன முழுக்கவலையுமே போயிடுச்சு. இப்ப நான் ரொம்பச் சந்தோஷமாவே திரும்பி வர்றேன் அன்னபூரணி அத்தை'' என்ற ரெங்கத்தின் குரல் முழுவதும் சந்தோஷத்துள்ளல்கள்.

''பார்த்தயில்ல! நான் சொன்னேனல்ல! சுவாமியோட மகிமையே மகிமை! இத்தனை சின்னவயசிலே எத்தனை தேஜஸ் பாரு! பிரம்மச்சர்ய தேஜஸ் ஒளியாம் ரெங்கம்மா அது! ஒண்ணொண்ணு லோ.... லோன்னு அலைஞ்சு சீரழியுதுக பெரிய வயசுல கூட! ஆனா.... நம்ம சுவாமிகள் இளம் வயசுல கூட, மனசை ஒடுக்கி, தபஸ் இருந்து, உலகப் பாவங்கள் மன்னிக்கப் படணும்கிறதுக்காக... தன்னையே ஒடுக்கிக்கிறதுன்னா, லேசுப்பட்ட காரியமா?''

குறுவாளைக் கூராய்த் தீட்டி நட்ட நடு நெஞ்சினிலே 'விசு'க் கென்று பாய்ச்சினால் எப்படியிருக்கும்?

ரெங்கம்மா அப்படி உணர்ந்தாள்.

ஆனாலும் சமாளித்துச் சிரித்தாள்.

ரமணனைப் பார்த்த சந்தோஷமும் நிறைவும், அன்னபூரணி அத்தையின் தாக்குதலால் குற்றுயிரும் குலையுயிருமாய்ச் சிதைந்தன.

அ தொ ன் று ம் வேண்டுமென்றே தொடுக்கப் பெற்ற தாக்குதல் இல்லை. வெறும் தற்செயல். சுவாமிகளின் பிரம்மச்சர்யப் பெருமையைச் சொல்வதற்காக, 'கிழடுகளின் அலைச்சலையும், மேய்தலையும்' ஒப்பிட்டுச் சொல்லப்பெற்றது.

அவ்வளவுதான்.

ஆனால்.... அதுவே..., ரெங்கம்மாவைத் தாக்கி விட்ட பெரிய ஆயுதமாய் இப்போது நின்றது.

ஊழிக்காலத்தின் புயல் எப்படியிருக்கும்?

இதோ..., இந்த இருபது வயது ரமணனைப் போலத்தான் இருக்க வேண்டும்.

அத்தனை ரௌத்ரம்! அத்தனை ஆவேசம்!

''நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையா அம்மா?''

கூராகப் பார்வையை வீசி, நேராய் வகிர்கிறது போன்ற கேள்வி.

மௌனமாய் நின்றாள் ரெங்கம்மா.

பின்னே, பதில் சொல்கிற மாதிரியான கேள்வியையா கேட்கிறான்? பதில் சொல்கிற மாதிரியான செயலா அவளுடையதும்?

''நீ இப்படி மௌனமாய் இருந்தேன்னா அதுக்கு என்ன அர்த்தம்? உண்மைதான்கிறியா, இல்லேன்னு மறுக்கிறியா?''

மறுபடியும் மௌனம்.

மறுப்பதற்குத் தென்பற்ற பலவீன மௌனம்.

''ஏன் இப்படிச் செய்தே?''

இதற்குப் பெற்ற மகனிடம் என்ன பதிலைக் கூற முடியும்? சொல்ல முடிகிற காரணமா அது?

நாற்பது வயதாகியும் அடங்கிப் போகாத உணர்வுகளை ஜீரணம் பண்ண முடியாமல், விதவையான தான், வழுக்கிட்டேன்னு சொல்ல முடியுமா?

''நாலுபேர் என்னைச் சுட்டிப் பேசற மாதிரி மரியாதை கெட்டதனமா நடந்து... இப்ப என்னைத் தலை குனிய வச்சிட்டியே. உன்னை அம்மான்னு கூப்பிடவே எனக்கு முடியலே. எதுவுமே தப்புன்னு தெரிஞ்சப்புறம், உணர்ந்தப்புறம் வல்லமையை

பாலம்

(பாலம் பகுதி மூலம் இணையு[ம்] வாசகர்களின் வெற்றி, தோல்விக்கோ[,] இதர பிரச்னைகளுக்கோ கல்கி நிறுவன[ம்] பொறுப்பு ஏற்காது.)

கோ-கோ பயிரிட.....

என் விஜயவாடா நண்பர் ஒருவ[ர்] தமது நிலத்தில் கோ-கோ பயிரிட விரும்பு[கி]றார். கோ-கோ விதைகள் தமிழ்நாட்டி[ல்] எங்கு கிடைக்கும், எத்தனை கிலோ[…] வழங்குவார்கள், ஏதாவது பிரச்னைகள் உண்டா? என்ற தகவல்களைத் தெரிவித்தால் - நான் என் நண்பருக்குத் தெரியப்படுத்த உதவியாக இருக்கும். மொழிகளைக் கடந்த நட்பு மேலும் வளர உதவியாக இருக்கும்.

– சி. சுதாகரன்
211, அரிஅரன் பஜார் தெரு
பொன்னேரி - 601 204.

அன்னையின் அழகிய படம்

என்னிடம் 8" X 10" அளவுள்ள தங்க வர்ணப் பின்னணியுடன் கூடிய, அன்னை



வேளாங்கன்னி மாதாவின் அழகான படம் உள்ளது. விருப்பமுள்ளோர் என்னிடம் தொடர்பு கொண்டால், அவர்கள் செலவில் அனுப்புகிறேன்.

- பாலு
யூனியன் வங்கி
வடகரை - 627 812
திருநெல்வேலி மாவட்டம்.

எங்கே இருக்கிறாய் நண்பா?

1964-67 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டம் பாபநாசம் அரசு பள்ளியில் என்னுடன் ஒரே பெஞ்சில் உட்கார்ந்து பயின்ற நண்பர் சீத்தாராமன் என்பவரை 25 ஆண்டுகள் ஆகியும் மறக்க முடியவில்லை. நாங்கள் இருவரும் கல்கியின் பாலம் மூலம் தொடர்பு கொள்ள இறைவன் அருள் புரிய வேண்டும்.

- அ. சுந்தவேல்
திருவேடகம் மேற்கு
மதுரை மாவட்டம்
- 624 217

ரெடிமேட் ஆவல்!

B.Sc., P.G.D.C.A. படித்துள்ள எனக்கு, ரெடிமேட் டிரஸ் டிஸைன் செய்வதில் மிகவும் ஈடுபாடு. ஆனால் கிராமத்தில் எனக்கு அதற்கேற்ற சூழல் இல்லை. எனக்குக் கைகொடுப்போரை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

- நூபா. E. B. சிவா,
கே. பரமத்தி - 639 111
கரூர் தாலுக்கா
திருச்சி மாவட்டம்.

அறிவுரைக்கு எழுதுங்கள்

Food & Nutritious Course ல் தேறியிருக்கிறேன். உணவின் மூலம் பருமனைக் குறைக்க விரும்புவோர், பல நோய்களைக் கட்டுப்படுத்த விரும்புவோர், மற்றும் உணவில் போஷாக்கு பற்றிய அறிவுரைக்கும் எழுதலாம். மனோ தத்துவத்தில் degreeயும், counselling ல் டிப்ளமாவும் செய்துள்ளேன். பிரச்னைகளுக்கும் அறிவுரைக்கும் வாசகர்கள் எழுதலாம்.

- ரேவதி. ஜி.
C-7, ஹரிநகர் கிளாக் டவர்,
புதுடில்லி - 110 064

மனசுல இருத்தித் தடுக்கணும்; நிறுத்தணும்.''

'தெரியும்டா. ஆனா... முடியலியே?'

''முடியாதுன்னு நினைக்கிறியா? முடியணும். முடியும். சேலஞ்ச்! இப்ப உன் வயது நாற்பது. என் வயசு இருபது. இந்த இருபதுல சாதனை பண்றேன் பார்க்கிறியா? மனசை அடக்கி, ஒடுக்கி ஞானியாயிடுறேன் பார்க்கிறியா? ஒரு சபலபுத்திக்காரியோட மகன், சபலங்களை வெல்வான், பார்க்கிறியா? நீ செஞ்ச தப்புக்கு அவன் தண்டனை ஏத்துக்குவான் பார்க்கிறியா? உன்னைக் காறி உமிழ்ந்தவங்களே, உன் மகனைத் தொட்டு வணங்குறாப்ல ஆக்கிடறேன் பார்க்கிறியா?''

''வேணாம்.... உன்னாலே அதுமாதிரி எல்லாம் முடியாது. இருபது வயசை வெல்றதா? வேணாம்டா விஷப்பரீட்சை.''

''பரீட்சை எழுதிட்டு வந்தப்புறம் சொல்லு, முடிஞ்சுதா, பாஸ் பண்ணினேனா..., இல்லியான்னு.''

''நில்லுடா....''

நிற்கவில்லை அவன்.

இன்று பார்க்கிறாள்! வெற்றி பெற்ற மகனைப் பார்க்கிறாள். தன் நிமித்தம், வாழ வேண்டிய வயதில் ஒடுக்கிக் கொண்ட மகனைப் பார்க்கிறாள்.

அன்றைக்கே மனதினுள் காவியும் உடுத்துக் கொண்டாள். வருவான் வருவான் என்று காத்திருந்து களைத்து, ஊர் ஊராய் அலைந்து... கடைசியில் இங்கேயே நிரந்தரமாகத் தங்கி.... இப்போது காண முடிந்திருக்கிறது.

''என்ன ரெங்கம்மா இது? திடீர்னு காவிப் புடைவை கட்ட ஆரம்பிச்சிட்டே...?''

வியப்போடு கேட்ட அன்னபூரணிக்கு, மௌனமான புன்னகையே பதிலாயிற்று.

''சுவாமியின் மகிமையே ஜாஸ்திதான். அவங்கவங்க மனசைத் தான் மாற்றிக் கொண்டாங்கன்னா, நீ மனசோட சேர்த்து டிரஸ்ஸையுமில்லா மாற்றிக் கொண்டிருக்கே. எப்படியோ, சுவாமி தரிசனம் உன் துக்கத்தைப் போக்கி, போற வழிக்குப் புண்ணியம் தேடிக்கோன்னு பண்ணிடுச்சே, அது போதும்'' என்றாள் அன்னபூரணி.

இப்போதும் மௌனப் புன்னகையே பதில்.

பொன்விழா போட்டிக் கவிதை



ஞானம் பிறந்தது

பாலைப் பருகிடும்
  பால வயதினில்
    பாவம் அறிய வில்லை - ஒரு
பச்சைக் குழந்தையாய்ப்
  பாடம் படிக்கையில்
    பாதை தவற வில்லை.

வாலைப் பருவத்து
  வண்ணக் கனவினில்
    வாழ்க்கை புரிய வில்லை - தினம்
வாடும் நிலையினில்
  வாழ்வு தொடர்கையில்
    வாதம் குறைய வில்லை.

காலம் கடந்துநல்
  ஞானம் பிறக்கையில்
    கண்கள் திறக்கவில்லை - இந்தக்
கண்கள் மலர்ந்தபின்
  காணும் பொழுதினிற்
    காட்சி புரிய வில்லை.

ஞாலந் தனில் மன
  ஆசை நரைத்ததும்
    ஞானம் பிறந்த தம்மா! - இந்த
ஞானம் பிறந்தபின்
  காலம் முதிர்ந்திட
    வாழ்வு புரியு தம்மா!

- 'இளவல்' ஹரிஹரன்

சின்னக்கவுண்டர்

எப்போதோ அரைத்து வைத்துப் புளித்துப் போன மாவுதான் கதை. ஆனால் அதைத் தருந்த பாத்திரங்கள், சேர்க்கை, தேவையான அளவ் எனத் தேர்ந்தெடுத்து வார்த்துத் தந்திருப்பதில் நயம் இருக்கிறது என்று சொல்லலாம்.

விஜயகாந்தின் சற்றே மாறுபாடான தலை வாரல், பதறி அடிக்காத நடை, கடைசி வரை கலைக்காத கதராடை, தோரணை, பாந்தம் என கமல ஹாசகாந்தாகத் தோற்றம். அம்மாவிடம் அன்பு, மனைவியிடம் காதல், மாமன் சிறுபெண்ணிடம் பாசம், மிடுக்கு எனப் பரிமாறி இருக்கிறார். சுகன்யாவின் பாலசந்தர் ரீதி பம்பரச் சவாலைச் சமாளிக்காமல் நழுவுவது, தான் படிக்க வைக்கும் காலேஜ் பையனின் பெட்டியைக் கூலிக்குத் தூக்குவது... என முதல் பாராட்டு விஜயகாந்துக்குத் தெரிவிக்கலாம்.

அடுத்த மிக முக்கியமான பங்கு இசை.

ஆர்ப்பாட்டமில்லை, அலட்டல் இல்லை, பிரம்மாண்ட கச்சேரியில் தருவிக்கிற இசை மழையாயில்லாமல், வீட்டில் நமக்கு ஆர்வமான பொழுதில் கருவி துடைத்து வாசித்துப் பார்க்கிற இயல்பு. ஆனால் கேட்க சுகம்; 'முத்துமணி மால' நம்மைத் தொட்டுத் தொட்டுத் தாலாட்டுகிறது.

அலட்டிக் கொள்ளாத வில்லனாக நிறைய கேரக்டர்கள் நம் தமிழ்ப்பட உலகில் வலம் வந்தாயிற்று. எனினும் சலீம் கோஸ் இன்னும் மாறுதலாய், பொருத்தமாய் நடித்திருக்கிறார்; வில்ல வெல்லம்.

நடனம், ஆர்ட் வேலைகள், காமிரா இன்னபிறவற்றைப் பற்றி பிரலாபிக்குமுன் இயக்குனர் : உதயகுமார்! வெகு சாதாரண கதை, மகளை வில்லன் கையாளும் நம்ப முடியாத முறை, மனோரமா ஆச்சிக்கு அநாவசியமான அந்த உறுத்தும் கெட் அப், ஊர்க்காரர்களின்



நம்ப முடியாத திருப்பம் எனக் கவனிக்கப்படாத விஷயங்களைப் பட்டியலே போடலாம்: ரத்தச் சண்டை?

ஆனாலும், கரிசல் மண்ணில் விஜயகாந்த நடை, கடலைக் காயில் காலை உளைவது, கொத்துக் கொத்துப் புளியமரம், இலைவிருந்து, சிதைந்த முத்துக்களைச் சேனமாய்ச் சொல்லுவது என நிறைய கதை நிகழும் களத்திற்கேற்ப நுணுக்கமான ருசி சேர்த்திருக்கிறார். கோவை சரளாவின் தங்கை போன்ற தோற்றமிருந்தாலும் ஆடு மேய்க்கும் கிராமத்துப் பெண்ணாக சுகன்யா கச்சிதம்.

கிராமத்துக் கட்டிலில் சற்று நேரம் மனம் அயர்கிறது.

– சுந்தர்ஜி

சொத்துக்களை விற்கிறீர்களா?

என் எச் பி 9% கேபிடல் பாண்டுகளை வாங்குங்கள். நிலம், வீடுகள், பங்குகள், பிணையங்கள், நகைகள் போன்ற நீண்டகால சொத்துக்களை விற்று மூலதன இலாபத்திலே 100% வரி விலக்குப் பெறுங்கள். என்எச்பி 9% கேபிடல் பாண்டுகளினால் உங்களுக்கும் சரி, உங்கள் மூலதனத்திற்கும் பெருமளவு ஆதாயங்கள் உண்டு.



- உங்கள் முதலீடு ஆண்டொன்றுக்கு 9% வட்டி ஈட்டும். இது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்படும்.
- அல்லது முதலீடு செய்த தேதியிலிருந்து ரூ. 1000-க்கு ரூ. 240 என்னும் விகிதத்தில், முழு கால வரம்பாகிய 3 ஆண்டுகளுக்கும் தள்ளுபடியின் அடிப்படையில் முன் கூட்டியே ஆண்டொன்றுக்கு 9% என்னும் விகிதத்தில் வட்டியை பெற்றுக் கொள்ளவும் செய்யலாம். இதில் இடைக்காலமாகிய 3 மாதங்களுக்கான வட்டியும் முழுமையாக அடங்கும். அதனால் ஒரு நாளைய வட்டியைக்கூட நீங்கள் இழப்பதில்லை.
- வருமான வரி சட்டம் 1961, பிரிவு 54 E -ன் கீழ் மூலதன இலாப வரிக்கு விலக்குண்டு.
- வட்டித் தொகையின் மீது, அது வழங்கப்படும் நிலையில் வரி கழிக்கப்படாது.
- சொத்து வரி சட்டம் 1957, பிரிவு 5 (1)(xvi) மற்றும் 5(1A) இவற்றின் கீழ் ரூ. 5 இலட்சம் வரையிலான தொகைக்கு, இதர தகுதியுள்ள ஆஸ்திகளுடன் வரி விலக்கு உண்டு.
- வருமான வரி சட்டம் 1961, பிரிவு 80L-ன் கீழ் வட்டித் தொகைக்கு வரி விலக்கு உண்டு.
- இது சம்பந்தமான, செலுத்தும்-செலவுகள் என் எச் பியைச் சார்ந்ததாகும்.
- நாட்டிலுள்ள 150க்கும் மேற்பட்ட இடங்களில் ஆண்டு முழுதும் சமவிலைக்கு இது கிடைக்கும்.
- வீடு கட்ட நிதியுதவி வழங்குவதில் நாட்டின் தலையாய நிறுவனமாகிய எமது முக்கிய குறிக்கோளே, அனைவரும் வீடு கட்ட வேண்டும், அதற்கான நிதியுதவியை அதிகரிக்க உதவ வேண்டும் என்பதே. ஆகையால் இதிலே முதலீடு செய்வதால், நாட்டில் பலர் வீடு கட்டிட நிதியுதவி செய்த மன நிறைவும் கிடைக்கும்.

NATIONAL HOUSING BANK
YOU GAIN THE NATION GAINS
9% CAPITAL BONDS

விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும்/ஏற்கப்படும் இடங்கள் : நேஷனல் ஹவுஸிங் பேங்க் அலுவலகங்கள் (பம்பாய் & டில்லி) • **கேன்ஃபினா அலுவலகங்கள்** • இந்த இஷ்யூவிற்கான 9 பாங்கர்களது, 51 இடங்களிலுள்ள 142, கிளைகள் : அலகாபாத் பாங்க், ஆந்திரா பாங்க், பாங்க் ஆஃப் பரோடா, கனரா பாங்க், சிடிபாங்க் (சாகர் பவன், பம்பாய்), ஃபேர்க்ரோத் ஃபைனான்ஷியல் சர்வீஸஸ், இந்தியன் பாங்க், பஞ்சாப் நேஷனல் பாங்க், ஸ்டேட் பாங்க் ஆஃப் மைசூர், மற்றும் தி வைஸ்யா பாங்க் லிட்.

நேஷனல் ஹவுஸிங் பேங்க்

(ரிஸர்வ் பாங்க் ஆஃப் இந்தியாவினால் முற்றும் உடைமையாக்கப்பட்டது)

வீடு கட்டும் துறைக்கு புதிய பாதை வகுக்கிறது

3 வது மாடி, [illegible] 45 வீர் நரிமன் ரோடு, பம்பாய் 400 023. ஃபோன்: 272702, 274347

5 வது மாடி, இந்துஸ்தான் டைம்ஸ் ஹவுஸ், 18-20 கஸ்தூரிபா காந்தி மார்க், புதுதில்லி 110 001. ஃபோன்: 3712016, 3712036

சிவகாமியின் சபதம்

நாற்பத்து மூன்றாம் அத்தியாயம்

புலிகேசியின் வாக்குறுதி

புலிகேசி சக்கரவர்த்தி முகத்தில் புன்னகையுடன், ''அடிகளே! தங்களுடைய பிக்ஷு விரதத்துக்கு நாட்டியப் பெண் சிவகாமியினால் பங்கம் நேராமலிருக்கலாம். ஆனால், நம்முடைய தென்னாட்டுப் படையெடுப்புக்கு அந்தப் பெண் தெய்வத்தினால் பங்கம் நேர்ந்துவிட்டது!'' என்றார்.

பிக்ஷு வியப்பும் கோபமும் கலந்த குரலில், ''அது எப்படி? படையெடுப்புக்கும் சிவகாமிக்கும் என்ன சம்பந்தம்? மகேந்திர பல்லவனுடைய சூழ்ச்சித் திறமையினால் அல்லவா நமது உத்தேசம் நிறைவேறவில்லை?'' என்று கேட்டார்.

''அடிகளே! மகேந்திரனுடைய சூழ்ச்சித் திறனுக்குத் தங்களுடைய சூழ்ச்சித் திறன் குறைவானதா? யுத்தரங்கத்தில் நாம் சில சமயம் தோல்வியடைந்திருக்கிறோம். ஆனால், அரசியல் தந்திரத்தில் இதற்கு முன்னால் எப்போதாவது நாம் தோல்வியடைந்ததுண்டா? சிவகாமியிடமோ, அவளை ஆட்கொண்ட கலைத் தெய்வத்திடமோ தங்களுக்கு மோகம் ஏற்பட்டிராவிட்டால், மகேந்திர பல்லவன் தங்களைச் சிறைப்பிடித்திருக்க முடியுமா? தங்களுடைய திருவுள்ளத்தைப் பரிசோதனை செய்து உண்மையைச் சொல்லுங்கள்!''

இவ்விதம் புலிகேசி கூறியபோது, பிக்ஷுவின் முகத்தில் தோன்றிய கோபக் குறி மறைந்து, வெட்கம் கலந்த பிடிவாதம் காணப்பட்டது.

தரையை நோக்கித் தலையைக் குனிந்த வண்ணம், ''சக்கரவர்த்தி! இந்த அறிவிழந்த பிக்ஷுவை மன்னித்து விடுங்கள்! சாம்ராஜ்யத்தின் தொண்டுக்கு நான் இனித் தகுதியில்லாதவன். இத்தனை காலமாய் நான் செய்திருக்கும் சேவையை முன்னிட்டு மன்னித்து விடுதலை கொடுங்கள்!'' என்றார் பிக்ஷு.

''அண்ணா! இது என்ன விளையாட்டு?''

''இல்லை, தம்பி! விளையாட்டு இல்லை. உண்மையாகத்தான் சொல்கிறேன். எனக்கு விடை கொடு; நான் போகிறேன்.''

''எங்கே போவதாக உத்தேசம்?''

''எங்கேயாவது மனிதர்களுடைய கண் காணாத இடத்துக்குப் போகிறேன். அஜந்தாவைப் போன்ற இன்னொரு மலைப் பிரதேசத்தைக் கண்டுபிடித்து அதற்குள்ளே, உள்ளே, உள்ளே யாரும் எளிதில் வர முடியாத இடத்துக்குப் போய்விடுகிறேன். அங்கே சிவகாமியை நடனம் ஆடச் சொல்லிப் பார்த்துக் கொண்டே என் மீதி ஆயுளைக் கழித்து விடுகிறேன்.''

''அண்ணா! அப்படித் தனியாகச் சிவகாமியை நீ கொண்டு போய் வைத்துக் கொண்டிருந்தால், அந்தப் பெண் நடனம் ஆடுவாளா?''

''கலைஞர்களின் இயல்பு உனக்குத் தெரியாது, தம்பி! பெரிய சாம்ராஜ்யத்தை ஆளும் சக்கரவர்த்தியின் அதிகாரத்தினால் சிவகாமியை ஆடச் சொல்ல முடியாது. ஆனால், நிற்க நிழலில்லாத இந்த ஏழைப் பிக்ஷுவினால் சிவகாமியை ஆடச் செய்ய முடியும்.''

''ஓஹோ!''

''ஆம், தம்பி! அதனாலேதான் நான் உன்னைப்போல் வேஷம் தரித்திருக்கும் வரையில் அவளை நடனம் ஆடச் சொல்லவில்லை.''

''அண்ணா! இந்தப் பைத்தியம் உனக்கு வேண்டாம். சிகாமியைக் காஞ்சிக்கே திருப்பி அனுப்பிவிடுகிறேன். இல்லாவிட்டால், நம் தளபதிகளில் யாராவது ஒருவனுக்கு அவளைக் கல்யாணம் செய்து கொடுத்துவிடுவோம்.''

பிக்ஷுவின் கண்களில் கோபக் கனல் பறந்தது. ''தம்பி! சிவகாமியைப்

பெண்டாளும் எண்ணத்துடன் அவள் அருகில் நெருங்குகிறவன் யமனுலகம் போக ஆயத்தமாயிருக்க வேண்டும்'' என்றார்.

''அண்ணா! மாமல்லன் யமனுலகம் போய்விட்டானா?'' என்று புலிகேசி பரிகாசக் குரலில் கேட்டார்.

''இல்லை; அந்த நிர்மூடன் அதைக் காட்டிலும் கொடிய தண்டனையை இந்த உலகிலேயே அனுபவிக்கப் போகிறான். கேள், தம்பி! மாமல்லனை இந்தக் கையினாலேயே கொன்று விடத் தீர்மானித்திருந்தேன். இரண்டு மூன்று தடவை சந்தர்ப்பங்களும் வாய்த்தன. ஆனால், கடைசி நேரத்தில் என் மனத்தை மாற்றிக் கொண்டேன்.''

''ஆகா! நீ மட்டும் உன் மனத்தை மாற்றிக் கொள்ளாமல் மாமல்லனைக் கொன்றிருந்தால், பல்லவ இராஜ்யத்தில் இப்போது வராகக் கொடி பறந்து கொண்டிருக்கும். மகேந்திர பல்லவனும் மதுரைப் பாண்டியனும் நம் காலின் கீழ் கிடப்பார்கள்.

''ஒருவேளை அப்படி ஆகியிருக்கலாம். ஆனால், சிவகாமியைத் தன்னுடைய சுகபோகப் பொருளாக்கிக் கொள்ள நினைத்த மாமல்லனுக்கு அது தக்க தண்டனையாகியிராது.''

''இப்போது என்ன தண்டனை?''

''அவனுடைய ஆருயிர்க் காதலியைச் சளுக்கர் கொண்டு போன செய்தி வாழ்நாளெல்லாம் அவனுக்கு நரக வேதனை அளிக்கும். இரவு பகல் அவன் மனத்தை அரித்துக் கொண்டிருக்கும். இதைக் காட்டிலும் அவனுக்குத் தண்டனை வேறு கிடையாது.''

''நல்லது, அண்ணா! இப்போது என்ன சொல்கிறாய்?''

''இராஜரீக விவகாரங்களிலிருந்து அடியோடு விலகிக் கொள்வதாகச் சொல்கிறேன். இருபத்தைந்து வருஷம் உனக்காகவும் சாம்ராஜ்யத்துக்காகவும் உழைத்தேன். இனிமேல் சிலகாலம் எனக்காக வாழ்கிறேன். தம்பி! எனக்கு விடைகொடு! எங்கேனும் ஏகாந்தமான பிரதேசத்தைத் தேடிச் செல்கிறேன்.''

''அண்ணா! இராஜ்ய விவகாரங்களிலிருந்து விலகிக் கொள். அதற்காகக் காடு மலை தேடிப்போக வேண்டாம். வாதாபியிலேயே ஒரு நல்ல மாளிகையைப் பார்த்து எடுத்துக் கொள். வேண்டுமானால் அதில் ஒரு நடன மண்டபமும் கட்டிக்கொள். சிவகாமி அதில் ஆனந்தமாய் நடனமாடட்டும்; நீ பார்த்துக் கொண்டே இரு.''

''தம்பி! மெய்யாகச் சொல்கிறாயா? இதெல்லாம் எனக்காக நீ செய்து தரப் போகிறாயா?''

''நிச்சயமாகச் செய்து தருகிறேன். ஆனால், அதற்கு ஒரு நிபந்தனை இருக்கிறது.''

''நிபந்தனையா? என்னிடமா கேட்கிறாய், தம்பி!''

''நிபந்தனைதான்; ஆனால், உன்னிடம் நான் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளும் நிபந்தனை; உன்னைத் தவிர யாரும் செய்ய முடியாத காரியம். எனக்கு இந்தக் கடைசி உதவியை நீ செய்து கொடு. அப்புறம் உன்னை நான் ஒன்றும் கேட்பதில்லை.''

''அது என்ன?''

''சற்று முன் சொன்னேனே, அதுதான். வேங்கியில் விஷ்ணுவர்த்தனன் படுகாயப்பட்டுக் கிடப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. நாடெல்லாம் கலகமும் குழப்பமுமாய் இருக்கிறதாம். நீ அங்கு உடனே போய் அவனைக் காப்பாற்ற வேண்டும். என்னைப் போல் விஷ்ணுவும் உன் உடன் பிறந்த சகோதரன்தானே?''

''உடன் பிறந்த சகோதரன்தான். ஆனால், அவனுக்கு என்னைக் கண்டால் பிடிப்பதே இல்லை! அவனிடமிருந்து நான் பாரவியைப் பிரித்து விரட்டிய குற்றத்தை அவன் மன்னிக்கவே இல்லை.....''

''அண்ணா! பாரவி கவியை ஏன் விஷ்ணுவிடமிருந்து நீ பிரித்தாய்? அதனால் எப்பேர்ப்பட்ட விபத்துக்கள் நேர்ந்தன!''

''எல்லாம் அவனுடைய நன்மைக்காகத்தான் செய்தேன். அவன் ஓயாமல் கவிதை படித்துக் கொண்டும் எழுதிக் கொண்டும் வீண்பொழுது போக்கிக் கொண்டிருந்தான்....''

புலிகேசி புன்னகை புரிந்தார். மனத்திற்குள், ''என் உடன் பிறந்தவர்களில் இரண்டு பேரில் ஒருவனுக்குக் கவிதைப் பைத்தியம்; இன்னொருவனுக்குக் கலைப் பைத்தியம். புத்தி மாறாட்டம் இல்லாதவன் நான் ஒருவன்தான். அன்று விஷ்ணுவைக் காப்பாற்றியதுபோல் இன்று பிக்ஷுவை நான் காப்பாற்றியாக வேண்டும்'' என்று எண்ணிக்கொண்டார். பின்னர் கூறினார்.

''ஆம், அண்ணா! அவனுடைய நன்மைக்காகவே செய்தாய். உன்னுடைய விருப்பத்தின்படி நான்தான் பாரவியை நாட்டை விட்டுப் போகச் சொன்னேன். ஆனால், அதன் பலன் என்ன ஆயிற்று? பாரவி கங்க நாட்டுக்குப் போனான். அங்கிருந்து துர்விநீதனுடைய மகளைப்பற்றி வர்ணித்து விஷ்ணுவுக்குக் கலியாணம்

அமரர் கல்கி



செய்து வைத்தான். பிறகு காஞ்சி நகருக்குப் போனான். அங்கிருந்து காஞ்சி நகரைப் பற்றி வர்ணனைகள் அனுப்பிக் கொண்டிருந்தான். அதனால் காஞ்சி சுந்தரியின் மேல் எனக்கு மோகம் உண்டாயிற்று.''

''அந்தப் பழைய கதைகளையெல்லாம் எதற்காகச் சொல்கிறாய்?''

''உனக்குப் பிடிக்காவிட்டால் சொல்லவில்லை. ஆனால் இந்தக் கடைசி உதவியை நீ எனக்குச் செய்துவிடு, அண்ணா! நாம்தான் காஞ்சியைக் கைப்பற்ற முடியாமல் திரும்புகிறோம். வேங்கியிலிருந்து விஷ்ணுவர்த்தனனும் தோல்வியடைந்து திரும்பினால் அதைக்காட்டிலும் நம்முடைய குலத்துக்கு அவமானம் வேண்டியதில்லை. இந்த ஒரே ஓர் உதவிமட்டும் செய்துவிடு. உன்னுடன் நமது பாதிப் படையை அழைத்துக் கொண்டு போ!''

புத்த பிக்ஷு சற்று யோசித்துவிட்டு, ''ஆகட்டும், தம்பி; ஆனால், எனக்கு ஒரு வாக்குறுதி தரவேண்டும்!'' என்றார்.

''சிவகாமியைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும் என்பதுதானே? அப்படியே வாக்குறுதி தருகிறேன். இத்தனை காலமும் நீ எனக்குச் செய்திருக்கும் உதவிகளுக்கு இதுகூட நான் செய்ய வேண்டாமா? வாதாபியின் அழகான அரண்மனை ஒன்றில் அவளைப் பத்திரமாய் வைத்து நீ, வரும் வரையில் பாதுகாத்து ஒப்புவிக்கிறேன்.''

''தம்பி! சிவகாமி கலைத் தெய்வம்; அவளிடம் துராசையுடன் நெருங்குகிறவன் அதோகதி அடைவான்.''

''அதை நான் மறக்கமாட்டேன். ஆனால், நடனக் கலையைப் பற்றி நீ சொல்லச் சொல்ல எனக்கே அதில் ஆசை உண்டாகிவிட்டது. சிவகாமியை நடனம் ஆடச் சொல்லி நான் பார்க்கலாமா?''


''அவள் ஆடமாட்டாள்.''

''அவளாக இஷ்டப்பட்டு ஆடினால்....?''

''எனக்கு ஆட்சேபமில்லை.''

''மிகவும் சந்தோஷம்.''

''தம்பி! நம்முடைய பாட்டனாருக்குச் சத்யாச்ரயர் என்று பட்டம் கொடுத்தார்கள். அதே பட்டப் பெயர் உனக்கும் கிடைத்திருக்கிறது. ஒரு விஷயத்திலாவது உன் பட்டப் பெய



ருக்குத் தகுந்தபடி நடந்து கொள்ள வேண்டும்.''

''சத்தியமாகச் சிவகாமியைப் பத்திரமாய்ப் பாதுகாத்து உன்னிடம் ஒப்புவிக்கிறேன்.''

இவ்விதம் புலிகேசிச் சக்கரவர்த்திக்கும், புத்த பிக்ஷுவுக்கும் நடந்த நீண்ட சம்பாஷணை முடிவடைந்தது.

அன்றிரவு இரண்டாவது ஜாமத்திலேதான் இருவரும் சிவகாமி அரைத் தூக்கமாய்ப் படுத்திருந்த இடத்துக்குச் சென்று நிலா வெளிச்சத்தில் நின்று, அவளைப் பார்த்தார்கள்.

நாற்பத்து நாலாம் அத்தியாயம்
நள்ளிரவுப் பிரயாணம்

மணிமங்கலம் போர் நடந்து ஏறக்குறைய ஒருமாத காலம் மகேந்திர பல்லவர் உணர்வற்ற நிலையில் படுத்த படுக்கையாய்க் கிடந்தார். போர்க்களத்தில் அவர் மீது பாய்ந்து காயப்படுத்திய கத்தி விஷந் தோய்ந்த கத்தி, என்று தெரியவந்தது. அரண்மனை வைத்தியர்கள் சக்கரவர்த்தியைக் குணப்படுத்த எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் தக்க பலன் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் திருவெண்காடு நமசிவாய வைத்தியர் வந்து சேர்ந்தார். தளபதி பரஞ்சோதி திருவெண்காட்டுக்கு ஆள் அனுப்பி அவரை வரவழைத்தார். நமசிவாய வைத்தியருடைய சிகிச்சை விரைவில் பலன் தந்தது. மகேந்திரருடைய அறிவும் தெளிவு பெற்றது.

அறிவு தெளிந்ததும் மகேந்திர பல்லவர் முதன்முதலாக ஆயனர்-சிவகாமியைப் பற்றி விசாரித்தார். ஆயனர் கால் ஒடிந்து கிடக்கிறார் என்றும், சிவகாமியைச் சளுக்கர்கள் சிறைப்பிடித்துச் சென்றார்கள் என்றும் தெரிந்ததும் அவர் அடைந்த மனக் கலக்கத்திற்கு அளவே இல்லை. அதனால் குணமான உடம்பு மறுபடியும் கெட்டு விடுமோ என்று பயப்படும்படி இருந்தது.

மாமல்லர் தந்தையைப் பார்க்கச் சென்றபோது, அவரை முன்னொரு நாள் ஆயனர் என்ன கேள்வி கேட்டாரோ, அதையே மகேந்திரரும் கேட்டார். ''நரசிம்மா! சிவகாமி எங்கே?'' என்றார்.

நரசிம்மர் மிக்க வேதனையடைந்தவராய், ''அப்பா! அதைப் பற்றி இப்போது என்ன கவலை? முதலில் தங்களுக்கு உடம்பு நன்றாய்க் குணமாகட்டும்!'' என்றார்.

''மாமல்லா! சிவகாமியிடம் நீ காதல் கொண்டதாகச் சொன்னதெல்லாம் வெறும் வார்த்தை என்று இப்போது தெரிகிறது. இதோ நான் கிளம்புகிறேன், சிவகாமியைக் கண்டுபிடித்துக் கொண்டுவர!'' என்று சொல்லிய வண்ணம் மகேந்திர பல்லவர் படுக்கையிலிருந்து எழுந்திருக்க முயன்றார்.

மாமல்லர் வெட்கமும் பரபரப்பும் கொண்டவராய்க் கூறினார்: ''அப்பா! தங்களுக்கு உடம்பு குணமாவதற்காகவே காத்திருந்தேன். தாங்கள் என்ன சொல்வீர்களோ என்று சந்தேகமாயிருந்தது. தாங்களே இப்படிச் சொல்லும்போது....''

''வேறு என்ன நான் சொல்வதற்கு இருக்கிறது மாமல்லா? ஆயனருடைய சிற்பத் திறமையும், சிவகாமியின் நடனத் திறமையும் இமயத்திலிருந்து இலங்கை வரையில் பரவியிருக்கின்றன. அப்படிப்பட்ட சிவகாமியை அந்த வாதாபி ராட்சதன் கொண்டு போய்விட்டான் என்றால், அதைக் காட்டிலும் பல்லவ குலத்துக்கு வேறு என்ன அவமானம் வேண்டும்? அப்படிப்பட்ட அவமானத்தைச் சகித்துக் கொண்டு உயிரோடிருப்பதைக் காட்டிலும், போர்க்களத்திலேயே என் உயிர் போயிருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்கும்.''

''தந்தையே! இப்படியெல்லாம் பேசவேண்டாம்; தங்களுக்கு உடம்பு குணமானதும் தங்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்படுவதற்கு நானும் தளபதியும் ஆயத்தம் செய்திருக்கிறோம்....''

''என்ன ஆயத்தம் செய்திருக்கிறீர்கள்?''

''படை திரட்டிச் சேர்த்திருக்கிறோம்.''

''புத்திசாலிகள்தான்! படைகளுடன் சென்றால் சிவகாமியையும் கொண்டுவர மாட்டீர்கள்; நீங்களும் திரும்பி வரமாட்டீர்கள்.''

மாமல்லர் வியப்புடன், ''அப்பா! வேறு என்ன செய்வது? தங்களுடைய யோசனை என்ன?'' என்றார்.

''பரஞ்சோதியையும், சத்ருக்னனையும் அழைத்துக் கொண்டு வா! என்னுடைய யோசனையைச் சொல்கிறேன்'' என்றார் மகேந்திரர்.

அருள்வாக்கு

கண்ணுக்கு டான்ஸ், காதுக்குப் பாட்டு, மனஸுக்கு நவரஸங்கள் என்பதாக இந்த்ரிய ஸௌக்யங்களைத் தருவதாகத் தோன்றினாலும் இந்த வித்யைகள் ஸாமவேதத்தை அடிப்படையாகக் கொண்டு உண்டானவை என்பதனாலேயே இவற்றுக்குப் பெருமை ஏற்படுகிறது. வேதங்களுக்குள்ளே தாம் ஸாமமாயிருப்பதாகவும் பகவானே சொல்லியிருப்பதால் இன்னும் பெருமை! மற்ற உபவேதங்களுக்கு, அவற்றுக்கு மூலமாயுள்ள வேதத்தோடு உள்ள ஸம்பந்தத்தை விட காந்தர்வ வேதத்துக்கு ஸாம வேதத்தோடுள்ள ஸம்பந்தம் இன்னும் நெருக்கமாக எல்லோருக்குமே தெரிகிறது. ஸாமகானத்தின் ஸ்வரங்களிலிருந்துதான் ஸப்த ஸ்வரமும் உண்டாயிருக்க வேண்டுமென்று ஸாமகானத்தைக் கேட்கிற எவருக்கும் தெரிகிறது. ஸாமகானம் என்று பெயர் இருப்பதிலிருந்து, அதுவே ஸங்கீத வித்யையுடன் சேர்ந்ததுதானென்று தெரிகிறது. லலிதா ஸஹஸ்ர நாமத்தில் 'ஸாம கான ப்ரியா' என்று அம்பிகைக்கு ஒரு பெயர் சொல்லியிருக்கிறது. சிவனுக்கான அஷ்டோத்தரத்திலும் 'ஸாம ப்ரியாய நம:' என்று ஒரு பெயரைச் சொல்லி விட்டு, உடனே இது அதன் கான விசேஷத்துக்காகத்தான் என்று தெரிவிக்கிறாற்போல், அடுத்ததாக 'ஸ்வரமயாய நம:' என்ற நாமாவைக் கொடுத்திருக்கிறது. மஹா விஷ்ணுவான ஸ்ரீ க்ருஷ்ணன் தம்மை வேதங்களில் ஸாமம் என்று சொல்லிக் கொண் டிருப்பதாகவும் பார்த்தோம்.



இதிலிருந்தே ஸங்கீதம் முதலான காந்தர்வக் கலைகளுக்குள்ள தெய்விகத் தன்மை தெரிய வரும். உபவேதங்களுக்குள் மநுஷ்யனை ரொம்பக் கீழான கேளிக்கைகளுக்கு இழுத்துச் செல்லக்கூடியது என்று தோன்றுகிற காந்தர்வ வித்யையேதான் அவனை ரொம்ப மேலே இழுத்துக் கொண்டு போய், அப்படியே ஈச்வரனோடு ஐக்யமாயிருப்பதற்கும் உதவுகிறது.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

அவ்விதமே மாமல்லர், பரஞ்சோதி, சத்ருக்னன் ஆகியவர்கள் அன்று மாலை சக்கரவர்த்தியிடம் வந்தபோது, அவர் தமது யோசனையைக் கூறினார். பரஞ்சோதியும் சத்ருக்னனும் மாறுவேடம் பூண்டு வாதாபிக்குப் போய்ச் சிவகாமியை அழைத்துவர வேண்டும் என்பதுதான் அந்த யோசனை. அப்படித் திருட்டுத்தனமாய்ப் போய்ச் சிவகாமியை அழைத்துக் கொண்டு வருவது பற்றி முதலில் மாமல்லர் ஆட்சேபித்தார். திருட்டுத்தனமாய்க் கொண்டு போகப்பட்டவளை அதே முறையில் திருப்பிக் கொண்டு வருவதில் தவறில்லை என்று மகேந்திரர் சொன்னார். அதோடு அவ்விதம் இப்போது ஒருதடவை வாதாபிக்குப் போய்விட்டு வருவது பின்னால் அவர்கள் வாதாபி மேல் பகிரங்கமாகப் படையெடுத்துப் போவதற்கும் அநுகூலமாயிருக்கும் என்று மகேந்திர சக்கரவர்த்தி தெரிவித்தார்.

வாதாபி மீது படையெடுக்கும் யோசனை மகேந்திர பல்லவருக்கு இருப்பது தெரிந்ததும் மாமல்லருக்கும் உற்சாகம் உண்டாகித் தம்முடைய ஆட்சேபங்களையெல்லாம் நிறுத்திக் கொண்டார். எல்லாம் பேசி முடிந்ததும் மாமல்லர் எழுந்து, தந்தைக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து, ''அப்பா! தளபதியுடன் நானும் போய் வருகிறேன். கருணை கூர்ந்து அநுமதி கொடுக்க வேண்டும்!'' என்று கெஞ்சுகிற குரலில் விண்ணப்பம் செய்தார்.

மகேந்திரர் முதலில் இதை மறுதலித்தார். கடைசியில், மாமல்லரிடம் முரட்டுத்தனமான காரியங்களில் இறங்குவதில்லை என்பதாகவும், எல்லா விஷயங்களிலும் தளபதி பரஞ்சோதியின் ஆலோசனைப்படி நடப்பதாகவும் உறுதி பெற்றுக்கொண்டு, விடை கொடுத்தார்.

இரண்டு தினங்களுக்குப் பிறகு நடுநிசி வேளையில், காஞ்சி அரண்மனை முற்றத்தில் ஆறு குதிரைகள் மீது ஆறு பேர் ஆரோகணித்துப் பிரயாணத்துக்கு ஆயத்தமாய் நின்றார்கள். தாடி, மீசை வைத்துக் கட்டிக்கொண்டிருந்த அந்த வேஷதாரிகள் மாமல்லர், பரஞ்சோதி, சத்ருக்னன், குண்டோதரன், கண்ணபிரான், அவனுடைய தந்தை அசுவபாலர் ஆகியவர்கள்தான்.

அப்படி நின்ற அறுவரும் அரண்மனை மேல்மாடத்தின் முன்றிலை அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் அந்த முன்றிலுக்கு மகேந்திர சக்கரவர்த்தியும் புவனமகாதேவியும் வந்து சேர்ந்தார்கள்.

''புறப்படுங்கள்; ஜயத்துடன் சீக்கிரம் திரும்புங்கள்'' என்று மகேந்திர பல்லவர் கூறியதும் மாமல்லரும் பரஞ்சோதியும் அவர்களைப் பார்த்து வணங்கிவிட்டுக் குதிரைகளைத் தட்டிவிட்டார்கள்.

குதிரைகள் அரண்மனை வெளி வாசலைக் கடந்து வீதிக்குப் போனதும், புவன மகாதேவியை மகேந்திர பல்லவர் பார்த்து, ''தேவி! இராஜ குலத்தில் பிறந்த தற்குத் தண்டனை இது!'' என்று சோகம் ததும்பும் குரலில் கூறினார்.

(தொடரும்)

அப்பா தேடி வைத்த

கமலா கந்தசாமி

“**வை**தேகி... கொஞ்சம் தண்ணி கொண்டு வா...'' நடந்து வந்த களைப்புடன் திண்ணையில் வந்து அமர்ந்தார் ராகவன்.

''ஏங்க, போன காரியம் என்ன ஆச்சு?'' கையில் தண்ணீர்ச் செம்புடன் அவசரமாய் ஓடி வந்த வைதேகி கேட்டதும், ''ம்...'' பதில் சொல்லாது கூரையைப் பார்த்தார் ராகவன்.

அந்த 'ம்ம்' என்ற பெருமூச்சில் இருந்தே ஏதோ சிக்கல் என்பதைப் புரிந்து கொண்ட வைதேகி, அதற்கு மேல் கேட்காது நின்றாள்.

விடுவிடுவென ஒரு செம்புத் தண்ணீரையும் ஒரே மூச்சில் குடித்த ராகவன், ''வைதேகி...'' என்றார்.

செம்பை எடுத்துக் கொண்டு உள்ளே போகப் புறப்பட்ட வைதேகி நின்றாள்.

''மாப்பிள்ளைக்கு ஸ்கூட்டர் அவசியமாம். அவங்க வீட்ல மாப்பிள்ளையோட அண்ணனுக்கும் ஸ்கூட்டர் வந்ததாம். தம்பிக்கு இல்லேன்னா நல்லா இருக்காதாம். சம்பந்தி அம்மா கண்டிப்பாச் சொல்லிட்டாங்க...''

''ஏங்க.... ஸ்கூட்டர் என்ன விலைங்க இருக்கும்?''

''இப்போ வண்டியெல்லாம் ஏகப்பட்ட விலை ஏறிடிச்சி வைதேகி... எப்படியும் இருபதாயிரத்துக்குக் குறையாது... இருபது பவுன் நகை... பாத்திரம் பண்டம்... எல்லாத்துக்கும் ரெடி பண்ணியாச்சு... இன்னும் ஒரு பத்துப் பதினைந்தாயிரம் இருந்தாச் சமாளிச்சிடலாம்....''

''ஏங்க... நம்ம மகன் ரகுகிட்டே போய்க் கேட்டுட்டு வாங்களேன்...''

''எனக்கு அவன் கொடுப்பான்னு தோணலே வைதேகி.''

''அதுக்காக விட்டுட முடியுமா? நீங்க ரிட்டையர் ஆகி வந்த போது கிடைத்த பணத்துல சரிபாதி அவனுக்கும்தான் கொடுத்தீங்க... படிக்க வச்சி... அதோட உங்ககிட்டே படிச்ச பையனோட கம்பெனியிலே சொல்லி வேலை கூட நீங்கதானே வாங்கிக் கொடுத்தீங்க...''

''அதெல்லாம் சரி வைதேகி. அதை நாம சொல்லிக் காட்ட முடியுமா? அவனா உணரணும். அப்படி அவன் உணர்ந்து இருந்தா, தானே ஓடி வந்து ஏம்ப்பா... மாப்பிள்ளை வீட்ல என்ன சொன்னாங்க? நீங்க என்ன ஏற்பாடு செய்தீங்கன்னு கேட்டிருக்க வேண்டாமா...? ஆள் இந்தப் பக்கம் கூட தலை காட்டலே... நான் வரலே. வேணுமின்னா நீ மட்டும் போய் ஒரு வார்த்தை கேட்டுடு... இல்லாட்டி இருக்கவே இருக்கு கடைசியா இந்த வீடு... பார்த்துக்கலாம்...''

''சரிங்க... வீட்டை வித்துட்டு எங்கே போறது? இன்றைக்கே நான் போய்க் கேட்டுட்டு வந்துடறேன்.''

வைதேகி அன்று மாலையே கிளம்பினாள். அம்மாவைப் பார்த்ததுமே ரகு திடுக்கிட்டான்.

''வாம்மா...'' ஒப்புக்காக ஒரு வார்த்தை மட்டுமே கேட்டான்.

''என்னங்க... இங்கே கொஞ்சம் வாங்களேன்'' மனைவி மங்களம் சமையல் அறையிலிருந்து அலாரம் அடித்தாள். அது எச்சரிக்கை மணி என்பது புரிந்தது.

''நிச்சயம் பணம் கேட்கத்தான் வந்திருக்கணும். அ ம் ம ா கேட்டுட்டான்னு சரின்னு சொல்லிடாதீங்க.... நமக்கு உங்க அப்பா என்ன ஆஸ்தி சேர்த்து வச்சிருந்தார்? ஒரு நல்ல வீடு உண்டா? நிலம் உண்டா? இப்போதான் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி வர்றோம்.....''

''சரி மங்களம்...'' தலையாட்டினான் ரகு. இப்போதுதான் ஒரு கலர் டீ.வி. வாங்கலாம் என்று பி.எப்.பில். லோன் போட்டு பத்தாயிரம் சேர்த்திருந்தான். டீ.வி.க்கே இன்னும் ஐயாயிரத்துக்கு எங்கே போவது என்று யோசனை... மங்களம் வேறு தனது தங்கை டீ.வி. வாங்கியதைச் சொல்லி, நாமும் வாங்கியே தீர வேண்டுமென்று அடம் பிடிக்கிறாள்...

யோசனையுடன் கூடம் வந்தான் ரகு..

''ரகு...'' ஆரம்பித்தாள் வைதேகி.

ரகுவிற்கு வயிற்றைக் கலக்கியது. இருந்தாலும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான். 'அப்பா என்ன சொத்துச் சேர்த்து வச்சிட்டார். இதுக்கு நாம என்ன செய்ய வேண்டிக் கிடக்கு' என்று மனத்தைத் திடப்படுத்தினான்.

''ரகு... மாப்பிள்ளை வீட்ல... பையனுக்கு ஸ்கூட்டர் அவசியம் வேணும்னு சொல்றாங்க.... பையன் நல்ல பையன். லட்சணமா இருக்கான். பாங்க்ல உத்யோகம். கை நிறையச் சம்பாதிக்கிறான். குடும்பமும் தேவலாம்... எப்படியும் செய்துட்டாத் தேவலாம்.''

''ம்....'' முகத்தை ஜன்னல் பக்கமாய்த் திருப்பியபடி ஒப்புக்காகக் கேட்டுக் கொண்டிருந்தான் ரகு.

''அதனால... ரகு..... ஒரு பதினைந்தாயிரம் ரூபாய் கொடுத்தீன்னா....''

''பணமா? இப்போ ஏதும்மா...?''





மாதம் ஒரு நகரம்

வேலூர்க்காரர்களே, கவனியுங்கள்!



'**மா**தம் ஒரு நகரம்' என்னும் திட்டத்தின் கீழ், ஐந்தாவது நகரமாக வேலூர் (வடார்க்காடு மாவட்டம்) நகரத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். மார்ச் முதல் வாரத்தில் வேலூருக்கு வந்து, குறைகளையும் நிறைகளையும் நேரில் அலசிப் பார்த்து எழுதப் போகிறோம்.

எனவே, எங்கள் அலசலுக்கு வசதியாக, வேலூர்வாசிகளான அனைவரும் தங்களூரிலுள்ள குறைகள், நிறைகள் தனிமனித சாதனைகள், அரசு செய்ததும் செய்யத் தவறியதும் அதிகாரிகளின் மெத்தனங்கள் மற்றும் இளைஞர் அமைப்புகளின் ஆக்கப் பணிகள் என்று பல்வேறு கோணங்களிலும் எங்களுக்குச் சுருக்கமாக எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

வேலூர்வாசிகளான உங்கள் கடிதங்கள் கல்கி அலுவலகத்துக்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி : 29.2.92.

உறையின் மேல் 'மாதம் ஒரு நகரம், வேலூர்' என்று மறக்காமல் குறிப்பிடுங்கள்.

- ஆசிரியர்

''இப்படி சொல்லிட்டா எப்படி ரகு? நடக்கிறது உன் தங்கச்சி கல்யாணம்... உனக்கும் பொறுப்பு இருக்கு!''

''ரிட்டயர் ஆகி வந்த போது கிடைத்த பணத்துல தான் பாதிக்கு மேல அவ கல்யாணத்துக்குன்னு அப்பவே அப்பா பாங்க்லே போட்டாரே... அதுல செய்துக்க வேண்டியது தானே...''

''எல்லாம் அதுலதான் ரகு நடக்குது... இந்த ஸ்கூட்டர் செலவுதான்...''

''அப்படின்னா இந்த இடம் வேண்டாம்னு சொல்லிட்டு நம்ம தகுதிக்கு ஏற்பப் பார்த்துட வேண்டியதுதானே?'' ரகு கோபமானான்.

''என்ன ரகு இப்படிப் பேசறே... உன்னைப் படிக்க வச்சு, வேலை வாங்கிக் கொடுத்து, கல்யாணமும் பண்ணி வச்ச அப்பாவுக்கு நீ காட்டற நன்றியா இது?''

''ஆமாம்... பெரிய கலெக்டர் உத்யோகம் வாங்கிக் கொடுத்திட்டீங்க... ஒவ்வொருத்தனும் பிள்ளைக்கு வீடு, வாசல், நெலம்னு சொத்துச் சேர்த்து வச்சிருக்காங்க... நீங்க என்னடான்னா... இந்த பி.ஏ. படிப்புக்கும்... ரெண்டாயிரம் சம்பளத்துல தனியார் கம்பெனி வேலைக்கும் பங்கு கேட்க வந்திட்டீங்க....''

'நம்ம மகன் ரகுவா இப்படி பேசறான்?' நம்ப முடியாது வைதேகி மகனைப் பார்த்தாள்.

''இதோ பாரும்மா... நிச்சயம் என்னால எதுவும் தர முடியாது!'' உறுதியாய் மறுத்தான்.

''சரிப்பா... கல்யாணத்துக்காவது வராம இருந்திடாதே'' என்று விரக்தியுடன் திரும்பினாள் வைதேகி.

''**எ**ங்கே... டீ.வி. வாங்க வச்சிருந்த பணத்தை எடுத்துக் கொடுத்துடுவீங்களோன்னு பயந்துட்டேன்.''

மாமியார் வெளியில் போகும் வரை சமையல் அறையிலேயே பட்டும் படாமல் இருந்த மங்களம் வெளிவந்தாள்.

''நானே இன்னும் ஐயாயிரத்துக்கு என்ன செய்றதுன்னு புரியாம திண்டாடிட்டு இருக்கேன். இப்போ மிகக் குறைந்த விலை கலர் டீ.வி.யே பதினைந்தாயிரம் ஆகுது... மங்களம்...''

''என்ன செய்வீங்களோ ஏது செய்வீங்களோ... நாளைக்குள் கலர் டீ.வி. வீட்டுக்கு வந்துடணும். லீவுக்கு வர்றேன்னு தங்கச்சி லெட்டர் போட்டிருக்கா. அவ வர்றதுக்குள் வீட்ல கலர் டீ.வி. இருந்தே ஆகணும்...''

''பார்க்கலாம்...'' என்றபடி ஆபீஸிற்குக் கிளம்பிய ரகு, ஆபீஸிலும் ''ஐயாயிரத்துக்கு என்ன வழி?'' என்று யோசித்துக் கொண்டே இருந்தான்.

அப்போது, ''ஸார்... வணக்கம்...'' என்ற குரல் கேட்டு ஃபைலை மூடி விட்டு நிமிர்ந்தான் ரகு.

''யாரு...? ஓ... ரகுராமன் கம்பெனியா? இன்னும் ஆர்டர் எந்தக் கம்பெனிக்குத் தர்றதுன்னு முடிவு செய்யலே... முடிவு செய்ததும் தபாலில் தெரியப்படுத்தறோம் சார்'' என்ற ரகு மூடிய ஃபைலைப் பிரித்தான்.

''ஸார்... அதுக்கில்லே... நீங்க ரெக்கமண்ட் பண்ணி எழுதிட்டா முதலாளி கண்ணை மூடிட்டுக் கையெழுத்துப் போட்டுடுவார்...''

''சரி... அதனால...?''

''இந்த ஆர்டர் கிடைச்சா எங்களுக்கும் நல்லது... அதோட... இந்த கவர்ல ஐயாயிரம் தனியா இருக்கு... இது உங்களுக்கு....''

திறந்திருந்த மேஜை டிராயரில் ஒரு கனமான காக்கிக் கவரை வைத்தார் வந்திருந்தவர்.

கலர் டீ.வி. கண்ணில் விரிந்தது!

அவசரமாய் மேஜை டிராயரை மூடிய ரகு, ''சரி... போங்க... பார்த்துக்கறேன்...'' என்றான் மெல்லிய குரலில்.

''தாங்க்ஸ் சார்...''

வந்திருந்த ரகுராமன் கம்பெனி நபர் போனதும், அவசரம் அவசரமாய் அந்தக் கம்பெனி ஆர்டர் ஃபைலை எடுத்து... அதற்கே ஆர்டர் கொடுக்க சிபாரிசு செய்து.. அன்றே கையெழுத்திற்காக அனுப்பியும் வைத்தான் ரகு.

மதிய இடைவேளையில் மேஜைக்குள் வைத்து யாருக்கும் தெரியாது கவரைப் பிரித்து எண்ணினான்.

புத்தம் புதிய ஐம்பது நூறு ரூபாய் நோட்டுகள்!

'ச்சே... லஞ்சம்' என்று மனத்தில் லேசாய் உறுத்திய உணர்வை மனைவியின் கலர் டீ.வி. ஆசை விரட்டியது.

'யார்தான் இந்தக் காலத்தில் வாங்கலே?' மனதைச் சமாளித்தான்.

மாலை 4:30...

'இன்னும் முப்பது நிமிடத்தில் வீடு போய் மனைவியை அழைத்துப் போய் டீ.வி. வாங்கி விடலாம்.'

மனத்தில் கனவு ஒன்று கலர் கலராய் விரிந்தது.

''சார்... உங்களை முதலாளி கூப்பிடறார்.''

ப்யூன் வந்து சொன்னதும்... கவரை ஹேண்ட் பேக்கில் வைத்து மேஜை டிராயரை பூட்டி விட்டு மாடிப் படி ஏறினான்.

''ரகு...''

ரகு உள்ளே நுழைந்ததும் கோபத்தில் கத்தினார் கம்பெனி முதலாளி ஈஸ்வரன்.

''என்ன சார்?'' பதறினான் ரகு.

''எப்படி இந்தக் கம்பெனிக்கு ரெக்க



பாண்டித்துரை

நடைபெற்ற ஒரு கொலையில் சம்பந்தப்படுத்தப்பட்டுக் கைதாகி விடுகிறார் பிரபு. உண்மைக் குற்றவாளி தொடர்பான உரையாடல் தற்செயலாக ஒரு கேஸட்டில் பதிவாகி விடுகிறது. அப்படிப் பதிவாகியுள்ள ஆபத்தைப் பற்றி அறியாத கொலையாளி குடிபோதையில் அந்தக் கேஸட்டைத் தூக்கி எறிய, தெருவில் போய்க் கொண்டிருக்கும் திருவிழாக் கூட்டத்தினரின் மத்தியில் அது வந்து விழ, நடப்பவர்களின் பாதங்கள் உதைத்து உதைத்துக் கடைசியில் விழாவுக்காகப் பாட்டுப் போடுபவர் வசம் வந்து சேர, அதுவும் ஒரு பாடல் கேஸட் என்று நினைத்து அவர் அதனை டேப் ரிகார்டரில் செருகி ஆன்

மண்ட் பண்ணி அவசரமாய் அனுப்பினே...?''

அந்த ஃபைலைத் தூக்கி விசினார் ஈஸ்வரன்.

''சார்... அவங்க... இதுக்கு முன்னாடி கூட பல தடவை நம்ப கம்பெனிக்கு காண்ட்ராக்ட் மூலம்....''

''அந்த லட்சணம்தான் போன தடவையே தெரிஞ்சு போச்சே... இனி எந்த ஆர்டரும் அதுக்குத் தர்றதில்லேன்னு நான் சொல்லலே....''

''ஸாரி மறந்துட்டேன் சார்... மன்னிச்சிடுங்க ஸார். அதைக் கான்ஸல் பண்ணிடலாம் ஸார்.''

தடுமாறினான் ரகு.

''சரி... அப்படின்னா... அந்தக் கம்பெனியிடம் நீ வாங்கிய லஞ்சத்தையும் திருப்பிக் கொடுத்துடு...''

மிக மெல்லிய குரலில் சொல்லி விட்டு ரகுவின் முகத்தை ஏறிட்டார் ஈஸ்வரன்...

''சார்... வந்து... இல்லே சார்....'' இணறினான்.

''எனக்கு எல்லாம் தெரியும் ரகு. உன்னை வேலையை விட்டு இந்த நிமிஷமே அனுப்பி இருப்பேன். பட்... முதல் முறை என்பதால் உன்னை மன்னிக்கிறேன்... ஏன் தெரியுமா?''

தலைகுனிந்தான் ரகு.

''உன்னை மன்னிக்கிறது உனக்காக இல்லே. உன் அப்பாவுக்காக... எவ்வளவு உத்தமர் உன் அப்பா! நேர்மை, சத்தியம் என்பதற்கு உதாரணமா வாழ்ந்துட்டு இருக்கிற ஒருத்தருக்கு நீ மகனாகப் பிறந்தியேன்னுதான் ரகு எனக்கு வருத்தமா இருக்கு. என் மனசில் நேர்மை, உழைப்பு, நம்பிக்கையை விதைத்த அந்த ஆசிரியரின் மகன் என்ற ஒரே காரணத்துக்காக... உன்னை இந்தத் தடவை மன்னிக்கிறேன். போ....''

''ரியலி வெரி சாரி ஸார்... மன்னிச்சிடுங்க சார்...'' வெளியில் வந்தான் ரகு.

செய்ய, ஒலி பெருக்கி உண்மையை ஊர் முழுவதும் அலற விடுகிறது....

இப்படித்துண்டு துண்டாகச் சில 'பளிச்'கள். இவற்றைத் தவிர்த்தால்......

எழுதப் படிக்கத் தெரியாத வெகுளியாக ஏற்கெனவே பார்த்தாயிற்று பிரபுவை. எனவே, அவருடைய பார்வையில், பேச்சில், சிரிப்பில், அடக்கத்தில் வெளிப்படும் குழைவும் பவ்யமும் மனத்தை நெகிழ வைக்க மறுக்கின்றன.

துள்ளலும் துடிப்பும் குறும்புத்தனமும் நிறைந்த பணக்கார வீட்டுப் பெண்ணாக முன்பே தெரிந்து கொண்டாயிற்று குஷ்புவை. எனவே, கல்மிஷமில்லாத அவருடைய வெளிப்பாடுகள் எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்த முடியவில்லை.

செல்வம் விளைவிக்கும் செருக்கையும் அதன் பலனாகப் புலப்படும் ஆணவத்தனமான நடையுடை பாவனைகளையும் பல முறை வெளிப்படுத்தியிருப்பவர் ராதாரவி. எனவே, அந்த அகங்காரம் கொண்டு வரும் வில்லத்தனம் எடுபடாமல் போய் விடுகிறது.

ஏழையானாலும் பண்புள்ளவராக, மகன் மேல் சொல்லொணாப் பாசம் மிக்கவராகப் பார்த்து ரசித்தாயிற்று மனோரமாவை. எனவே, அதுபோலவே இப்போதும் பார்க்கும்போது பச்சாதாபத்துக்கு இடமில்லாமல் போய்விடுகிறது.

நீண்டு கொண்டே போகும் அலுப்புப் பட்டியல்... நடிகர்கள் பாவம், என்ன செய்வார்கள்? கதையும் திரைக்கதையும் இயக்கமும் பழைய, புளித்துப் போன மாவில் வார்க்கப்பட்ட தோசை!

- சி. ஆர். கே.

உடல் வியர்த்துச் சட்டையெல்லாம் நனைந்திருந்தது...

'அப்பா... நீங்கள் ஆஸ்தி சேர்த்து வைக்கலைன்னு நினைத்து கோபப்பட்டேன்... ஆனால் எனக்கு மிகப் பெரிய ஆஸ்தியாய்... ராகவன் சார் பிள்ளைங்கற ஆஸ்தியைச் சேர்த்து வச்சிருக்கீங்களே... அது போதும் அப்பா...'

மனத்திற்குள் நினைக்கும் போது பெருமையாய் இருந்தது.

அன்று மாலை... வீட்டுக்கு வந்ததும் அவசரமாக ஓடி, "அப்பா... இதுல பத்தாயிரம் இருக்கு வச்சுக்கங்க... மேற்கொண்டு கம்பெனியில் லோன் போட்டு, புதுசா ஸ்கூட்டர் ஒன்று தவணையில் வாங்கித் தந்திடறேன்..."

ரகு சொன்ன போது வைதேகி ஆச்சரியப்பட்டாள். ஆனால் ரகுவின் மனத்தில் அப்பா தேடி வைத்த ஆஸ்தி நிறைந்திருந்தது.

உங்கள் செல்வம் :

அரசுத்துறைக்கு 'டாடா' சொல்லுங்கள்!



■ நரசிம்மராவ் : தயங்கி நிற்கிறார்



■ சந்திரசேகர் : ''விழித்துக் கொண்டார்...''

"அரசாங்கமே பெரிய, பெரிய தொழில்களை ஏற்று நடத்தினால்தான் பொருளாதாரம் செழிக்கும்'' என்பது நேரு அரசின் கொள்கை. இந்தக் கொள்கை காரணமாக உருவான அரசுத் துறைத் தொழிலகங்களின் எண்ணிக்கை 200. இவற்றில் மொத்தமாக முதலீடாகியுள்ள மக்களின் வரிப் பணம் ஒரு லட்சம் கோடி! ஒரு தொழில் தொடங்கினால் அது, குறைந்த பட்சமாகப் பத்து சதம்தான் லாபம் அடைகிறது என்று வைத்துக் கொண்டால் கூட, மொத்தத்தில் ஒரு லட்சம் கோடி ரூபாய் முதலீட்டுக்கு, அரசு ஆண்டுதோறும் 10,000 கோடி லாபம் பெற வேண்டும். இப்படி நடந்திருந்தால் நமது தேசத்தில் பொருளாதாரப் பிரச்னையே இராது. ஆனால் நடக்கவில்லை. இரண்டு சதவீத லாபம் கூடக் கிடைக்கவில்லை. 'ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் உருப்படாது' என்பது போல, அரசு புகுந்த தொழிலகங்கள் பலவும் பெருநஷ்டமே அடைந்தன. இந்த நஷ்டங்கள் மேலும் மேலும் மக்களின் வரிப் பணத்தை விழுங்கி ஏப்பம் விட்டன. நாட்டின் பொருளாதாரம் நாசமாய்ப் போனது. இவற்றை மூடிவிடவும் முடியாமல் அரசியல் காரணங்கள் குறுக்கிட்டன!

முதன் முதலாக விழித்துக் கொண்டது சந்திரசேகர் அரசுதான். பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களின் பங்குகளில் ரூ. 2500 கோடி பெறுமானமுள்ள பங்குகளைத் தனியார் துறைக்கு மாற்றிவிட முடிவு செய்தது. இதன் மூலம், 1. அரசுக்கு உடனடி வருவாய் கிட்டும்; 2. தனியார் வசம் பகுதி அளவுக்கு ஒப்படைக்கப்பட்ட நிறுவனங்கள் நன்றாக இயங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாகச் சந்திரசேகர் அரசு கவிழ்ந்து விட்டது.

அடுத்து வந்த நரசிம்மராவ் அரசு இந்தத் திட்டத்தைக் கைவிடாமல் தொடர்கிறது. இதற்கு ஒரு முக்கிய காரணம் சர்வதேச நிதி நிறுவனம் இந்திய அரசுக்குச் "சாவி'' கொடுப்பதாகும். படிப்படியாக இந்தக் காரியம் நிறைவேறத் தடையாக இருப்பது இடதுசாரிகளின் எதிர்ப்பு. நரசிம்மராவ் அரசு சிறுபான்மை அரசாக இருப்பதால் தைரியமாகச் செயல்பட முடியவில்லை. எனவே இடதுசாரிகளைத் திருப்திப்படுத்த, இப்போது, ''பங்குகளைத் தனியாருக்குத் தரப் போவதில்லை; 'யூனிட் டிரஸ்ட்' போன்ற 'மியூசுவல் ஃபண்ட்' நிறுவனங்களுக்கே மாற்றப் போகிறோம்'' என்கிறார்கள். இதனால், அரசின் முதல் நோக்கம் நிறைவேறும். அதாவது, உடனடியாக 2500 கோடி பணம் கிடைக்கும். ஆனால் இரண்டாவது நோக்கம் செவ்வனே நிறைவேறாது. அதாவது, அரசுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு பெருமளவில் அபிவிருத்தி அடையாது. காரணம், தனியாரின் நிர்வாகப் பொறுப்பு இராது. லாப நோக்கு பின்னுக்குத் தள்ளப்பட, மறுபடி நஷ்டமே ஏற்படும் வாய்ப்புத்தான் அதிகம்.

எனவே, அரசு தயக்கத்தை உதறித் தள்ளிவிட்டு, அரசுத் துறைத் தொழிலகங்கள் பலவற்றைத் தனியார் வசம், பங்குகளை விற்பதன் மூலம் ஒப்படைப்பதே சிறந்தது. இன்று நாட்டில் பல பெரிய பெரிய தொழிலகங்கள் தனியார் துறையில் லாபகரமாக நடந்து கொண்டிருக்கின்றன. இவையும் அப்படி மாறும். அரசுக்குக் கம்பெனி வரிகள் மூலம் நல்ல வருமானம் கிடைக்கும்.

பங்கு மார்க்கெட்டில் முதலீடு செய்ய ஆர்வமாய் உள்ள பொது மக்களும் நல்லாதரவு தருவதுடன், லாபப் பங்கீடு பெற்றுப் பயனடையவும் செய்வார்கள். மொத்தத்தில் தேசப் பொருளாதாரம் சிறக்கும். நரசிம்மராவ் ஜாக்கிரதையாகச் செயல்பட வேண்டும்தான். ஆனால் சிம்மம் பூனையாகி விடக்கூடாது.

- வி. கோபாலன்

* கட்டுரை எழுதப்பட்ட பிறகு, அரசு நான்கு மியூசுவல் ஃபண்டு நிறுவனங்களுக்கு ரூ. 2500 கோடி பெறுமானமுள்ள பங்குகளை மாற்றி விட்டதாகச் செய்தி கிடைத்துள்ளது.

நல்ல அம்மாவுக்கு நல்லாத் தெரியுமே!

அம்மாவுக்குத் தெரியுமே....



வளரும் பிள்ளைகளுக்கு வலிமை தரும் புரதச்சத்துடைய உணவு தான் தேவையென்று. வலிமை தரும் உணவுக்கு சோயாதான் சரியான மூலமென்றும் அம்மாவுக்குத் தெரியும். அதனால்தான், அவரின் தினசரி சமையலில் ''விகர்'' தவிர்க்க முடியாததாகி விடுகிறது. சமையலில் 10-15% ''விகர்'' கலந்தால் போதும். மொத்த உணவுமே சத்துணவாகிறது.



சப்பாத்தி, பூரி, இட்லி தோசை போன்றவற்றுக்கு மட்டுமின்றி ஜிலேபி, பக்கோடா போன்றவற்றுக்கும் ''விகர்'' உன்னதமான கலவையாகத் திகழ்கிறது.

''விகர்'' ஒவ்வொருவருக்கும் உகந்த உணவு

விளையாட்டு வீரர்களுக்கு, ''விகர்'' வலிமையை சேமித்து வெற்றியினைத் தருகிறது.



தாய்மை நிலையிலுள்ள பாவையருக்கு, ஊட்டச்சத்து மிகுந்த உணவாய்த் திகழ்கிறது. நீரிழிவு நோயாளிகளுக்கு உணவு முறையை சமப்படுத்தி உறுதுணை புரிகிறது.

சக்தி சோயாஸின் ''விகர்''

ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்தின் தொழில் நுட்ப உதவியோடு, தரமுயர்ந்த சோயாபீனில் தயாராகி வருகிறது ''விகர்''

உன்னதமான உணவுக்கலவை



100%
சைவ உணவு
50%
புரதச்சத்து



விகர் அம்மா... நல்ல அம்மா!

சக்தியின் தயாரிப்பு

SASI/13/92

காற்றும் வெளியில்

17

காலையில் கண் விழித்த போது, நேற்று நடந்ததெல்லாம் கனவாக இருக்க வேண்டும் என்று தோன்றிற்று. நிஜம் போலவே கனவு வருவது போல, கனவு போலவே நிஜம். ஆனால் இது கனவாக இருக்க முடியாது. அவமான உணர்வு வியாபித்தது.

''மறக்க முயற்சி பண்ணு'' என்றார் அப்பா நேற்று. அது சுலபம் என்று தோன்றவில்லை. கண்ணை மூடினாலும் பளிச்சென்று சினிமாக் காட்சி போல் தெரிந்தது. அந்த இருட்டும், சிரிப்பும், அசட்டுப் பிசட்டு செயற்கைப் பேச்சும் அவள் விரட்ட விரட்ட எதிரில் நின்றன. இதையெல்லாம் தன்னால் ஏன் ஹரியிடம் சொல்ல முடியவில்லை என்று அவளுக்கு இப்போது புரிந்தது. அவன் அதிர்ந்து போவான் என்கிற தயக்கம் மட்டும் இல்லை. இப்படிப்பட்ட விஷயங்களில் தன்னால் அவளுக்கு எந்த வகையிலும் உதவ முடியாது என்கிற வருத்தம் அவனுக்கு ஏற்படலாம். அப்பா சொன்னது போல் தனது தோழமை என்பதே ஒரு பிரயோஜனமற்ற சுமை என்கிற எண்ணம் ஏற்பட்டுப் போகலாம்.

''வேறு நல்ல சினேகிதங்களை ஏற்படுத்திக்கோ.''

திடீரென்று சொன்ன வார்த்தைகளாகத் தெரியவில்லை. அடி மனத்தில் ஊறப் போட்டு யோசித்து, இதுதான் தருணம் என்று வெளிப்பட்ட வாக்கியம் அது. அப்பா இப்படியெல்லாம் நினைக்கக்கூடியவர் என்பதே விநோதமாக இருந்தது.

அவள் சோர்வுடன் எழுந்து பல் தேய்க்கச் செல்லும் போது, அப்பாவின் கண்களில் நிழலாடிய கவலையும் பேச்சில் இருந்த தயக்கமும் நினைவு வந்து, மெல்லிய சஞ்சலத்தை ஏற்படுத்தின. அவர்தான் ஏதோ பாரத்தைச் சுமப்பவர் போல் இருந்தது. 'கமான் டாட், உங்க மனசிலே என்னதான் இருக்கு, சொல்லுங்களேன்!' என்று பட்டென்று கேட்க முடியவில்லை இப்போது. வெளியில் சொல்ல முடியாத எத்தனையோ அந்தரங்கள் ஒவ்வொருத்தருள்ளும் இருக்கும் என்று இன்று புரிகிறது. எல்லாவற்றையும் வெளியிலே கொட்டுங்கள் என்று சொல்லும் அதிகாரம் கூட, எனக்கு இல்லை என்று அவள் நினைத்துக் கொண்டாள். சூட்சுமத்தைப் புரிந்து கொள்ள நினைப்பது முட்டாள்தனம் என்று ஒருநாள் ஹரி சொன்னான். ஆனால் பல விஷயங்கள் சூட்சுமமாக உணரப்பட வேண்டும். அதுவும் அந்தரங்கமான உணர்வுகளாகப் பதுக்கப்பட வேண்டும்.

'ஒரு நாளைக்கு எல்லாம் சொல்றேன்.'

முன்பாக இருந்தால், 'அவுட் வித் இட் டாட்' என்று வற்புறுத்தியிருப்பாள். இப்பொழுது அவர் என்ன சொல்வாரோ என்று பயமாக இருந்தது. சொல்லாமல் இருந்தால் நல்லது என்று தோன்றிற்று.

'வேறு நல்ல சினேகிதங்கள்' - அவளுக்குச் சிரிப்பு வந்தது. அவள் வகுப்புத் தோழிகள் எல்லாரும் அவள் வயதினராக இருந்தாலும், மனத்தளவில் பத்து வருஷங்களின் இடைவெளி இருந்ததாக அவள் நினைத்துக் கொண்டாள். நல்ல பெண்கள் சாதுப் பெண்கள் - நிறைய இருந்தார்கள். ஆனால் யாருடனும் அறிவுபூர்வமான நெருக்கம் ஏற்படவில்லை. அறிவார்ந்த நெருக்கத்திலிருந்துதான் உணர்வுபூர்வமான நெருக்கம் ஏற்பட முடியும் என்று தோன்றிற்று. அப்பாவுக்கு என்னுடைய அவஸ்தை புரியாது. ஹரியுடைய தோழமை ஏற்பட்டது உணர்வுரீதியாக எனக்கு நல்லது என்று அவருக்குத் தெரியாது. நேற்று நேர்ந்த அனுபவத்தில் நான் உடைந்து போயிருப்பேன். நேராக அங்கிருந்து அவனிடம் சென்றதில், மனசுக்கு ஏற்பட்ட சமாதானத்துக்கு என்ன விளக்கம் என்று தெரியவில்லை. அவனிடம் எதுவும் சொல்லாமலே கிடைத்த நிம்மதி அது. மௌனமாக அதிர்வுகளைத் தாங்கிக் கொள்ளும் ஷாக் அப்ஸார்பர் போன்றவன் அவன். நமது ஞானிகள் எல்லாம் அப்படிப்பட்ட ஷாக் அப்ஸார்பர்கள் என்று ஒருநாள் சொன்னான். அவனே ஒரு ஞானியாக

வாஸந்தி

இருக்க வேண்டும் என்று அவள் சிரித்துக் கொண்டாள்.

டெலிபோன் ஒலிப்பது கேட்டது. சற்று பொறுத்து, கீழேயிருந்து அப்பாவின் குரல் கேட்டது.

''மீரா, உனக்கு ஃபோன்!''

அவள் தடதடவென்று மாடிப் படிகளைக் கடக்கும் போது, அடித் தொடையின் வலியில் முகம் சுளித்தது.

''ஏம்மா?'' என்றார் அப்பா அவளைக் கூர்ந்து பார்த்தபடி.

''ஒண்ணுமில்லையே!'' என்று அவள் போனை எடுத்தாள். மறுமுனையில் ஹரியின் குரலைக் கேட்டு ''ஹாய்'' என்றாள் சந்தோஷத்துடன். ''இப்பத்தான் உன்னைப் பத்தி நினைச்சேன்.''

''சாத்தானைப் பத்தி நினைச்சா உடனே வந்து நிக்கும்பாங்க. அல்லது குரலாவது கேட்கும்!''

''சாதாரணக் குரல் இல்லே. அசரீரி'' என்று அவன் சிரித்தான். ''இப்பத்தான் நீ ஒரு ஞானின்னு நினைச்சேன்.''

''அப்படின்னா ஆபத்து. மறக்கப்பட வேண்டிய கேஸ்னு அர்த்தம்.''

''சீ! எல்லாத்துக்கும் ஏதாவது குதர்க்க அர்த்தம் செய்துக்குவே நீ!''

அப்பா எங்கிருந்தோ தன்னைக் கவனிப்பது போல் இருந்தது. அவள் சுழன்று திரும்பிய போது அவர் எழுந்து உள்பக்கம் செல்வது தெரிந்தது.

நழுவிப் போன கவனத்தைத் திருப்பி, ''இப்ப எப்படியிருக்கே ஹரி, ஜ~ரம் இருக்கா?'' என்றாள்.

''இல்லே. எப்போதும் போல இருக்கேன். நேத்து நீ வந்தது எனக்கு ரொம்ப உபகாரமா இருந்தது மீரா! எத்தனை சந்தோஷம் ஏற்பட்டதுன்னு சொல்லத்தான் இப்ப போன் செய்யறேன்.''

''இந்தா பாலைக் குடிச்சுட்டுப் பேசு...'' என்று அம்மா நடுவில் பால் தம்ளரை நீட்டிய போது, அவள் மறுக்க முடியாமல் வாங்கிக் கொண்டாள்.

''இப்பத்தான் எழுந்திருந்தியா?'' என்றான் ஹரி. ''நா அப்புறம் பேசறேன். நீ போய் பாலைக் குடி.''

இவன் செவிகளை வைத்துக் கொண்டு ஊரை விற்று விட்டு வருவான் என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

''பாலைக் குடிச்சுண்டுதான் பேசறேன்'' என்று அவள் சிரித்தாள். ''அம்மா கொண்டு வந்து கொடுத்துட்டாங்க.''



''நீ இத்தனை உதவாக்கரைன்னு எனக்குத் தெரியாது'' என்றான் அவன் பரிகாசமாக. ''நீ உன் வேலையைப் பாரு. அப்புறம் பேசறேன்'' என்று அவன் உடனடியாக டெலிபோனைத் துண்டித்தது, அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அம்மாவின் குறுக்கீட்டை இவன் புரிந்து கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றிற்று. சுர்ரென்று எல்லார் மேலும் ஆத்திரம் வந்தது.

''நா வந்து பாலைக் குடிக்க மாட்டேனா?'' என்றாள் சமையலறையில் நின்றி

ருந்த அம்மாவைப் பார்த்துக் கோபமாக. ''நா பேசி முடிக்கிறதுக்குள்ளே உனக்கு என்ன அவசரம்? நடுவிலே வந்து நீட்டறுமா?''

''நீ அந்தப் பிள்ளையோட பேசி முடிக்கிறதுக்குள்ளே சாப்பாட்டு நேரம் வந்துரும்.''

அவள் திடீரென்று கத்தினாள். ''உனக்கும் அப்பாவுக்கும் நா ஹரியோட சினேகமா இருக்கறது பிடிக்கல்லே. உங்க ரெண்டு பேர் பேச்சிலேயும் எனக்குப் புரியறது.''

''நீயா ஏதாவது கற்பனை பண்ணிக்காதே மீரா'' என்றாள் அம்மா சற்று உயர்ந்த குரலில்.

''நா முட்டாள் இல்லே!'' என்று மீரா மறுபடி கத்தினாள். ''எனக்கு எல்லாம் புரியறது. என்னை விட சீக்கிரமா ஹரிக்குப் புரிஞ்சு போச்சு. அவன் போன் செய்யறது உனக்குப் பிடிக்கல்லேன்னு நீ நடுவிலே புகுந்து பாலை நீட்டினதிலேயே தெரிஞ்சுட்டு போனை வெச்சுட்டான். அவன் அங்கஹீனமானவன் என்கிற கருணை கூட உங்களுக்கு இல்லே. அவனுடைய சினேகிதத்தாலே எனக்கு எந்தவித லாபமுமில்லே, தொல்லைதான் ஏற்படும்னு நீ நினைக்கிறே. லாப நஷ்டத்தைக் கணக்குப் பண்ணித்தான் நீங்க ரெண்டு பேரும் மத்தவங்ககிட்டப் பழகறீங்க போலிருக்கு. எனக்கு இருக்கற ஒரே சினேகிதன் இவன். அந்த சினேகிதத்தாலே கிடைக்கற சந்தோஷம்தான் என்னுடைய லாபம்.''

அவளுக்கு ஆத்திரமும் கோபமும் பொங்கிப் பொங்கி எழுந்தன. அப்பா கையில் நியூஸ் பேப்பருடன் வந்து நின்றார். எத்தனை இங்கிதமில்லாதவர்களாகப் போய் விட்டார்கள் இவர்கள் என்று அவளுக்கு ஆச்சரியமும் துயரமும் ஏற்பட்டன.

''நேத்து நா ஒரு போக்கிரிக் கும்பல் கிட்ட மாட்டிண்டதைப் பத்தி நீங்க கவலைப்பட்டதை விட நா ஹரியோட பழகறதைப் பத்தி அதிகமாக் கவலைப்படற மாதிரி இருக்கு. எத்தனை மடத்தனம் இது!''

''ஆமாம், கவலையாத்தான் இருக்கு!'' என்றாள் அம்மாவும் குரலை உயர்த்தி. ''அவனைத் தவிர வேற யாரும் உனக்குச் சினேகிதமில்லாம இருக்கறது கவலையாயிருக்கு.''

''அவன் ஒருத்தனாவது இருக்கானேன்னு நீ சந்தோஷம்னா படணும்? சினேகிதத்தைக் கடையிலே வாங்க முடியும்னாச் சொல்லு, வாங்கிட்டு வரேன்!''

''சுஜாதா, எதுக்கு நீயும் இப்படிக் கோபப்படறே?'' என்றார் அப்பா அம்மாவைப் பார்த்து. ''நேத்து நடந்த விஷயத்தைப் பத்திக் கவலை மட்டும் இல்லே, அதிர்ச்சியாயிருந்தது எங்களுக்கு'' என்றார் மீராவிடம். ''உன்னை நினைச்சுப் பெருமையாவும் இருக்கு. ஹரியோட சினேகமாயிரு. கூடவே வேற நல்ல சினேகிதமும் வெச்சுக்கோன்னுதான் சொல்றோம். உல்லாசமா இருக்க வேண்டிய வயசு உனக்கு. அவனோடு மட்டும் பொழுதைக் கழிச்சியானா உன் உலகம் ரொம்பக் குறுகிப் போகும்.''

ஹரியைப் பற்றி இவர்களிடம் மேற்கொண்டு பேசுவதோ விளக்குவதோ பிரயோஜனமில்லை என்று அவளுக்கு அலுப்பு ஏற்பட்டது. இவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள்.

''உங்க உலகம்தான் குறுகிப் போச்சு'' என்று முணுமுணுத்தபடி அவள் இடுகிடுவென்று மாடிப் படியேறித் தன் அறைக்குச் சென்றாள். வேண்டாத விஷயத்திற்கு இவர்கள் குழம்புவதாக எரிச்சல் ஏற்பட்டது. வெகு நாள் கழித்து அவள் எரிக்கிற்கு நீண்ட கடிதம் எழுதினாள். ஹரியிடம் சொல்ல முடியாத விஷயங்களை அவனிடம் தயக்கமில்லாமல் சொல்ல வந்தது. தனக்கு நேர்ந்த அனுபவங்களை எட்டி நின்று ஹாஸ்ய உணர்வுடன் விவரிக்க முடிந்தது. எரிக் மட்டுமே தன்னைப் புரிந்து கொள்ளக்கூடியவன் என்கிற உணர்வு கடிதத்தை முடித்ததும் ஏற்பட்டது. சென்ற கடிதத்தில் அவன் ஹரியைப் பற்றி





''கல்யாணத்தைப் பழனியிலே வெச்சுக்கணும்னு நான் சொன்னேன். என்னுடைய காதலி திருத்தணியிலே வெச்சுக்கணும்னு சொன்னா. கடைசியிலே ஒருவழியா பிரச்னையைத் தீர்த்துக்கிட்டோம்!''

''எப்படி?''

''என்னோட கல்யாணத்தைப் பழனியிலும் அவளோட திருமணத்தைத் திருத்தணியிலும் வெச்சுக்கறதுன்னு தீர்மானம் பண்ணிட்டோம்!''

- குமார்

மிகவும் உற்சாகத்தோடு விசாரித்திருந்தாள். கறுப்பு வெளுப்பு வித்தியாசமில்லாத உலகத்தில் இருப்பவன் ரொம்பவும் தூய்மையானவனாக இருப்பான் என்று எழுதியிருந்தாள். அந்த சிநேகிதத்தினால் இப்பொழுது வீட்டில் ஏற்பட்டிருக்கும் சர்ச்சையைப் பற்றி எழுதும் போது, அவளுக்குக் கூச்சமாக இருந்தது. பெற்றோர்கள் கஞ்சர்கள் என்று சொல்ல வேண்டி வந்தது போல.

அவளது எல்லாக் கோபங்களும் சமாதானமாகிப் போவது போல், இன்றைய கோபமும் சமாதானமாகி விட்டது. இரவு அவள் தூங்கி விட்டாள் என்கிற எண்ணத்துடன், அப்பா அவளுடைய கட்டிலில் அமர்ந்து, இருளில் அவளுடைய தலையைக் கோதி விட்டு நகர்ந்த போது, மனசு நெகிழ்ந்து போயிற்று. அவரை முழுமையாகத் தான் புரிந்து கொள்ளவில்லை என்று முதல் முறையாகத் தோன்றிற்று.

மறுநாள் வழக்கம் போல் பஸ்ஸைப் பிடித்து, பள்ளிக்கூடத்துக்கருகில் இறங்கி நடக்கும் போது, தெருவின் எதிர்த்த திசையில் நாலைந்து பையன்கள் விசில் அடித்தார்கள். அவளுக்கு முன்னால் நடந்த இரண்டு பெண்கள் பயந்து நடையை வேகமாக்கினார்கள்.

''நிதானமாப் போங்க, ஏன் பயப்படறீங்க?'' என்ற மீராவின் குரல் கேட்டுத் திரும்பினார்கள். எட்டாம் வகுப்பு மாணவிகள்.

''அந்தப் பையன்கள் ரொம்ப மோசம். தினமும் இப்படித்தான் தொந்திரவு பண்றாங்க'' என்றாள் ஒருத்தி, மருள மருள விழித்தபடி.

''நீங்க பயந்தீங்கன்னா அவங்க எகிறுவாங்க'' என்று அவளை ஒரு கையால் அணைத்தபடி மீரா நடந்தாள். ''நாம தைரியமாயிருந்தா எவனும் வாலாட்ட முடியாது.'' இவளுக்கும் ஒருநாள் தனக்கு அன்று ஏற்பட்ட அனுபவம் ஏற்படலாம் என்ற எண்ணத்தில் கனிவு சுரந்தது. தப்பிக்கும் தைரியம் இவளுக்கு இருக்குமா என்பது சந்தேகம்!

ரெஜிஸ்தரை எடுத்துக் கொண்டு வகுப்பிற்குள் நுழைந்த போது, இன்னும் மணி அடிக்காததால் வகுப்பில் யாருமில்லை. புத்தகக் கட்டைத் தன் மேஜையில் வைத்து விட்டு நிமிரும் போதுதான், தொலைவில் மீனாட்சி மேஜையில் தலையைக் கவிழ்த்து அமர்ந்திருப்பது தெரிந்தது. அழுகிறாள் என்று தோன்றிற்று. அவளுடன் இனி பேசவே கூடாது என்ற வைராக்கியத்தை மறந்து, மீரா அவளருகில் சென்றாள்.

(தொடரும்)



''கோஷ்டிச் சண்டை இருக்கறது தான்... அதுக்காக இப்படியா?''

''ஏன்.. என்ன ஆச்சு?''

''தலைவர் பிறந்த நாளை முனுசாமி கோஷ்டி வர்ற 27ம் தேதியும் வடிவேல் கோஷ்டி அடுத்த மாதம் 8ம் தேதியும் கொண்டாடப் போறாங்களாம்!''

- கிருஷ்ணராஜகோபால்



''சிக்கனத்தைக் கருதி நாமும் வாங்கும் சம்பளத்தில் பத்து சதவீதம் குறைத்துக் கொள்ளணும்னு தீர்மானம் போட்டிருக்கீங்களே, கட்டுபடியாகுமா?''

''பதிலுக்கு வாங்குகிற லஞ்சத்திலே பத்து சதவீதம் அதிகப்படுத்திட்டாப் போச்சு!''

- குமார்



''எ கி ர ா வி நிகழ்ச்சியில் ஞாயிற்றுக் கிழமை என்ன படம்னு சொல்லும் போது, சிரிச்சுக்கிட்டே சொல்றாங்களே, ஏன்?''

''அவ்வளவு பழைய படம்னு நினைக்கும் போது, அவுங்களுக்கே சிரிப்பு வந்துடுதாம்!''

- வி. ரேவதி

மறக்க முடியாத கார்ட்டூன்!

இதற்காவது உதவியதே!

◆ ஜோஷியின் ''ஏக்தா யாத்திரை'' தேசிய ஒருமைப்பாட்டினை வளர்க்க உதவியதோ இல்லையோ, காஷ்மீர், அரசின் வசம் இருப்பதைவிட பயங்கரவாதிகள் வசம்தான் இருக்கிறது என்பதை யாவது அறிய உதவியதே!

கல்லிடைக்குறிச்சி, டி. குமாரவேல்.

கனகச்சிதம்!

◆ ஷோபனாவிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, அவர் கனகச்சிதமாகப் பதில் அளித்த விதம் பாராட்டும் படி அமைந்திருந்தது!

மேட்டூர் அணை - 2, ஆர். கருணாகரன்.

சரியாகப்படவில்லை!

◆ தளபதியின் கதாநாயகி, தான் சார்ந்துள்ள துறையைக் குறைத்து மதிப்பிடக்கூடாதென்ற ஒரு காரணத்திற்காகவே அதையும் இன்ன பிற நடனங்களையும் சரியானதே என்று வாதிட்டிருப்பது எனக்கென்னவோ சரியாகப் படவில்லை.

வேலூர், பாற்கடல் வேந்தன்.

மறக்கமுடியாத கார்ட்டூன்!

◆ அன்று வாழப்பாடி முதல்வரையும், ஆளுங்கட்சியையும் வானளாவப் புகழ்ந்த போது மகிழ்ந்தவர்கள், இன்று விலைவாசி உயர்வைச் சுட்டிக்காட்டி, அவர் மாநில அரசை விமர்சிப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் வசை பாடுவதைக் 'காக்கை-கிளி' கார்ட்டூன் மூலம் அருமையாகப் படம் பிடித்துக் காட்டி விட்டீர்கள். மறக்க முடியாத கார்ட்டூன்!

கும்பகோணம், எஸ். மங்களம்.

நல்ல உத்தி

◆ இரா. முருகன் எழுதிய 'ஒரு கோமல்வரன், ஒரு தீபாவளி' சிறுகதை படித்தேன். சிறுவனின் பார்வையில் கதையை எழுதி இருப்பது நல்ல உத்தி. இது மாதிரி கற்பனைகள், நம்மை அற்புதமான ஒரு கனவு உலகத்திற்கும் நம் இளமைக் காலத்திற்கும் தூக்கிச் செல்கின்றன. கதையின் இறுதியில் மனிதாபிமான இழையும் கதைக்கு வலு சேர்க்கிறது. தீபாவளி என்பது இல்லாமலே இக்கதையை எழுதினாலும் சிறந்த கதையாகவே அமைந்திருக்கும். சரி சுவாமி, இதென்ன கால ப்ரக்ஞை இல்லாமல் பிப்ரவரியில் தீபாவளிக் கதை? உறுத்துகிறதே!

சென்னை - 91, இரா. கண்ணன் மகேஷ்.

அட்சரலட்சம்!

◆ உருதுக் கவிபாடும் தமிழர் ஹரிஹரன் பற்றிய கட்டுரை, திறமையும், விடா முயற்சியும் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்பதை உறுதிப்படுத்தியது. அதிலும், 'கூட்டத்தைக் குஷிப்படுத்துவதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டால், இசையின் தரம் தாழ்ந்து விடும்' என்ற அவருடைய கருத்து அட்சரலட்சம் பெறும்.

அரசரடி, நெல்லை சிவா.

பால்வார்த்த கட்டுரை!

◆ பெற்றோர்களுக்கு ஒரு நல்ல அறிவுரையாக மட்டுமல்லாது, அதற்கு மருந்துகளையும் தெரிவித்துக் குழந்தைகள் வயிற்றில் பால் வார்த்து விட்டீர்கள். அனைத்துப் பெற்றோர்களும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய கட்டுரை, 'பிஞ்சு மனத்தை நோக அடிக்காதீர்கள்!'

திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

கண்ணியத்தைச் சுட்டிக்காட்டியது!

◆ குலசேகரின் ''ஒரு கனவின் ஆரம்பம்'' கதை அருமை. நடிப்பும் மற்றவற்றைப் போல் ஒரு கௌரவமான தொழில்தான். நடிகைக்கும் சில லட்சியங்கள் இருக்கக் கூடும். எனவே நடிகை என்றதுமே கண்ணியக் குறைவாய்ப் பேசுவதும், எழுதுவதும், நடத்து கொள்வதும் தவறானவை என்பதைப் பானுவின் பாத்திரம் நன்றாகவே சுட்டிக்காட்டியது.

முசிறி, முக.இ.க. பாலசுப்பிரமணியன்.

ஆவலைத் தூண்டியது!

◆ மகாமகத்தின் மகத்துவம் குறித்த கட்டுரை, மன நிறைவைத் தந்தது. என்னதான் மகாமக நிகழ்ச்சிகளை டி.வியில் நேரடியாக ஒளிபரப்பினாலும், சர்க்கரையைப் பார்த்தால் இனிக்காது; சுவைத்தால் மட்டுமே இனிக்கும் என்பதைப் போல, நேரடியாக மகாமகத்தைத் தரிசிக்கும் ஆவலைத் தங்கள் கட்டுரை தூண்டிவிட்டது.

கோவை, கே.ஆர். விஜயா.

அம்முவுக்கு......

◆ ப்ரியப்பட்ட அம்முவினு நமஸ்காரம். அலமு சேச்சிக்கு நீ அயச்ச கத்து கிட்டி (கண்டு). சுந்தர காண்டம் சித்திரத்தக் குறிச்சு நீ விமர்சனம் செய்தது, சித்திரத்தப்போலே வளர நன்னாயிட்டுண்டு. கருக்கத்தில் பறஞ்ஞால் சுந்தரக்குட்டன் பாக்யராஜ் சாரின்றே சுந்தரகாண்டத்தே குறிச்சு நீ விமர்சிச்சு எழுதியது சுந்தரமாயிட்டுண்டு. நினக்கு என்றே ஹிருதயப்பூர்வமாய அபிநந்தனங்ஙள். எந்நெந்தும் ப்ரியத்தோடு.....

திருவட்டார், சித்து.

வட்டமேஜை

விளம்பரமில்லாமல் ஒரு சலுகை!



❑ ரயில்வேயில், "ஸீனியர் ஸிடிஸன் ஸ்கீம்" என்று ஒன்றுண்டு. இதன்படி அறுபது வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், 500 கிலோ மீட்டருக்கு மேல் ரயில் பயணம் மேற்கொண்டால், கட்டணத்தில் கால் பகுதி கழிவு உண்டு. இது பலருக்கும் தெரியும்படி ரயில்வே நிர்வாகம் விளம்பரம் செய்யவில்லை! இதனால், பம்பாய், கல்கத்தா, டில்லி என தொலைதூர நகரங்களில் வாழும் உறவினர்களின் வீட்டுக்குச் செல்கிறவர்கள் பயணத் தொகையைப் பெற இயலாமல் முழுக் கட்டணம் செலுத்தி வருகிறார்கள்.

- கே. எஸ். பாலகிருஷ்ணன்


"நம்ம விவசாய அமைச்சர் அவர் துறைக்கு முன்னுதாரணமாக வீட்டிலேயே விவசாயம் செய்யறார். அது போல எல்லாத் துறை அமைச்சர்களும் அவரவர் துறையில் ஒன்றிப் போக வேண்டும்'னு முதலமைச்சர் சொன்னது தப்பாப் போச்சு!"

"ஏன்?"

"நிதியமைச்சர், வீட்டிலேயே நோட்டடிக்க ஆரம்பிச்சிட்டார்!"

- க. வெங்கடேசன்





கோடம்பாக்கம் -

ஆற்காட்டு நவாபு குதிரைகளைக் கட்டுகிற இடமாக இது விளங்கியதால் "கோடாபாக்" என்று பெயர் வைத்தனர். கோடா என்றால் குதிரை என்று பொருள். கோடாபாக் என்பதுதான் நாளடைவில் கோடம்பாக்கம் ஆகி விட்டது.

ஆதாரம் : "வரலாற்றுத் துணுக்குகள்"

தகவல் : ராமலட்சுமிவேல் மகராஜ்

ஒருவர் : ஜப்பான்ல ரோபோவைக் கண்டுபிடிச்சு தொழிற்சாலையில நிறைய வேலை வாங்கறாங்களாம்!

நண்பர் : என்ன இருந்தாலும் லஞ்சம் வாங்கற ரோபோவை இந்தியர்களால்தான் கண்டுபிடிக்க முடியும்!

- எஸ். முகம்மது யூசுப்





❑ முதலையைப் பற்றி ஒரு விசித்திரமான தகவல். பிற உறுப்புகளை விடக் குறிப்பாக அதன் முதுகின் மீது உங்கள் கால் பட்டால் அதற்கு அடக்க முடியாத ஆத்திரம் ஏற்படும். விருட்டென்று திரும்பி உங்களைக் கடித்துக் குதறி விடும். (முடிந்தால்) அதைத் திருப்பிப் போட்டு, வயிற்றுப் பகுதியை தீவி விட்டால் உறக்கத்தில் ஆழ்ந்து விடும். விழித்திருந்தாலும் அந்தச் சுகத்தை அனுபவித்தவாறு எவ்வளவு நேரமானாலும் பேசாமல் படுத்திருக்கும்!

- அ. ஷண்முகசுந்தரம்

தமிழில் க் ச் த் ப் பிழையின்றி எழுதுவது எப்படி?

சிலர், தமிழைத் தம்மினும் தாழ்வாக நினைத்துக் கொண்டு தாறுமாறாக எழுதுகின்றனர்.

'பழைய இலக்கணம் எல்லாம் இப்போது எதற்கு?' என்று கேட்டு, தம்மை ஒரு புத்துலகச்சிற்பி என நினைத்துக் கொண்டு பூரித்துப் போகின்றனர் சிலர்! அப்புதுமை விரும்பிகள் பண்டை வழக்கம் தொலைய வேண்டும் என்று பேசுகின்றனர்!


இப்போது, தமிழின் நிலை குறித்து ஒரு பெரிய சர்ச்சையே நடக்கிறது! 'தள்ளாடுகிறது தமிழ்' என்று கூறுகிறார், ஒருவர். ஏன் தள்ளாடுகிறது தெரியுமா? எனக் கேட்டு அதற்குரிய காரணத்தைக் கூறுகிறார் ஒருவர். அதை மறுத்து, 'அது காரணம் அன்று, இது தான் காரணம்! என்று கூறுகிறார் இன்னொருவர். இப்படிப் பொருளற்ற சச்சரவுகளில் ஈடுபடுவதை விடப் பயனுள்ள வகையில் ஏதாவது செய்ய வேண்டுமே என எண்ணினோம். பெரும்பாலோர் தாம் எழுதுவது சரியா? தவறா? எனத் தெரியாமல் பிழைபட எழுதுகின்றனரே, இதற்கு ஏதாவது வழி காண வேண்டுமே எனக் கருதினோம்.' அப்படி எண்ணியதன், கருதியதன் - விளைவுதான் இந்நூல்!

தமிழில் பிழையில்லாமல் எழுத நன்னூல் முழுவதும் தெரிந்திருக்க வேண்டும் என்பதில்லை. தேவையான இலக்கணத்தை மட்டும் பழுதற அறிந்தால் போதும்!

குற்றியலுகரத்தையும், வேற்றுமையையும் சில மணித்துளிகளில் அறிந்து கொள்ளும் வகையில் கச்சிதமாக அமைந்துள்ளோம்.

வல்லினம் மிகும் இடத்தையும், மிகா இடத்தையும் மிகத் துல்லியமாக விளக்கியுள்ளோம்.

பெயரெச்சத்தையும், வினையெச்சத்தையும் தெளிவாகப் புரியும்வண்ணம் கூறியுள்ளோம்.



நன்னூல் காண்டிகை உரை (ஆறுமுக நாவலர் உரை)-யில் உருபும் பயனும் உடன் தொக்க தொகையும், அன்மொழித்தொகையும் தெளிவாக விளக்கப்படவில்லை. அவற்றை இந்நூலில் தெளிவுபடுத்தியுள்ளோம். ஒரு, ஓர், அது, அஃது, உடம்படு மெய், அன்று, அல்ல, அல்லன், அல்லள், அல்லர், வேண்டும், வேண்டா ஆகியவற்றையும் புரியும்படி விவரித்துள்ளோம்.

காலத்திற்கு ஏற்ற தொண்டு இதனினும் வேறு உண்டோ!

இந்நூலினைப் பெற, நூலின் விலையை (Rs. 15.00) மட்டும் MO செய்க. MO கிடைத்தவுடனே, நூலினை VPP யில் அனுப்புகிறோம். தபால் செலவினை மட்டும் தபால்காரரிடம் செலுத்தி நூலினைப் பெறலாம்.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி

VARTHAMANAN PATHIPPAGAM,
ARR Complex,
141, Usman Road, T. Nagar, Madras-17. (Near Panagal Park)

இந்த வகையில் இதுபோன்ற நூல் இதுவரை வெளிவந்ததில்லை

சவால் விடும் பூட்டுக்கள்!

"நகைகளையும் பணத்தையும் உள்ளே வைத்துப் பூட்டிவிட்டு, சாவியை இரும்பு பீரோவின் மேலேயே, அல்லது அருகிலேயே வைத்து விட்டுப் போங்கள். திருடனால் நிச்சயம் திறக்க முடியாது!'' என்று சவால் மாதிரி சொன்னார் என். சுப்பிரமணியம்; இவர் திண்டுக்கல்காரர்.

இவர் சொல்லுவது எல்லாமே இப்படித்தான் நம்ப முடியாத அம்புலிமாமா - கதைகளாக இருக்கின்றன. ஆனால் வேறு வழியே இல்லை, நம்பித்தான் ஆக வேண்டும்!

''இரும்புப் பெட்டகத்தைத் திறக்க வருகிற திருடனைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறதா? அதற்கும் வழி செய்திருக்கிறேன். நீங்கள் திறக்கிற மாதிரி திருடன் திறக்க மாட்டான். அதற்கு உங்களுக்கு மட்டுமே தெரிந்த ஓர் அமைப்பு இருக்கும். அது தெரியாமல் திருடன் சாவியைப் போட்டுத் திருப்பிய உடனே, சர்ரென்று இரண்டு ஸ்பிரிங்குகள் பெட்டிக்குப் பின்னாலிருந்து பாய்ந்து வரும்; இரும்புக் கையால் திருடனை அமுக்கிப் பிடித்துக் கொண்டு விடும். நீங்கள் சாவகாசமாக வந்து திருடனைத் 'தரிசனம்' பண்ணலாம்!'' என்கிறார் சுப்பிரமணியம்.



அருணா பெட்டகம்

யார் இந்த சுப்பிரமணியம்?

பூட்டுக்களுக்குப் பெயர் போன திண்டுக்கல்லில் இருந்து ஆறு வருடங்களுக்கு முன் சென்னைக்கு வந்த இளைஞர். மற்ற சகோதரர்கள் உயர் கல்வியில் நாட்டம் கொண்டு படித்த போது, பள்ளியில் படிக்கிற பதினைந்தாவது வயதிலேயே, அப்பா நாச்சியப்ப செட்டியாருக்குப் பூட்டுத் தொழிலில் உதவியாக இருந்தவர். ''அப்போதே கேரளாவுக்கு ஆர்டர் பிடிக்கவும், வசூல் பண்ணவும் போயிருக்கிறேன்!'' என்றார் சுப்பிரமணியம். நாற்பது வருடங்களாகப் புகழ்பெற்று விளங்கும் தந்தையின் பூட்டு வியாபாரத்தில், புதுமை ஏதாவது செய்ய வேண்டும் என்று சதா துடிப்புடன் செயல்படுபவர்.

''சும்மா இருக்கவே இருக்காதே. யோசி... யோசி!'' என்பாராம் அப்பா.


ஆனால் யோசித்து யோசித்துப் புதுமையான பூட்டு வசதியுடன் பெட்டகம் ஒன்றை உருவாக்க ஆர்டர் பிடித்த போது, குழப்பமான அதன் கண்டிஷன்களைக் கேட்டு, வசை மாரி பெய்து, வைது தள்ளி விட்டாராம். வெறுமனே பெயருக்கு ஏதோ முன்பணத்தைப் பெற்றுக் கொண்டு, எல்லாப் பொருட்களையும் வாங்கி, தொழிலாளர்க்கு ஊதியம் கொடுத்து, ஒரு சவாலாகவே அதை எடுத்துக் கொண்டாராம் சுப்பிரமணியம்.

''ஒரே பெட்டகத்தில் 52 லாக்கர் பெட்டிகள் இருக்க வேண்டும். 52க்கும் இரண்டிரண்டு பூட்டுக்கள் வைக்க வேண்டும். ஒன்றின் சாவி, இன்னொன்றுக்குச் சேரக் கூடாது! என்று ஓர் ஆர்டர் கொடுத்தார் ஒருவர். பூட்டில் சாவி இயங்கும் அரை அங்குல நீளத்தில் 52 மாறுதல்கள் இருந்தால்தான் அது முடியும்.''

''செய்து கொடுத்தீர்களா?''


''சவாலாக எடுத்துக் கொண்டபின் செய்து கொடுக்காமல் இருப்பேனா? 52 பெட்டிகளுக்கு 104 பூட்டுக்கள். இரண்டு சாவிகள் வீதம் 208 சாவிகள். தவிர,

பெட்டகத்துக்கு வெளியே 8 பூட்டுக்கள். அவற்றுக்கு 16 சாவிகள். ஆக மொத்தம் 224 சாவிகள். இதைச் செய்யவே மூன்று மாதம் பிடித்தது. ஏற்றி இறக்கி வைக்க மட்டும் 25 பேர் தேவைப்பட்டனர். கிட்டத்தட்ட ஒன்றரை டன் எடை! ஒன்றுக்கொன்று சேருகிறதா என்று 52 பெட்டிகளின் 104 பூட்டுக்களையும் திறந்து பார்த்து மூடுவதற்கே, வாங்கியவருக்கு ஒரு வாரத்துக்கு மேல் ஆயிற்று. அப்புறம்தான் பணமே கொடுத்தார்!



சுப்பிரமணியம்

''இதை எல்லாம் விட முக்கியமானது, இந்த 104 பூட்டுக்களுக்கும் பொதுவாக ஒரே ஒரு மாஸ்டர் கீ செய்து கொடுத்தேன். 'ஆர்டர் வாங்கும் போது இதைச் செய்து தருவதாக ஒப்புக்கொண்டாயா?' என்று கேட்டார் அப்பா. 'இல்லை' என்றேன். 'பிறகு ஏன் இப்படி பிராணனை வாங்குகிறாய்?' என்று கடிந்து கொண்டார். ஆனால் திண்டுக்கல் பாக்டரியில் எங்கள் தொழிலாளரிடம் சொன்ன போது, 'அதுக்கென்ன, அதையும் செஞ்சுப்புடுவோம்' என்று கண்டுபிடித்துக் கொடுத்தார்கள்! அத்தனை பூட்டுக்களுக்கும் அந்த ஒரே ஒரு சாவி மட்டுமே கூட இயங்கும் என்ற போது, வாங்கியவரே அசந்து போய் விட்டார்!'' என்றார் சுப்பிரமணியம்.



52 லாக்கர்கள்; 104 பூட்டுக்கள்; 208 சாவிகள்!

''திண்டுக்கல் ஊழியர்கள் வெறும் பணியாளர்கள் அல்ல. கலைஞர்கள். அயல்நாட்டுப் பூட்டு ஒன்றைப் பார்த்தால், அந்தத் தொழில் நுட்பத்தையும் உடனடியாகப் புரிந்து கொண்டு அப்படியே அதைச் செய்து காட்டும் திறமையும் வாய்ந்தவர்கள்'' என்கிறார் தெய்வா இண்டஸ்ட்ரீஸ் சுப்பிரமணியம். அருணா பாதுகாப்புப் பெட்டகம் இவர் தயாரிப்புத் தான்.

பாண்ட்ஸ் நிறுவனத்தில் அயல் நாட்டுப் பெட்டகம் ஒன்று, முப்பது வருடங்களாகச் சாவி தொலைத்து போய், எத்தனையோ பேர் முயற்சி செய்தும், திறக்க முடியாமல் அப்படியே இருந்தது. கடைசியாக, சுப்பிரமணியம் தமது மெக்கானிக் ஒருவரை அழைத்துக் கொண்டு போய்ப் பார்த்தார். பூட்டைப் பார்த்துத் தொழில்நுட்பத்தைப் புரிந்து கொள்ள ஐந்து நிமிடம்; திறக்க இரண்டு நிமிடம். ஆக மொத்தம் ஏழே நிமிடத்தில் பெட்டகம் திறக்கப்பட்டது! இத்தனைக்கும் கீறல் இல்லை; உடைத்தல் இல்லை. அசந்து போய் விட்டது பாண்ட்ஸ் தலைமை. (பிறகு இவர்கள் அமைத்துக் கொடுத்த பூட்டுத்தான் இப்போது இருக்கிறது.)

''சமீபத்தில் திருநெல்வேலியில் கங்கைகொண்டான் கோயிலில் உண்டியலின் உள் பூட்டு உடைக்க முடியாமல் அப்படியே இருந்தது என்று நாளிதழில் படித்திருப்பீர்களே? இதுபோன்ற கோயில் உண்டியல்களை இந்த நாற்பது வருடங்களாக எத்தனையோ தமிழ்நாட்டுக் கோயில்களுக்குக் கொடுத்திருக்கிறோம். சில சிறிய கோயில்களுக்கு எங்கள் காணிக்கையாகவே கொடுத்து வருகிறோம்.

''இரண்டு வருடம் முன்னால் காஞ்சிபுரம் கந்தகோட்டத்துக்கு, அவர்கள் ஆர்டர் படி ஒரு பூட்டு தயாரித்தோம். மாங்காய்ப் பூட்டு அல்ல; கோயில் கதவில் பொருத்தும் தொட்டிப் பூட்டு. அவர்கள் குறிப்பிட்ட காலக்கெடு தாண்டித்தான் கொண்டு போய்க் கொடுக்க முடிந்தது. கடுகடுப்பாக

இருந்தார்கள் கோயில் நிர்வாகிகள். 'எடுத்துக் கொண்டு போய் விடுங்கள்' என்று நிர்த்தாட்சண்யமாகச் சொல்லி விட்டார்கள். சுமார் ஒன்றரை அடி நீளமுள்ள சாவிகளையும், 40 கிலோ எடையுள்ள பூட்டையும் பார்த்தார்களோ இல்லையோ, 'நில்லுங்கள், நில்லுங்கள்' என்று சொன்னார்கள். உயர் அதிகாரிகள் எல்லாம் வந்து பார்த்தார்கள். காஞ்சிப் பெரியவரிடம் கொண்டு போய்க் காண்பிக்கச் செய்தார்கள். ஒரு சைக்கிள் ரிக்ஷாவில், நாங்கள் பிரம்மாண்டமான பூட்டோடும் சாவிகளோடும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பட்டோம். மக்கள் எல்லாம் திரண்டு வந்து சாவிகளைத் தொட்டுக் கும்பிட்டார்கள்! எனக்குப் புல்லரித்துப் போய் விட்டது! கேவலம் ஒரு பூட்டும் சாவியும்தான் செய்திருக்கிறோம். ஆனால் எத்தனை மக்கள் நாம் செய்தவற்றைத் தொட்டு வணங்கி, செய்த நம்மையும் கோலாகலமாக வரவேற்று வாழ்த்துகின்றனர் என்று இனம் புரியாத சந்தோஷத்தில் மனசு மிதந்தது!'' என்றார் சுப்பிரமணியம்.

மாங்காய்ப் பூட்டிலேயே முன்பக்கம் ஒரு கதவு இருக்கிறது. அதைத் திறந்து ஒரு தாளைச் செருகி விட்டுப் பூட்டி விட்டால், பூட்டியவர் அறியாமல் இன்னொருவர் திறந்திருக்கிறார் என்று தெரியும் வழியும் இருக்கிறது. ஊழியர்கள் இரண்டு பேர் ஆபரேட் செய்யும் இரும்புப் பெட்டகத்தை, இரண்டு பேர் சாவியும் போட்டுப் பூட்டி விட்டுப் போனாலும், முதலாளி அல்லது மானேஜர், தமது கையிலுள்ள மூன்றாவது சாவியால் திறந்து பார்த்து, கையிருப்புப் பணம், லெட்ஜர் பணத்துடன் சரியாக இருக்கிறதா என்று பார்த்து விட முடியும்!

சுவரில் பதித்து விடும், விலை குறைவான பெட்டகங்களைக் கண்டுபிடித்திருப்பதோடு, அதைப் பிறர் அறியாமல் இருக்கும் எளிமையான வழி ஒன்றையும் வைத்திருக்கிறார். (வாங்குகிறவர்களுக்கு மட்டுமே இந்த மர்மம் நேரில் சொல்லப்படும்!)


ஆறு சாவிப் பூட்டு இருக்கிறது. பூட்ட ஒரு சாவி போதும். ஆனால் திறக்க ஆறு சாவி வேண்டும்! ஆறு சாவிகளையும் எந்த எந்த வரிசைக் கிரமத்தில், எப்படி எப்படி ஆபரேட் செய்ய வேண்டும் என்று அறிந்திருந்தால்தான் திறக்க முடியும். இல்லையென்றால், பக்கத்திலேயே ஆறு சாவிகளும் இருந்தால் கூட, திருடன் கூட திறக்க முடியாமல் வெறுத்துப் போய்ப் போட்டு விட்டு ஓடி விடுவான்! அல்லது சாவிகள் அவனைத் திணற அடிப்பதற்குள், உரிமையாளரே ஓடி வந்து விடுவார்!

- நம்பி

வாசகர் யோசனை :
பழனிச்சாமி, சென்னை - 3.

பொன் விழா ஆண்டு :: தங்க நகை பரிசுத்திட்டம் - 16

கோடைச்சிரிப்பு!



சிவராத்திரியுடன் குளிர் ''சிவ சிவா'' என்று விடை பெற்றுக் கொண்டு விடும். அப்புறம் கோடையின் உக்கிரம் தான். தண்ணீர்க் கஷ்டம், மின்வெட்டு, வெயிலின் தகிப்பு - இவற்றுள் ஏதேனும் ஒன்றை எப்படிச் சமாளித்தீர்கள்? அல்லது சமாளிக்க முயன்று தோற்றுப் போனீர்கள்? நகைச் சுவை ததும்ப எழுதினால் வெயிலை மறந்து சிரிக்கலாமே?

தபால் கார்டில் அல்லது இன்லாண்டில் எழுதி அனுப்பக் **கடைசித் தேதி: *மார்ச் 5, 1992.***

சிறந்த சிரிப்பு அனுபவம், பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள தங்க நகைப் பரிசு பெறும். பிரசுரமாகும் இதர துணுக்குகளுக்குச் சன்மானம். ''கோடைச் சிரிப்பு'' என்று தலைப்புத் தந்து ''கல்கி காரியாலயம், சென்னை - 600 032'' என்ற விலாசத்துக்கு மட்டுமே எழுத வேண்டும்.

சமையலறை சங்கடங்களுக்கு
சரியான தீர்வு!




பயன்படுத்த எளிதும் 100% பாதுகாப்பானதுமான பிரீமியர் பிரஷர் ஸ்டவ் உங்கள் சமையலறைக்கு உகந்தது. 55% வெப்பத்திறன் செயல்திறம் வாய்ந்த பிரீமியர் பிரஷர் ஸ்டவ் உயர்ந்த தரத்துடன் தயாரிக்கப் படுகிறது.


வாயு அழுத்தம் அதிகமாகும் போது தானாகத் திறந்து கொள்ளும் சேஃப்டி வால்வு கூடுதல் வாயுவை வெளியேற்றி-விட்டு, தானாகவே மூடிக் கொள்கிறது. இந்த சிறப்பம்சம், 100% பாதுகாப்பைத் தருகிறது.

இல்லத்தரசிகளுக்கு என்றும் பிரியமான பிரீமியர் பிரஷர் ஸ்டவ், உங்கள் சமையலறையை அலங்கரிக்கட்டும்! என்றென்றும்!

100% பாதுகாப்பான பிரஷர் ஸ்டவ்

சிறப்பம்சமான
சேஃப்டிவால்வ்





FITTED WITH
ISI
BURNERS

Premier

பிரீமியர் பிரஷர் ஸ்டவ்

தயாரிப்பாளர்கள்

பிரீமியர் இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன்

84-ஏ, விநாயகர் தெரு, சிவானந்தா காலனி, கோயமுத்தூர் - 641 012. போன் : (அலுவலகம்) 45833, (பேக்டரி) 48199

விரைவான சமையல்! நிறைவான சேவை!

டீலர்களின் வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.

SASI/21/92

நீங்கள் கேட்டவை - தராசு

● சுபாஷிணி, திருவெண்ணெய்நல்லூர்.

? இன்று பெண்ணின் அழகைப் பார்ப்பதை விட வரதட்சணையின் அளவைப் பார்ப்பவர் அதிகம் ஆனதற்குக் காரணம் யார்?

! உங்கள் கருத்து என்னவோ தெரியாது. வரதட்சிணைக் குறைவு என்று ஒரு பெண்ணை நிராகரிப்பதற்கும் அழகு மட்டு என்று ஒரு பெண்ணை நிராகரிப்பதற்கும் அதிக வித்தியாசம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இரண்டுமே கொடுமை தான்.

● பி. செல்வராஜ், திருவெண்ணெய் நல்லூர்.

? ஆணா பெண்ணா எனக் கருவில் அறியும் சோதனை முறையைத் தடுக்க அரசு செவி சாய்க்குமா?

! அதைத் தடுப்பதை விட அபார்ஷனுக்குத் தடை விதிப்பதே சிறந்தது. (மருத்துவ ரீதியான காரணம் இருந்தாலொழிய.)

● எம். அருணாசலம், கோனாப்பட்டு.

? ஆண்டுதோறும் வறட்சி, வெள்ளச் சேதங்களுக்கு இந்திய அரசு சுமார் ஆயிரம் கோடி செலவழிக்கிறது. இதையும் இன்னும் பல வீண் செலவுகளையும் சேர்த்துப் போட்டு, கங்கை - காவிரி திட்டத்தை நிறைவேற்றியிருந்தால்...?

! பல லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு, மற்றும் நாட்டின் பொருளாதாரச் செழிப்பு எல்லாம் ஏற்பட்டிருக்கும் என்பதுடன் இந்திய மக்களின் உணர்வுபூர்வமான ஒருமைப்பாட்டுக்கும் வழிவகுத்திருக்கும். ஹூம், என்ன செய்ய... இழந்த வாய்ப்புக்கள் திரும்பி வரவா செய்யும்!

● பி. ஆர். மயிலப்பன், ஈரோடு.

? பட்ஜெட்டில் எந்த விலையையும் ஏற்றாமல் இருக்கத்தானே இப்போதே எல்லா விலைகளையும் ஏற்றி விட்டார்கள்?

! சரியாப் போச்சு. பட்ஜெட் வெளியாகும் தினத்தையொட்டி நாளிதழ் பார்க்கு முன் - அல்லது டீவி செய்தி கேட்கு முன் -அவசியம் சோடா வாங்கித் தயாராய் வைத்துக் கொள்ளுங்கள்!

● ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர். ☐

? முதல்வர் ஜெ ஆட்சியில் ''ஆழாக்கு அரிசி அன்னதானம்; அதற்கு ஆயிரம் ரூபாய் செலவில் கெட்டிமேளம்'' என்ற பழமொழி புத்துயிர் பெற்று இருக்கிறதே?

! பழமொழி ரொம்ப சரி, ஆனால் புத்துயிர் பெற்றதாகக் கூறுவதற்கில்லை. ஏற்கெனவே பல முதல்வர்களுக்கு இருந்த ஒரு பப்ளிசிடி மோகம், இன்று பூதாகர வடிவம் எடுத்து விட்டது.

● ஏ. பி. தங்கவேலு, ஒசூர்.

? 'விடுதலைப் புலிகளைத் தீவிரமாக ஆதரிப்பேன்' என்கிறாரே டாக்டர் ராமதாஸ்?

! பண்ருட்டியாரின் பாதிப்பு.

● பாலசுப்பிரமணியன், சென்னை - 52.

? அ. தி. மு. க. - காங்கிரஸ் - அறிக்கைப் போர் சூடு பறக்கிறதே?

! காங்கிரஸ் கோஷ்டிகளுக்கிடையேயான அறிக்கைப் போருடன் ஒப்பிட 'ஜில்' லென்றாகி விடுகிறதே!

● கு. குருமுருகு, சிதம்பரம்.

? 'தி.மு.க. ஒரு வெடிக் கிடங்கு' என்கிறாரே வை. கோபால்சாமி?

► கடத்தல் முயற்சி!



பரிதி இளம் வழுதியைக் கடத்த நடந்த முயற்சி தோற்றது!..

! 'ஜெ' இருக்கும் வரை வெங்காய வெடிக் கிடங்குதான்.

● இரா. வசந்தகுமார், சீர்காழி.

? இப்படியே விலைவாசி ஏறிக் கொண்டு போனால் பிறகு 'ஜெ'யின் ஓராண்டு ஆட்சிக் காலச் சாதனையாக எதைக் குறிப்பிடுவதாம்?



► வெடிக்கிடங்கு...

☛ பப்ளிசிட்டி மோகம்!



! ஏன், எட்டு மாதத்தில் 12 துப்பாக்கிச் சூடுகள் சாதனை இருக்கே!

● மு. அய்யூப்கான், சத்திரம் கருப்பூர்.

? தி. மு. க. எம். எல். ஏ. பரிதி இளம்வழுதியைக் கடத்த நடந்த முயற்சி குறித்து?

! என்னமோ இவரை அ. தி. மு. க. வுக்கு இழுக்க முயற்சி நடந்ததாகவும் அதற்காக அமைச்சர் பதவி தருவதாக ஆசை காட்டிய தாகவும் எல்லாம் கூறுவது, காதுல பூ சமாச்சாரமாக இருக்கிறது. அபரிமித மெஜாரிட்டி உள்ள 'ஜெ' கட்சிக்கு இவரை இழுக்க அவசியம் என்ன நேர்ந்தது? அப்படியே நாஞ்சில் அப்பு அசட்டுத்தனமாக அத்தகைய முயற்சியில் ஈடுபட்டிருந்தாலும் அதற்காக அப்புவை ரத்தம் சொட்டும் அளவுக்கு அடித்திருப்பது நாகரிகமல்ல.



● எஸ். இராஜசேகரன், கொளப்பாடு.

? 'ஜெயலலிதா தமிழகத்தின் மகாத்மா' என்கிறாரே, இந்திர குமாரி?

! 'இந்திர குமாரிதான் தமிழகத்தின் இந்திரா காந்தி' என்று சொல்லாமல் விட்டாரே, அந்த மட்டில் நன்றி செலுத்துங்கள்!

● வீ. ஜெயபால், தாராசுரம்.

? பல்டி அடிப்பதில் இந்தியர் ஒருவர் கின்னஸ் சாதனை புரிந்திருக்கிறாராமே?

! ஏன் கூடாதா? அது என்ன நம் அரசியல்வாதிகளின் ஏகபோக உரிமையா?

● லீலா ராம், தக்கலை.

? அரிசி விலை குறையும் என்று அமைச்சர் நம்புகிறார்... நீங்கள்?

! 'நம்புகிறார்' என்று எப்படி சொல்கிறீர்கள்? அறிக்கை விட்டிருக்கிறார். அவ்வளவு தானே!

● மஞ்சுதேவன், கல்கத்தா.

? 'ஹோம் அலோன்' பொடியனின் நடிப்பு பற்றி?

☛ அழைப்பு இல்லை!



☛ நன்றி! நன்றி!

! காரம், மணம், குணம் நிறைந்தது. இருந்தாலும் அந்தக் கிழவனின் தனிமையை உணர்ந்து கொள்ள இவனுக்கு ஒரு வாய்ப்புக் கிட்ட, கிழவனைக் குடும்பத்தினருடன் இணைத்து வைத்த அழகு இருக்கே, அதுதான் சராசரிப் படத்தை, சிகரத்தை நோக்கி உயர்த்துகிறது.

● த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? சட்டசபையில் எம். ஜி. ஆர். படத் திறப்பு விழாவுக்கு ஜானகி அம்மையாருக்கு அழைப்பு இல்லையாமே?

! 'ஜெ' பெருந்தன்மை இழந்து நின்ற இன்னொரு சந்தர்ப்பம்.

● கே. ரமேஷ் பாபு, சேலம்.

? ரஜினிகாந்துக்கு டாக்டர் பட்டம் கிடைக்குமா?

! முதல்வரான மறுதினம்!

☛ டாக்டர் பட்டம்?





☐ ரூ 25 பரிசு பெறுபவர்:
ஆர். சுப்பாராவ்,
94, கீழ வீதி,
திருக்கோவலூர் - 605 757.

☛ பண்ருட்டி பாதிப்பு!

"நெஞ்சம் மறப்பதில்லை" ஒரு "சித்ராலயா" தயாரிப்பு அல்ல. நான் தட்ட முடியாமல் ஒப்புக் கொண்ட வேறு நிறுவனப் படம். என் ஆரம்பகாலத் திரை வாழ்க்கையில் ஜுபிடர் நிறுவனத்துக்கு முக்கிய பங்கு உண்டு. அவர்களுக்காகத் தான் "எதிர்பாராதது" எழுதினேன். அந்த நிறுவனத்தின் ஸ்தாபகர் சோமுவின் மறைவுக்குப் பின், அவர் மகன் காசியப்பா என்னை அணுகினார். ஒரு நெருக்கடியில் இருந்த நண்பரின் வேண்டுகோளைப் புறக்கணிக்க என்னால் முடியவில்லை. ஒப்புக் கொண்டேன். ஆனால் இப்போது காசியப்பாவுக்கே என்னிடம் சற்று அலுப்பு ஏற்பட்டுப் போனது என்றுதான் சொல்ல வேண்டும்!

"எதற்கு ஸ்ரீதர் காலம் கடத்துகிறீர்கள்? நூற்றுக்கணக்கான டியூன்கள் போட்டுக் காட்டி விட்டார் விஸ்வநாதன். எல்லாம் நன்றாகவே இருந்தன. ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்கக் கூடாதா?" என்றார்.

'ஏறத்தாழப் படமே முடியும் தருவாய்க்கு வந்து விட்ட பிறகும், அந்த ஹாண்டிங் டியூனுக்காக இன்னும் எத்தனை நாள் காத்திருப்பது' என்று என்னை நானே கேட்டுக் கொள்ள ஆரம்பித்திருந்த சமயம், தயாரிப்பாளர் காசியப்பா இப்படி கேள்வி எழுப்பியதில் வியப்பில்லைதானே! 'பேசாமல், "ஹாண்டிங் டியூன்" ஐடியாவையே விட்டு விட்டு, வேறு ஏதாவது யோசிக்கலாமா?' என்ற நிலைக்குக் கூட நான் வந்து விட்டேன். ஆனால் எம். எஸ். வி. நம்பிக்கை இழக்கவில்லை! "உங்களுக்கு முழுத் திருப்தி ஏற்படும் வரை ஓய மாட்டேன்" என்றார். புதுப்புது டியூன்கள் அவர் இதய வீணையில் பிறந்து கொண்டே இருந்தன. விரல்கள் ஆர்மோனிய ஒலியை எழுப்பிய வண்ணமாய் இருந்தன.

ஒருநாள் காலை விஸ்வநாதன் சொன்னார் : "ஸ்ரீதர்! இப்ப என் மனசில் ஒரு டியூன் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கிறது. இதற்காகத்தான் நாம் ஆறு மாதமாகக் காத்துக் கொண்டிருந்தோம்!"

அந்தத் தன்னம்பிக்கையே என் சோர்வை அகற்றியது. "எங்கே வாசிங்க, கேட்கறேன்" என்று விரிப்பில் அமர்ந்தேன். கண்களை மூடியபடி ஆர்மோனியத்தைத் தடவியவாறு சற்று நேரம் இருந்தார் விஸ்வநாதன். எனக்கு ஸஸ்பென்ஸ் அதிகரித்தது.

தொண்டையைக் கனைத்துக் கொண்டார்; வாய் விட்டு டியூனைச் சொல்லிக் கொண்டே வாசித்துக் காட்டினார். எனக்கு மெய்சிலிர்த்தது... டியூன் வாசித்து முடிந்ததும்,

"சூப்பர்! சூப்பர்!" என்று வாழ்த்தியபடியே விசுவநாதனைக் கட்டி அணைத்துக் கொண்டேன்.

என் எதிர்பார்ப்புக்கு மேலேயே ஹாண்டிங் எஃபெக்டும் அமையப் பெற்று, மிக இனிமையாகவும் ஒலித்த அந்த டியூனுக்கு எழுதப்பட்ட பாடல்தான் : "நெஞ்சம் மறப்பதில்லை!" அந்தப் படத்தைப் பார்த்தவர்களின் நெஞ்சம் மறக்க முடியாத டியூனில் மறக்க முடியாத பாடலாக அமைந்தது, அது!

படம் பார்ப்பவர்கள், ஸ்ரீதர் பகுத்தறிவுக்குப் பொருந்தாத, நம்ப முடியாத கதைகளையெல்லாம் படம் பிடிக்க ஆரம்பித்து விட்டார் என்று எண்ணி விடக் கூடாதே என்ற கவலையும் எனக்குச் சிறிது இருந்தது. அதனால் "நெஞ்சம் மறப்பதில்லை" படத்தின் ஆரம்பத்தில், ஹிந்து பத்திரிகையில் வெளியான செய்தியைக் காட்டி, "இந்தப் படம் முழுவதும் கற்பனையல்ல; அண்மையில் நடந்த ஓர் உண்மைச் சம்பவத்தின் அடிப்படையில் உருவான கதைதான்" என்று நான் பேசவும் செய்தேன்! படம் வெற்றிகரமாகவே ஓடிற்று.

ஜெயகாந்தனுடைய 'யாருக்காக அழுதான்' கதையை ஜி. என். வேலுமணி திரைப்படமாக எடுக்கத் திட்டமிட்டார். என்னை அணுகி, "நீங்கதான் டைரக்ட் செய்து தரணும்" என்றார். கதையைப் படித்துப் பார்த்தேன். ரொம்பப் பிடித்திருந்தது. ஒப்புக் கொண்டேன்.

சிவாஜியும் சாவித்திரியும் நடிக்க வேண்டும் என்று விரும்பினார் வேலுமணி. அவர்களை அணுகிச் சம்மதம் பெற்றோம். டிரீட்மெண்ட் எழுதி முடித்தேன். படப்பிடிப்பும் தொடங்கியது.

ஆறுமாதம் காக்க வைத்த அருமையான 'டியூன்'!

ஒரு ஷெட்யூல் முடிந்ததும் நானும் சிவாஜியும் படத்தின் 'ரஷ்' போட்டுப் பார்த்தோம். பின்னர் இருவரும் ஒரே காரில் வீடு திரும்பினோம். வழியில் சிவாஜியிடம் நான் ஒரு கருத்தை வெளிவிட்டேன் : ''ரஷ் பார்த்த பிறகுதான் தெரிகிறது; படத்தில் உங்க சிகை அலங்காரம் திருப்தியாய் அமையவில்லை. கேரக்டருக்குப் பொருந்தவில்லை. அதில் சில மாற்றங்கள் செய்தால் நல்ல கெட்-அப் கிடைக்கும். ஒரு ஷெட்யூல் முடிந்து விட்டாலும் பாதகமில்லை. ஹேர் ஸ்டைல் மாற்றி உங்கள் சம்பந்தப்பட்ட காட்சிகளை மட்டும் ரி-ஷூட் பண்ணி விடலாம். பிரமாதமாக அமையும்....''

சிவாஜி பதில் ஏதும் கூறா விட்டாலும் என் கருத்தை ஆமோதிப்பவர் போல் தலையசைத்தார்.

இது நடந்த சில நாட்களில் நான் 'நெஞ்சம் மறப்பதில்லை' படத்தின் ஷூட்டிங் ஷெட்யூலுக்காகத் திருப்பூர் சென்று விட்டேன். சென்னை திரும்பி வந்த மறுதினம் வேலுமணி என்னிடம், ''நான், 'யாருக்காக அழுதான்' படத்தை எடுக்கும் திட்டத்தைக் கைவிடுவதாக இருக்கிறேன்'' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

''ஏன்? ஏன்?'' என்று நான் திடுக்கிட்டுக் கேட்டேன்.

''சிவாஜிக்கு விக் சரியில்லைன்னு சொல் விட்டீங்களாம். அதிலே அவருக்கு மனவருத்தம். படம் பண்ண வேண்டாம்னு நெனைக்கிறார்...'' என்றார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை.

'சிவாஜியின் சிகை அலங்காரம் கேரக்டருக்குப் பொருத்தமாய் இன்னும் சிறப்பாக அமைய முடியும்' என்று நான் தெரிவித்ததை அவர் எப்படி தவறாகப் புரிந்து கொண்டார்?

இன்றுவரை எனக்கு அது மர்மமாகவே இருக்கிறது. இத்தனைக்கும் அது சிவாஜிக்கும் எனக்கும் இடையே நேரடியாக நடந்த பேச்சு. மூன்றாவது மனிதர் ஏதோ திரித்துக் கூறி விட்டார் என்று சொல்வதற்கில்லை. இந்த விஷயத்தை மேலும் கிளறாமல் அப்படியே விட்டு விட்டேன்.

என் குணம் அப்படி. அடுத்தவர் மனம் புண்படும்படி நான் நடந்து கொண்டிருந்தால் வருத்தம் தெரிவிக்கச் சிறிதும் தயங்க மாட்டேன். ஆனால் என் மீது தவறு ஏதும் இல்லாத போது, வலியச் சென்று, தன்னிலை விளக்கம் தருவது எனக்கு உடன்பாடில்லாத விஷயம்.

சிவாஜியும் நானும் அந்தச் சம்பவத்துக்கு முன்னும் பின்னும் இன்றுவரை நெருங்கிய நண்பர்களே. ஆனால் இன்று வரை நாங்கள் ஒரு தடவை கூட அந்தச் சம்பவம் பற்றிப் பேசியது கிடையாது. அந்தச் சம்பவம் அன்றோடு முடிந்து போயிற்று. அவ்வளவுதான்!

''நெஞ்சம் மறப்பதில்லை''யைத் தொடர்ந்து 'சித்ராலயா' பானருக்குச் சொந்தப் படம் எடுக்கத் தீர்மானித்தோம். உடனடியாக டைட்டில் மனதில் உதயமாயிற்று. ''காதலிக்க நேரமில்லை!'' கதை என்ன? நடிகர்கள் யார்? ஒன்றும் தெரியாது! தலைப்பு மட்டும் முத்திரைக் கொட்டையாகத் துருத்திக் கொண்டு நின்றது! இதைவிடவும் பெரிய அதிசயம் ஒன்று என்னவென்றால், ஒருவழியாகக் கதை உருவாகி, ஒரு ஷெட்யூல் ஷூட்டிங்கும் முடிந்த பிறகு, நான் பார்ட்னர்களை அழைத்து, ''படத்தை மேலும் தொடராமல் இத்துடன் நிறுத்தி விடலாம்'' என்று சொன்னதுதான்! ஏன் என்று கேட்கிறீர்களா? அடுத்த வாரம் சொல்கிறேனே!



நெஞ்சம் மறப்பதில்லை படத்தில் ஒரு காட்சி

படம் உதவி :

பிலிம் நியூஸ் ஆனந்தன்

டைரக்டர் ஸ்ரீதர்

வீட்டு வேலை

கோபி, தங்கை யமுனாவை ரயிலேற்றி விட ஸ்டேஷனுக்கு வந்திருந்தான். ரயில் அரைமணி நேரம் தாமதமாக வருவதாக அறிவிக்கப்பட்டதால், பிளாட்பாரத்து ஓரமாகப் போடப்பட்டிருந்த பெஞ்சில் இருவரும் உட்கார்ந்தார்கள்.

''கோபி... நான் ஒன்று சொன்னால் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டாயே...'' எனத் தொடங்கினாள் யமுனா.

''என்னிடம் பேச என்ன தயக்கம்... சொல்லேன்!'' என்றான் கோபி.

''நானும் இந்தப் பத்து நாட்களாகக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். சித்ரா தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருக்கிறாளே தவிர, அம்மாவுக்கு உதவியாக ஒரு துரும்பு கூட எடுத்துப் போடுவதில்லை.''

கோபி பதிலே பேசவில்லை.

''பார்த்தாயா! நான் சொன்னதைத் தப்பாக எடுத்துக் கொண்டு விட்டாய்...'' எனக் குறைப்பட்டுக் கொண்டாள் யமுனா.

''தப்பாக இல்லை யமுனா... எனக்கு இத்தனை நாள் தெரியாமல் போய் விட்டதே என்றுதான் யோசிக்கிறேன்.''

''நீ வீட்டுக்குப் போனவுடன் சித்ராவிடம் இதைப் பற்றி ஒன்றும் கேட்காதே... அனாவசியமாக எங்களுக்குள் மனத்தாங்கல் வரும். நீயே இரண்டு நாள் கவனி. உனக்கே தெரியவரும்.''

மறுநாள் இரவு.

''சித்ரா...'' என அழைத்தான் கோபி.

''உம்...''

''இப்போதெல்லாம் வேலைக்குப் போற பொண்ணு ஒண்ணும் அபூர்வம் இல்லை. எல்லா வீட்டிலேயும் இருக்கா. வேலைக்குப் போறதுக்கு முந்தியும் அத்தனை வேலையும் வீட்டிலே செய்யறா. சாயங்காலம் திரும்பி வந்ததும் ஒய்ந்து போய் உட்கார்ந்துடறதில்லே. மறுபடியும் தன் வீடுங்கற நெனைப்பிலே எல்லா வேலையும் அவாளே செய்யறா. துணைக்கு, உதவிக்குன்னு யாரையும் தேடறதில்லே.''

''எதுக்குச் சுத்தி வளைச்சுப் பேசறேள்...? நான் வீட்டு வேலை எதையும் செய்யறதில்லேன்னுதானே சொல்லிக் காட்டறீங்க?''

''நோ. நோ. உன்னை நான் குற்றம் சொல்லலே. என் மனசிலே பட்டதைச் சொன்னேன். நான் சொன்னதை நீயே யோசித்துப் பாரு. உனக்கே சரின்னு தோணும்!''

மறுநாள் காலை ஆறு மணி.

வழக்கம் போல் கண்களைத் திறக்காமல் பக்கத்துப் படுக்கையைத் துழாவினான். காலியாக இருந்தது.

சித்ரா என்ன இருந்தாலும் புத்திசாலி. ஒரு கோடி காட்டியதும் சட் என்று புரிந்து கொண்டு விட்டாளே.

அறைவாசலில் சித்ரா. தலைக்குக் குளித்து விட்டு ஈரம் போகத் துண்டைச் சுற்றிக் கொண்டு, நெற்றியில் குங்குமத்துடன் ''பளிச்'' என நின்று கொண்டிருந்தாள்.

''எழுந்திருங்கள்... காப்பி ரெடி.''

அறையை விட்டு வெளியே வந்த கோபி, அம்மா பூஜையறையில் உட்கார்ந்து ஏதோ படித்துக் கொண்டிருப்பதைக் கவனித்தான்.

கோபி பல்லைத் தேய்த்து விட்டுக் காப்பி குடித்து முடித்த பிறகு, கையில் பேப்பருடன் உட்கார்ந்தான்.

பேப்பரில் தலைப்புச் செய்திகளைப் படித்து முடித்தான்.

பாத்ரூமில் ஷேவிங் செட், வெந்நீர், டெட்டால் எதையுமே காணோம். சித்ராவிற்கு என்ன ஆயிற்று?

''சித்ரா, ஷேவிங் செட்.''

''ப்ளீஸ்.. கொஞ்சம் நீங்களே எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். நான் அரிசி களைந்து கொண்டிருக்கிறேன். அடுப்பில் உலை கொதிக்கிறது.''

சித்ரா உள்ளேயிருந்து குரல் கொடுத்தாள்.

''அப்படியே உங்கள் துணிகளைக் கொஞ்சம் கசக்கி உலர்த்தி விடுங்கள். நான் பகல் டிபன் எடுத்து வைத்துக் கொண்டு இருக்கிறேன்.''

குளித்து விட்டுத் தோய்த்ததால் உடம்பெல்லாம் வியர்வை எடுத்தது. குளித்து விட்டு வந்த புத்துணர்வு அறவே இல்லை.

எப்படியோ இரண்டு பேரும் ஆபீஸிற்குப் புறப்பட்டார்கள்.

சித்ரா அவனிடம் ஒரு ஜாபிதாவைக் கொடுத்தாள்.

''டவுன் ஹால் ரோட்டில் கண்டி கலைமகள் ஸ்டோர்ஸுக்கு எதிரில் உள்ள வெண்ணெய்க் கடையில் அரைக் கிலோ வெண்ணெய் வாங்கிக் கொள்ளுங்கள். அம்மன் சந்நிதியில் மீனாட்சி அப்பளம் ஸ்டோர்ஸில் மிளகு அப்பளம் என்று கேட்டு ஒரு பாக்கெட் வாங்கிக் கொள்ளுங்கள். அப்படியே ஆர்ய வைத்திய சாலையில் அம்மா மூட்டு வலிக்குத்

அன்னம்



தைலம்....''

''என்னால இதெல்லாம் முடியாது. ஆபீஸ் வேலை முடிந்தால் எப்படா வீடு வந்து சேரலாம் என அடித்துப் போட்டது போல் இருக்கும். நான் அலைய மாட்டேன்.''

''வேறே யார் செய்வார்கள்? ஆபீஸ் முடிந்தவுடன் வீடு திரும்பினால்தானே ராத்திரி சமையலை ஆரம்பிக்க முடியும்! நாளைக்கு டிபனுக்கு மாவு அரைக்க வேண்டும்! துணிகளை மடித்து வைத்து இஸ்திரி போட்டு வைக்க வேண்டும்...''

கோபி அன்று வீடு திரும்பும் போது மணி ஒன்பது. வீடு திரும்பியவனுக்கு ஏக எரிச்சல்.

அவன் தாய் நாற்காலியில் உட்கார்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருக்க, சித்ரா உள்ளே ஏதோ வேலையாக இருந்தாள்.

''சித்ரா... சித்ரா'' என அழைத்தான்.

''காலை அலம்பிக் கொண்டு வாருங்கள். சமையல்கட்டில் கீழே உட்கார்ந்து சாப்பிட்டு விடலாம். எனக்கும் எடுத்துப் போட வசதியாக இருக்கும்.

''இன்றைக்கு உனக்கு என்ன ஆயிற்று சித்ரா. காலையிலிருந்து என்னையே ஏவிக் கொண்டிருக்கிறாய்?''

''என்னப்பா பண்ணறது? என்னை நகரக் கூடாதுன்னு உத்தரவு போட்டுட்டுத் தானே எல்லாம் செய்யறா! எதுக்கு நீ இப்போ அலுத்துக்கறே?''

தன் அறைக்குத் திரும்பிய கோபிக்குத் தலை சுற்றியது.

''இதோ பாருடா கோபி... ஒரு வீட்டில் சமைப்பது பெரிய வேலையாகத் தெரிகிறது. ஏன்னா சாப்பாடு முக்கியம்கிறதுனாலே. வருடக்கணக்கா சமைக்கிறவாளுக்கு இந்தக் காலத்திலே நின்ன இடத்திலே ஏற்றி, இறக்கிச் சமைக்கிறது பெரிய காரியம் இல்லை. அதைத் தவிர வீட்டுலே எத்தனை சுற்றுக் காரியம் இருக்கு! வெளி வேலை எத்தனை இருக்கு! அதைப் பார்க்கறதுதான் சிரமம். உன்னைச் சொல்லிக் குத்தம் இல்லே. எத்தனையோ வீட்டுலே பெரியவர்களுக்கே இது தெரியறதில்லே. தான் ஏதோ பெரிதாகக் கஷ்டப்படறாப் போலே மாஞ்சு போறா. குடும்பம்னா ஒருத்தருக்கொருத்தர் அனுசரணையாப் போறதுதான் பெரிசு. நீயா, நானா எனப் போட்டி போடறது இல்லே. நேற்று வரைக்கும் சித்ரா சும்மா இருக்கறதாத்தானே நெனைச்சே... இப்போ புரியறதா எத்தனை வேலை செய்யறான்னு... உன் சௌகரியத்தைக் கவனிக்கிறதே பெரிய வேலைடா அவளுக்கு.''

''உம்'' என ஒப்புக் கொண்டான் கோபி.

மறுநாள் காலை சமையலறையிலிருந்து காப்பிப் பொடியில் சுடுநீர் ஊற்றும் மணம் நாசியை வந்து வருடியது.

அம்மாதான்!

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

கல்கி மார்ச் 1, 1942

பிறவிக் கலைஞர்

இக்காலத்தில் நடனக் கலைஞர்கள் அநேகர் தோன்றியிருக்கிறார்கள். அவர்களுக்கும் உதய சங்கருக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. மற்றவர்கள் நடனக் கலையைப் பயின்று கலைஞர்கள் ஆகிறார்கள். ஆனால் உதயசங்கரை நடனக் கலையே தேடிச் சென்று அடைந்திருக்கிறது. குயிலுக்கு இசை எப்படி இயற்கையோ, அப்படியே உதய சங்கருக்கு நடனக் கலை இயற்கையாகும்.



இப்படிப் பிறவியிலேயே நடனக் கலைஞராயிருக்கிறபடியால்தான் உதய சங்கருடைய நடனத்தை நமது பாரத தேசத்திலே மட்டுமன்றி அமெரிக்கா முதலிய மேனாடுகளிலும் பார்த்தவர்களெல்லாம் போற்றுகிறார்கள்.

நடனம் ஆடிப் பணம் சம்பாதிப்பதுடன் உதயசங்கருடைய கலைப் பிரேமை நின்று விடவில்லை. வெண்பனி சூழ்ந்த இமயமலையின் அடிவாரத்தில் அல்மோரா என்னுமிடத்தில் அவர் ஒரு கலைஞான க்ஷேத்திரத்தை ஏற்படுத்திச் சிறப்பாக நடத்தி வருகிறார்.

உதய சங்கருக்கு நாளது மார்ச் மீ 8உ யன்று திருமணம் நடக்கும் செய்தி அறிந்து கலைப்பிரியர்கள் எல்லாம் தத்தமக்கே கல்யாணம் வருவது போல் மகிழ்ச்சியடைவார்கள். மணப்பெண், உதய சங்கரின் நடன கோஷ்டியைச் சேர்ந்தவரான ஸ்ரீமதி அமலா நந்தி பி.ஏ. தமிழ் மக்களின் சார்பாக இந்த நடன கலைத் தம்பதிகளுக்கு வாழ்த்துக் கூறுகிறோம்.

- அட்டைப் பட விளக்கம்

பதவி ஏற்பு

புதிதாக மந்திரி சபையில் பதவி ஏற்றவர்களில் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் முக்கியமானவர். யுத்தத்துக்கு முன்னால் இவர் இங்கிலாந்தில் எல்லா அரசியல் கட்சிகளாலும் ஒதுக்கப்பட்டிருந்தார். ருஷியாவுடன் பிரிட்டன் சிநேகமாயிருக்க வேண்டுமென்றும், இந்தியாவுக்கு சுயராஜ்யம் கொடுக்க வேண்டுமென்றும் இவர் வற்புறுத்தியது ஒருவருக்கும் பிடிக்கவில்லை. யுத்தத்தின் கடுமை அதிகமாக ஆக, இவருடைய உதவி பிரிட்டிஷ் மந்திரி சபைக்குத் தேவையாயிருந்தது. ருஷியாவுக்கு இவரைத் தூதராக அனுப்பினார்கள். இவருடைய முயற்சியினால்தான் பிரிட்டனும் ருசியாவும் யுத்தத்தில் ஒத்துழைத்து ஜெர்மனியுடன் போரிடுவது சாத்தியமாயிற்று. ருஷியாவில் தமது வேலை முடிந்து விட்டதென்று இங்கிலாந்துக்குத் திரும்பினார்; திரும்பியதும் பிரிட்டிஷ் யுத்த முயற்சிகள் தூங்கி விழுவது பற்றிக் காரசாரமாய்ப் பேசியதுடன், ''இந்தியர்களின் ஒத்துழைப்பை யுத்த முயற்சிக்குப் பெற வேண்டும்'' என்றும் வற்புறுத்தினார். ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் வெகு திறமைசாலி என்றும், ''வருங்கால பிரதம மந்திரி'' என்றும் சில பிரிட்டிஷ் பத்திரிகைகள் அவரைப் புகழ்ந்தன.

இப்போது அவருக்கு யுத்த மந்திரி சபையில் பதவி அளிக்கப்பட்டிருக்கிறது.

- என்ன சேதி

திருச்சி ரேடியோ


சென்னை ரேடியோவில் நடக்கும் கச்சேரிகளில் பலவற்றை, இப்போது திருச்சியில் அஞ்சல் செய்கிறார்கள்.


சென்னை ரேடியோ பல பாஷைக்காரர்களுக்குப் பொதுவாக இப்போது நடந்து வருகிறது. தமிழ் ஸாஹித்யங்களுக்குப் பிரதான்யம் கொடுக்கும்படி சென்னை ரேடியோவை இப்போதைக்குக் கேட்க முடியாது. திருச்சி ரேடியோதான் இதைச் செய்ய வேண்டும். சென்னைக் கச்சேரிகளை அஞ்சல் செய்யும் முறை இதற்குப் பெரும் இடைஞ்சலாகும்.

திருச்சி நிலையத்துக்கென்றே கச்சேரிகளை ஏற்படுத்தினால்தான், தமிழ் ஸாஹித்யங்களுக்கு முக்கியம் கொடுத்துக் கச்சேரிகளை அமைக்க முடியும்.

- கர்நாடகம்

அம்பியின் வேலை!





- பாப்பா மலர்

எதற்கடா பணம்?

கிச்சுவுக்கு நாவல்கள் படிப்பதில் ரொம்பவும் ருசி. ஒருநாள் அவன் அப்பா விடம் ''எனக்கு நாலணா பணம் கொடு'' என்று கேட்டான்.



தகப்பனார் : எதற்கடா பணம்?

கிச்சு : பள்ளிக் கூடத்துக்குப் போகும் வழியில் என்னை ஒரு திருடன் பிடித்துக் கொள்கிறான் என்று வைத்துக் கொள். 'சட்டைப் பையிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுக்கிறாயா, அல்லது உயிரைக் கொடுக்கிறாயா?' என்று திருடன் கேட்டால் நான் பணம் இல்லாமல் என்ன செய்வது அப்பா?

- *காலக்ஷேபம்*

இவரும் புலிதான்!

சிறையில் ஒரு கவலையுமில்லாமல் மன நிம்மதியுடன் வாழ்ந்தவர்களில் தின மணி ஆசிரியர் ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் ஒருவர். அவர் சிறையில் கஷ்டப்படவே யில்லை என்று நான் சொல்லவில்லை. ஒரே ஒரு விஷயத்தில் ரொம்பவும் கஷ்டப்பட்டார். அதாவது ஹிந்தி பாஷை கற்றுக் கொள்வதில்! நான் போன அன்றைக்கு அவர் தம்முடைய பிளாக்குக்கு எதிரில் புளியமரத்தடியில் உட்கார்ந்து ஒரு ஹிந்தி பாலசிட்சைப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். மூன்று மாதங்கழித்து நான் புறப்பட்ட போதும் அதே புத்தகந்தான் அவர் கையிலிருந்தது! ''புதிய பாஷை கற்றுக் கொள்வதில் நம்மைப் போல் இவரும் புலிதான்'' என்று தெரிந்து கொண்டதில் எனக்கு ரொம்பவும் திருப்தி ஏற்பட்டது.



- *ரா. கி.*

- *மூன்று மாதம் கடுங்காவல்*

நான் வீட்டில் இல்லை!



''மணி அய்யர் உங்களை டெலிபோனில் கூப்பிடுகிறார்.''

''நான் வீட்டில் இல்லை, 'கிளப்'புக்குப் போய் அரை மணியாகி விட்டது என்று சொல்லு!''

''அவர் 'கிளப்'பிலிருந்துதான் கூப்பிடுகிறார்!''

டிப்ஸ்... டிப்ஸ்... டிப்ஸ்... டிப்ஸ்...

நாள் முழுவதும் சுறுசுறுப்பாய் இயங்க...

1. காலையில் வெறும் வயிற்றோடு அரை மணி நேரம் உடற்பயிற்சி அல்லது தியானம்.

2. காலை உணவுடன் ஆரஞ்சு ஜூஸ். கட்டுப்படியாகாது எனில் கொஞ்சம் எலுமிச்சை ஜூஸ்.

3. தேநீர், காப்பி, புகைபிடித்தல் இவற்றைத் தவிர்க்கவும்; அல்லது குறைக்கவும். இவை சுறுசுறுப்பு ஊட்டுவது தாற்காலிகமாகவே. பிறகு சோர்வே அதிகரிக்கும்.



4. மதிய உணவுக்குப் பிறகு பத்து நிமிடக் குட்டித் தூக்கம் உதவும். ஆனால் ''ஆபீஸில் தூங்கறான்'' என்று கெட்ட பெயர் வந்து விடலாம்? ஜாக்கிரதை!

5. மாலை அரை மணி நேர விளையாட்டு, உடலுக்கும் உள்ளத்துக்கும் உற்சாகம் தரும்.

6. இரவு உணவுக்குப் பிறகு ''வாக்கிங்'' நல்ல தூக்கத்துக்கு உதவும்.

7. எல்லாவற்றையும் விட முக்கியம் சிரிக்கப் பழகுங்கள். புத்துணர்ச்சியுடன் விளங்க மற்ற எல்லாவற்றையும் விட அதிகமாக உதவுவது சிரிப்பே.

- பின்னையூர், மா. ஜெயராமன்.

சேமிப்புத் திலகமாய் விளங்க...

1. மாதாந்திர பட்ஜெட் போடு முன்னரே ஒரு சிறு தொகையைச் சேமிப்பாக எடுத்து வைத்து விடவும்.

2. பட்ஜெட்டில் ''விருந்தினர் வந்தால் சமாளிக்க'' என்று ஒரு தொகையை ஒதுக்கலாம். ஒவ்வொரு மாதமும் விருந்தினர் வர மாட்டார்கள். அந்தத் தொகை மிச்சப் படும்.



3. டாக்டர், மளிகை, பால், காய்கறி என அவரவர் வருமானத்துக்கு ஏற்ப தொகைகளைத் தனித் தனியாக வைத்து விட்டால் 20 தேதிக்குப் பிறகு பட்ஜெட் உதைக்காது. டாக்டர் செலவு இல்லையெனில் சேமிப்பாகும்.

4. காய்கறியை அன்றாடம் வாங்காமல் வாரம் ஒருமுறை - இருமுறை என்று சந்தையில் மொத்தமாய் வாங்கினால் செலவு குறையும்.

5. விடுமுறையில் குழந்தைகள் பாட்டி வீடு, அத்தை வீடு என்று போகக் கூடும். அப்போது அவர்களுக்குச் செலவாகக் கூடிய பணம் மிச்சம்தானே என்று அதைக் கணக்கிட்டு சேமிப்பாக்கி விட்டால் ஒரு சமயத்துக்கு உதவும்.

6. வீட்டில் இஸ்திரி பெட்டி வைத்திருந்து நீங்களே வீட்டில் இஸ்திரி போடுகிறீர்களா, நல்லது. ஆனால் இதற்காகச் செலவாகியிருக்கக்கூடிய தொகை எவ்வளவு என்பதைக் கணக்கிட்டு அதைச் சேமித்து விட வேண்டும். நிச்சயமாகக் கரண்ட் செலவை விட அதிகமாகவே மிச்சமாகும்!

7. கேஸுக்காக மாதா மாதம் பட்ஜெட்டில் பணம் ஒதுக்குங்கள். ஆனால் ஸிலிண்டர் மாற்றாமல் 40 நாள் 45 நாள் வரை ஓட்டப் பாருங்கள். இதனால் கண்டிப்பாக ஆறு மாதத்துக்கு ஒருமுறையாவது கேஸ் பணமும் சேமிப்பாகி விடும்!

- பத்மா, ஸெஹோர் (ம.பி.)

பாதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 200/- விமானத் தபால்: ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka